விலை ரூ. 18/=

# தமிழ்கேசரி


வாரப் பத்திரிகை

தமிழ் பேசும் சமூகத்தின் தன்மான முழக்கம்!

இடி - 02 மார்ச் 16 - 22, 2003 முழக்கம் - 88

## சதிகளைத் தாண்ட வேண்டிய சமாதானம்





## அஷ்ரஃப் காங்கிரஸ் அவசியமா?

## கணவரை வசப்படுத்தும் வழிகள்

## இளைய கேசரி

புதிய பக்கம்





## மும்ஸ் நடிகையின் முதலிரவுகள்

## தியேட்டர்களில் திருடர்கள்

அதிரடி - அசத்தல் - ஆச்சரியம்

## சகுனம்

சகுனம் பார்த்து காரியங்களை செய்து வருபவர்கள் இன்னும் இருக்கின்றார்கள். "சகுனம்" என்பது இந்துமத புராண கதைகளில் பல உண்மைகளை எடுத்துக் கூறியுள்ளது.

கோவலன் சிலம்பு விற்கச் சென்ற போதும், 'பாண்டவர்கள் வனவாசம் செல்லப் புறப்படும் போதும் தீய சகுனங்கள் தோன்றியுள்ளன. பஞ்சாங்கத்தைப் பார்த்து நாம் ஒவ்வொரு நல்ல காரியங்களையும் செய்வது போல் சகுனமும் பார்த்து செய்வது நன்மையானதே. தீமையான சகுனம் நமக்கு தோன்றினால் அன்றைய நிகழ்வை நிறுத்தினால் நன்மை பயக்கும்.

சகுனம் என்பது தானாகவே நடக்க வேண்டும். நாமாகவே நல்ல சகுனத்தை உருவாக்கிக் கொள்ளுதல் கூடாது. இயற்கையாகவே அமையும் சகுனத்தின் நன்மை, தீமை அறிந்து செயற்படுவதே சிறப்பு. அபசகுனம் ஆகவே ஆகாது.

சிவஸ்ரீ அ. அரச ரெத்தினம்,
சேனையூர் - 06.

## தஸ்பீஹ்

ஒரு மு.'மினுடைய உள்ளத்திலும், நாவிலும் தினமும் உதிக்க வேண்டியது இறை தஸ்பீஹ் ஆகும். அல்லாஹ் அல்-குர்ஆனில், "நீங்கள் என்னை நினைவு கூறுங்கள். நான் உங்களை நினைவு கூறுவேன்"

எனக் குறிப்பிடுகிறான். இதன்படி நாம் அல்லாஹ்வுடன் நெருங்கும் போது அல்லாஹ் நம்மை நெருங்குவான் என்பது தெளிவாகின்றது. இது பற்றி நபி(ஸல்) அவர்கள்,

"இறைவனைத் துதிப்பவனுக்கும், துதியாதவனுக்கும் இடையே உள்ள வேறுபாடு உயிருள்ளவனுக்கும், உயிரற்றவனுக்கும் ஒப்பாகும்."

எனக் கூறியுள்ளார்கள். எனவே தஸ்பீஹ் செய்வதன் மூலம் மன அமைதி அடைவதோடு அதிக நன்மைகளும் கிடைக்கும். எனவே, தினமும் தஸ்பீஹ் செய்வோம்.

எம்.எஸ்.நஸீஹா,
ஏத்தாலை.

## சிறந்த வழி

அன்பானவர்களே, இருள் நிறைந்த இரவிலே உடைபட்ட கப்பலிலிருக்கும் ஒரு பெரும் ஜனக்கூட்டம் போல் இந்த உலகம் இருக்கின்றது. புயல் எழும்புகிறது. உதவியற்ற யாவர்மேலும் மரணம் இரைச்சலிடுகிறது. "எங்கேயாகிலும் உதவி இருக்கிறதா?" என்று ஜனங்கள் இருளிலிருந்து கூக்குரலிடுகிறார்கள். நான் அவர்களுக்கு பிரதியுத்தரமாகச் சொல்லும் பதிலாவது "ஆம் உதவி இருக்கிறது. இதுதான் வழி. இயேசு கிறிஸ்துவே இந்த வழி. நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் (யோவான் 14:6) ஓ! சிநேகிதனே, இயேசு உங்களை அழைக்கிறார் அவரிடம் வாருங்கள் விடுதலை அடைவீர்கள்.

ஆர். பாலசந்திரன் சீட்டன்,
அல்மா, கந்தப்பளை.

இடி தமிழ்கேசரி

Millennium Advertising & Printers (PVT) Ltd.,
No: 3A,Dharmaraja Mawatha, Colombo -03.
Telefax - 074 -721312, E-mail : map@wow.lk

கதைகளில் இடம்பெறும் சம்பவங்கள், கதாபாத்திரங்கள் கதாசிரியர்களின் கற்பனையே. கட்டுரைகள் அவற்றை எழுதியோரின் கருத்துக்களேயன்றி, அக்கருத்துக்களோடு "இடி- தமிழ்கேசரி"க்கு உடன்பாடு உண்டு அல்லது இல்லை என்று கருதக்கூடாது.

## முக்கியத்துவம் வாய்ந்த ஜப்பான் பேச்சுவார்த்தைகள்

எதிர்வரும் [illegible] ம் திகதி தொடக்கம் 21ம் திகதி வரை இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தை நோர்வேயின் அனுசரணையுடன் ஜப்பானின் தலைநகரான டோக்கியோவில் நடைபெறவிருக்கிறது.

கடந்த காலங்களில் தாய்லாந்து, நோர்வே, ஜேர்மனி ஆகிய நாடுகளில் நடந்த பேச்சுவார்த்தைகளில் அடிப்படை விடயங்களே அதிகமாக ஆராயப்பட்டன. மிகச் சிறு முரண்பாடுகள் ஏற்பட்டாலும் கூட கடந்த பேச்சுவார்த்தைகள் இணக்கப்பாட்டுடனும், புரிந்துணர்வுகளோடுமே நடந்து முடிந்திருக்கின்றன.

இனவாதிகளின் கூக்குரல் ஒரு பக்கத்தில் கேட்டுக் கொண்டிருந்தாலும் அவற்றைக் கண்டு கொள்ளாமல் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து கொண்டிருப்பது மகிழ்ச்சியையே தருகின்றது. இந்த சமாதானப் பேச்சுக்களை எவ்விதத்திலேனும் குழப்பி விட வேண்டுமென்ற எண்ணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் சமாதான எதிரிகளின் சதிகளைப் பற்றி அலட்டிக் கொள்ளாமல் இரு தரப்பும் மனம் விட்டுப் பேசுவதும், சில விடயங்களில் முடிவுகளை எட்டுவதும் ஆறுதலாகவும் இருக்கிறது.

இதுவரை நடந்த பேச்சுவார்த்தைகளைப் போலல்லாது ஜப்பான் பேச்சுவார்த்தைகள் மிகவும் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. ஏனெனில், ஜப்பான் பேச்சுவார்த்தைகளின் போது அரசியல், நிர்வாகம் சம்பந்தப்பட்ட விடயங்கள் பேசப்படப் போகின்றன. இந்த நேரம் அதிகாரப் பகிர்வு பற்றியும் ஆராயப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வொன்றை எட்டுவதற்கான இறுதிச் சந்தர்ப்பம் இதுவேயென இரு தரப்பும் புரிந்து கொண்டிருக்கின்றன. விட்டுக் கொடுப்பும், இணக்கப்பாடும் எத்துணை அவசியமென்பதையும் இரு தரப்பாரும் நன்குணர்ந்துள்ளனர். எனவே, மெல்லத் தலை காட்டும் முரண்பாடுகளை இதயம் திறந்த பேச்சுவார்த்தைகளினூடாகக் களைந்து, நாட்டுக்கு சமாதானத்தைக் கொண்டு வருவதில் அரசும் புலிகளும் ஜப்பான் பேச்சுக்களில் மிகவும் உறுதியாக இருப்பார்கள் என்று நிச்சயமாக நம்பலாம்!


-பிரதம ஆசிரியர்-

## சுதந்திரப்போரின் சூரப்புலிகள் 04

வன்னிப் பெரு நிலப்பரப்பில் வவுனிக்குளம் என்ற கிராமம்!

இந்த அழகிய கிராமத்தில் அவதரித்த மாவீரன் தான் சின்னத்துரை சுகுமாரன். இது அவனது இயற்பெயர். ஆனால் இயக்கம் அவனுக்குச் சூட்டிய பெயரோ மாறன்!

இனவாத சிங்கள அரசுகள் முஷ்டி தட்டிக் களமிறங்கிய காலத்தில், பாடசாலை மாணவர்களிடையே அரசியல் விழிப்புணர்வை ஆழ ஊன்றிட மாறன் பல்வேறு வழிகளில் உழைத்தான். கலை நிகழ்ச்சிகள் மூலமாகவும், கிராமங்கள் தோறும் பிரச்சாரம் செய்து மக்களிடத்தே விழிப்புணர்வுகளை



### மேஜர் மாறன்
### (சின்னத்துரை சுகுமாரன்)

அந்[illegible] எதிர்த்த அஞ்சாது எதிர்த்த அடலேறு தமிழ் மன்னன் பண்டார வன்னியனால் பெருமை பெற்றுயர்ந்த வன்னி மாநிலத்தில் வந்துதித்த மேஜர் மாறனுக்கும்,

இரத்தத்திலேயே வீரம் இரண்டறக் கலந்திருந்தது போலும்!

தன் சின்னஞ் சிறுவயதிலேயே ஒழுக்கமும், இரக்க சுபாவமும் உடையவனாகத் திகழ்ந்த சுகுமாரன் தன் தொடக்கப் படிப்பைத் தான் பிறந்த கிராமத்திலேயே முடித்துக் கொண்டு, உயர் கல்வியைத் தொடர வவுனியா மத்திய மகாவித்தியாலயத்திற் சேர்ந்தான். ஆயிரக்கணக்கான மாணவர்கள் அரும் கல்வி பயிலும் வவுனியா மத்திய மகா வித்தியாலயத்தின் மாணவர் தலைவனாகும் அளவிற்கு மாறன் உயர்ந்தான்.

தமிழீழ மக்களை அடக்கி அவர் தம் கரங்களில் அடிமை விலங்குகளைப் பூட்டிட எத்தனித்ததுமல்லாமல் தமிழின விரோதச் சட்டங்களைப் பிரகடனப்படுத்தி தமிழ் இனத்தையே வேரறுக்க ஊட்டினான். அது மாத்திரமன்றி, சிங்கள பேரினவாதத்தின் பேய்க் கரங்கள் தமிழினக் குரல் வளையை நசுக்கிக் கொண்டிருந்த வேளையிலும், தமிழர் தம்மிடையே தலை தூக்கியிருந்த சாதிக் கொடுமைகளையும் அவன் சாடினான்.

சிங்கள தேசத்தின் கோரப் பிடியிலிருந்தும், பிற்போக்கான தமிழ்த் தலைமைகளிலிருந்தும் தமிழீழ சமூகம் விடுவிக்கப்பட்டு ஒரு புரட்சிகரத் தலைமையின் கீழ் வழி நடாத்தப்படும் பொழுது தான் சமூக ஏற்றத் தாழ்வுகளையும், ஒடுக்கு முறைகளையும் இல்லாமற் செய்ய முடியுமென்ற விடுதலைப் புலிகளின் கொள்கையை பட்டி தொட்டியெங்கும் எடுத்தியம்பிய மாறன் 1983ம் ஆண்டின் முற்பகுதியில் இயக்கத்தோடு தன்னையும் இணைத்துக் கொண்டான்.

படிப்படியாக உயர்ந்த மாறன் கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளனாக உயர்ந்த போது மக்களின் மீது அவன் அதிகமாக நேசம் கொண்டிருந்தான். அவ்வாறே மக்களும் அவன் மீது பாசம் கொண்டிருந்தனர்.

சிங்கள இனவாதிகளின் சின்னத்தனங்களால் தனது சொந்த மண்ணை விட்டும் துரத்தப்பட்ட தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் புலிகளின் பணிகளுக்கு மாறன் சரியான செயல் வடிவம் கொடுத்தான்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில், விடுதலைக்காகப் புறப்பட்டு பின்னர் திசை கெட்டுப் பிழையான தலைமைகளால் வழி நடாத்தப்பட்ட சமூக விரோத சக்திகளினால் மக்கள் அடைந்த துன்பங்களைத் தீர்க்கும் வழியில் தீர்க்கமுடன் செயல்பட்டவன் இந்த மறத் தமிழன் மாறன்.

அமைதிப் படையாக வந்து, ஆக்ரமிப்புப் படையாகவும், அட்டகாசப் படையாகவும் மாறியோருக்கெதிரான உண்ணா விரதப் போராட்டத்தை மக்கள் போராட்டமாக மாற்றிய பெருமையும் மாறனுக்குண்டு.

இக்காலகட்டத்தில் மக்களின் உணர்ச்சிகளை ஏந்தி வந்த 'உணர்வு', 'சுதந்திரப் பறவைகள்' ஆகிய பத்திரிகைகளின் உருவாக்கத்திற்கும் மக்களிடம் அவற்றைக் கொண்டு செல்லும் பணிகளுக்குமாக மாறன் ஆற்றிய சேவைகள் மகத்தானவை.

வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னிப் பிராந்தியத்தில் பெண்களுக்கிடையில் அரசியல் விழிப்புணர்வு களை ஊட்டி, விடுதலைப் போராட்டத்தில் மகளிரையும் இணைத்துக் கொள்ளும் பணிக்கும் மாறன் மாபெரும் பங்களிப்புக்களை வழங்கியுள்ளான். இவ்வாறான மாறனின் தன்னலமற்ற, சமுகத்திற்கான செயற்பாடுகளால் அவன் வன்னிப் பிராந்தியத்துக்கே அரசியற் பொறுப்பாளனாக உயர்ந்தான்.

26.06.1989 அன்று வவுனியா மாவட்டதின் பன்றிக்கெய்த குளம் கிராமத்தில் நடந்த யுத்தத்தில் மேஜர் மாறன் வீரச் சாவைத் தழுவி மாவீரரானான். மேஜர் மாறனோடு மகளிர் படைப் பிரிவைச் சேர்ந்த லெப்.நித்திலா, மற்றும் லெப்.அருள், சுதன், மகேந்தி, சபா, பொபி, அகிலன், கேசவன், அச்சுதன், நவம், விஜயன், முரளி, ரூபன் ஆகிய பதின்மூன்று பேரும் வீரமரணம் தழுவி வரலாற்றில் அழியாத இடம் பிடித்து விட்டார்கள்!

தருவது : தமிழழகன்

ஆதாரம் : எரிமலை

மருத்துவம்

# தலையிடி தரும் தலைவலி

மூளையின் நேரடித் தொடர்பில்லாத தலைவலிகளைப் பற்றியும் சிறுகுறிப்பு வரையுங்களேன் டாக்டர்...?

"சிறு"குறிப்பு என்று வேறு கேட்டுவிட்டீர்கள். சிலவகைத் தலைவலிகளின் காரணங்களைச் சொல்கிறேன். மருந்து, சிகிச்சை என்று போகாமல், அவரவர் அளவி லேயே சரிசெய்ய முயற்சி செய் யலாம்.

உலக ஜனத்தொகையில் பாதிப்பேருக்குத் தலைவலி வரக் காரணம் தவறான வாழ்க்கை முறைதான். நேரத்துக்குச் சாப்பிடாதது, தூங்கவேண்டிய சமயங்களில் விழித்திருப்பது போன்ற தப்புக் காரியங்கள் தலைவலியை உருவாக்கும். செவிப்பறை கிழிந்துவிடும்படியான சத்தத்தைக் கேட்டாலும் கண்ணைக் கெடுக்கும் அதிகப்படி பிரகாசத்தை தொடர்ந்து பார்த் தாலும் கூடத் தலைவலி வரும். "டிஸ்கொதே"க்களில் மின்னலடிக்கும் விளக்கோடு டான்ஸ் பார்ப்பவர்களுக்குத் தலைவலி மட்டுமல்ல... பிற்பாடு வலிப்பு நோய்கூட வரலாம்!

தசை இறுக்கத்தால் டென்ஷன் தலைவலி வருகிறது. கண் லென்ஸ் இருக்க வேண்டிய இடத்தைவிட்டுக் கொஞ்சம் நகர்ந்து இருப்பது, நுணு க்கமான வேலைகளைத் தொடர்ந்து செய்வது, தொடர்ந்து கம்பியூட்டர் மொனிட்டரையோ டி.வி-யையோ பார்த்துக் கொண்டிருப்பது போன்ற காரணங்களாலும் தலைவலி வரும்.

தன்மீது வண்டியை மோதியவரிடமிருந்து காம்பென்சேஷன் வாங்குவதற்காக விபத்துக்குப் பிறகு தனக்குத் தொடர்ந்து தலைவலிப்பதாகச் சிலர் கூறுவார்கள். அதற்கேற்ப வலிக்கவும் செய்யும்! இவர்கள் கூறும் அறிகுறிகளை வைத்து இவர்களுக்கு "காம்பன்சைட்டிஸ்" என்கிற தலைவலி இருப்பதாக மருத்துவர்கள் கூறுவோம்!

வயது வாரியாக வெவ்வேறு வகையான தலைவலிகளால் நாம் தாக்கப்படுகிறோம்.

எட்டு வயதுக்கு முன்பாக வரும் தலைவிக்குப் பெரும்பாலும் கண் கோளாறுகளே காரணமாக இருக்கின்றது.

எட்டு வயதிலிருந்து பதினைந்து இருபது வயது வரை வரும் தலைவலிக்கு சைனஸ் காரணமாக இருக்கின்றது.

நடுத்தர வயதில் ரத்தஅழுத்தம், சிறுநீரக் கோளாறுகள் போன்ற காரணங்களால் தலைவலி தோன்றுகிறது.

கொஞ்ச நாள் அடிக்கடி கடுமையான தலைவலி இருக்கும். பிறகு கொஞ்ச நாள் தலைவலியே வராது. இதை "க்ளஸ்டர் தலைவலி" என்போம்.

வெவ்வேறு காரணங்களால் ரத்தக்குழாய் சுருங்கியோ - விரிந்தோ தலைவலியைத் தோற்றுவிக்கும். இந்த வகைப்பட்ட தலைவலிகளில் "கிங்" ஒற்றைத்தலைவலியின் (Migraine) மிகவும் பரவலாகக் காணப்படும். இந்தக் தலைவலி உயிருக்கோ உடலுக்கோ சேதம் விளைவிப்பதில்லை. ஆனாலும் இதற்கு இன்னும் சரியான மருந்து கண்டுபிடிக்கப்பட வில்லை என்பதாலேயே இதைக் கொடுமையான நோய் என்று கூறலாம். ஒற்றைத் தலைவலியின் காரெக்டரும் மிகவும் வித்தியாசமானது. அலறித் துடிக்கும் அளவு தலைவலி ஏற்படுவதோடு, கண் பார்வைத் திறனும் மாறுபடுவதால், நோயாளியின் கண்முன் விந்தையான, வித்தியாசமான காட்சிகள் எல்லாம் தெரியக் கூடும். இந்த மாதிரி மாயக் காட்சிகள் கண்முன் தெரிவதைப் பார்த்து எல்லோரும் பயந்தும், விரக்தியாகிப் போயும் பேசாமல் இருக்க, லூயிஸ் கரோல் என்கிற எழுத்தாளர் மட்டும் வித்தியாசப்பட்டார். தலைவ லியின்போது தனக்குத் தோன்றும் விந்தையான காட்சிகளை வைத்து "அதிசய உலகில் ஆலிஸ் (Alice in Wonderland)" என்று குழந்தைகளுக்குப் பிடித்தமான ஒரு நாவலையே எழுதி விட்டார்.

இதுபோன்று கடுமையான தலைவலியினால் பாதிக்கப்பட்டிருந்த பெர்னார்ட் ஷா-விடம் ஆர்க்டிக் முனையைக் கண்டுபிடித்த நான்சென் என்பவர் வந்தார். "ஆர்க்டிக் என்பது வடக்கே இருந்தால் என்ன, தெற்கே இருந்தால் என்ன? உலகில் உள்ள ஒவ்வொருவரையும் அன்றாடம் அலறவைக்கும் தலைவலியைத் தீர்க்கவழியில்லை. ஆர்க்டிக்கைக் கண்டுபிடித்தாராம் ஆர்க்டிக்கை! போங்கள் சார்..." என்றபடி விலகிப் போனராம் ஷா!

தலைவலிக்கு அடுத்தபடியான அறிகுறியாக முதுகுவலியைச் சொன்னீர்கள். கொஞ்சம் விளக்குங்களேன்...

பரிணாம வளர்ச்சியின்போது மனிதன் கொஞ்சம் அவசரப்பட்டு முன்கூட்டியே செய்துவிட்ட காரியம் நிமிர்ந்து நின்றது தான். நிமிர்ந்து நிற்கத் தேவையான உறுப்பு முதுகெலும்பு. அது சரியான விகிதத்தில் வளர்ச்சி பெறுவதற்கு முன்னதாகவே ஆதிமனிதன் ஆர்வக்கோளாறின் காரணமாக நிமிர்ந்து நடக்க ஆரம்பித்துவிட்டான். இதனால், மனித உடலிலேயே பலவீனமான அதாவது "மெகா னிக்கலாக வீக்"கான பகுதியாக இருக்கிறது முதுகெலும்பு.

இப்படி இருப்பதால்தான் உலக அளவில் பெரும் பிரச்சனை ஏற்படுத்தக்கூடிய உபாதையான முதுகுவலி வளர்ந்து நிற்கிறது.

தொழிலாளர்கள் தொழிற்சாலைக்குத் தாமதமாக வருவதற்கும் மெடிக்கல் லீவு போடுவதற்கும் அதிகமாகச் சொல்லப்படும் காரணம் முதுகுவலி. தொழிலகங்களில் உற்பத்திக் குறைவுக்கான காரணமாக இருப்பது - முதுகுவலி. தொழிலாளர்கள் தங்கள் முதலாளியிடம் நஷ்டஈடு கேட்டுப் போடும் வழக்குகளில் பெரும்பாலும் காரணமாகக் காட்டப்படுவது - முதுகுவலி. இதனால் தொழில்வளத்தை நம்பியிருக்கும் தேசங்களில் பொருளாதாரமே கணிசமான அளவில் சீரழிவதைப் புள்ளி விபரங்கள் தொடர்ந்து சுட்டிக்காட்டி வருகின்றன.

"டாக்டர்களின் மருத்துவம் சரியில்லை" என்று நோயாளிகள் தொடர்ந்து வழக்குகளிலும் பெரும்பாலானவை "முதுகுவலி" கேஸ்கள்தான்!

*ஆதாரம் : உச்சிமுதல் உள்ளங்கால் வரை*

## தொண்டைப் புண்ணா?

தொண்டையில் புண்ணா? மருந்து தேடி அலைய வேண்டியது இல்லை. தினந்தோறும் அன்னாசிப்பழம் சாப்பிடுங்கள் புண் ஆறிவிடும். அன்னாசிப்பழத்திலிருக்கும் புரோம்லைன் என்ற, என்ஸைம் தொண்டையில் சளி சேரவிடாமல் தடுப்பதோடு புண் உண்டாகாமலும் பாதுகாக்கின்றது.

அதற்காக தினமும் ஒரு முழு அன்னாசிப்பழத்தை சாப்பிட வேண்டுமென்பது பொருளல்ல. ஒன்று இரண்டு துண்டுகள் சாப்பிடுங்கள் போதும். புண்ணும் மறையும் தொண்டையில் வரும் கீச் கீச்சும் போய்விடும்.

## நீரிழிவு நோய் குணமடைய

பாகற்காய் இலையை இடித்து ஒரு அவுன்ஸ் சாறு பிழிந்து அச்சாற்றில் சிறிதளவு பெருங்காயத்தை இட்டு நன்றாக கலக்கி தொடர்ந்து ஆறுமாதங்கள் வரை சாப்பிட்டு வந்தால் நீரிழிவு நோய் முற்றிலும் குணமடையும்.

## பார்வைக் கோளாற்றைத் தடுக்க

பார்வைக் கோளாறு வராமல் கண்களை ஆரோக்கியமாக பாதுகாக்க குழந்தை பிறந்து வளரும் பருவத்தில் கீரை, பால், முட்டை, பச்சைக் காய்கறிகள், பழங்கள் சாப்பிடுவது அவசியம்.

## உணவே மருந்து

அடிக்கடி ஒற்றைத் தலைவலியால் அவதிப்படுபவரா நீங்கள்? அப்படியானால் சில உணவு வகைகளை தவிர்ப்பது நல்லது. அதன் மூலம் தலைவலி வராமல் தடுக்கலாம். சொக்லெட்டுகள், முட்டை, எலுமிச்சை பழ வகைகள், மாமிசம், கோதுமை, தக்காளி, சோளம், அப்பிள் போன்றவை தலைவலியைத் தூண்டுகின்றன. தலைவலி இருக்கும் போது இவற்றை சாப்பிட்டால் அதிகமாகும் என்ற கருத்தும் உண்டு.

## நாட்டு வைத்தியர் நல்லதம்பி



### பூச்சி கடித்துவிட்டால்...!

கொஞ்சம் சோற்றுக் கற்றாழையின் சதை கொஞ்சம் நன்னாரி வேர்த் துண்டுகள் இவை இரண்டையும் சம அளவு கலந்து சேர்த்து சாப்பிட்டு வந்தால் எப்படிப் பட்ட பூச்சிக்கடி விஷமானாலும் முறியும். இந்தக் கலவையை அப்படியே சாப்பிட முடியாதவர்கள் அவற்றுடன் கொஞ்சம் சீனி அல்லது கருப்பட்டி கலந்துகொள்ளலாம்.

## வீட்டு மருத்துவக் குறிப்புகள்

- நெல்லிக் கனியை சாப்பிட்டு வந்தால் இரத்தம் தூய்மைப் படுத்தப்படும்.
- பப்பாளியை தொடர்ந்து உணவில் சேர்த்து வந்தால் ஊளைச் சதை குறையும்.
- பற்பசையுடன் உப்பு சேர்த்து பல் துலக்கினால் பற்கள் பளபளக்கும்.
- தயிர் மற்றும் கடலை மாக் கொண்டு முகத்தைக் கழுவினால் முகச் சுருக்கங்கள் நாளடைவில் மறையும்.
- மருதாணியுடன் ஒலிவ் எண்ணெயை சேர்த்து தலைக்கு வைத்து குளித்தால் பொடுகு நீங்கும்.
- உடலில் தேமல் மறைய எலுமிச்சை சாற்றுடன் துளசி இலை சாறு சேர்த்து தேமல் மேல் தடவ தேமல் மறையும்.
- முட்டையின் வெள்ளைக் கருவை முகத்தில் தேய்த்து வர முகத்திலுள்ள எண்ணெய்ப் பசை நீங்கும்.
- முகத்திலுள்ள வடுக்கள் மறைய தேன் ஒரு துளியுடன் மஞ்சள் தூள் சேர்த்து தடவ வடுக்கள் மறையும்.
- முருக்கம் காயை சமைத்து சாப்பிட்டு வர கருப்பையின் பலவீனம் மறைந்து பலம் பெறும்.

## மணத்தக்காளியின் மருத்துவ பயன்கள்



மணத்தக்காளியின் இலைகள், மலர்கள், கனிகள் உட்பட முழுத் தாவரமும் மருத்துவ குணம் கொண்டவை.

மணத்தக்காளி கீரையை அடிக்கடி உண்டு வருபவர்களுக்கு மலச்சிக்கலே இருக்காது.

- இதனை பாசிப்பயறுடன் சேர்த்து கூட்டு வைத்து ஏழு நாட்களுக்கு பகல் உணவுடன் உண்டால் மூலத்தில் இரத்தம் வருவது நின்று விடும்.
- நெஞ்சுப்பை எரிச்சலை அகற்ற இதைவிடச் சிறந்த மருந்து கிடையாது. வாந்திபேதியைக் கட்டுப்படுத்தும். வியர்வையை தூண்டிவிடும்.
- மணத்தக்காளிச் செடியின் சாற்றை அருந்துபவர்களுக்கு கல்லீரல் கணையத்தில் வீக்கம் குறையும். மற்றும் மூலநோய், பால் வினை நோய், நீர்க்கோவை ஆகியவற்றைக் குணப்படுத்தும் சக்தி இதற்கு உண்டு.
- மிளகு, தக்காளிக் கீரையுடன் தண்ணீர் விட்டு வேக வைத்து வடிகட்டிய தண்ணீரை குடித்தால் குடல் புண் ஆறிவிடும். கீரையை உப்பு சேர்த்து சாப்பிட்டாலும் அதே பலன் கிடைக்கும்.
- இதன் பூக்கள் இருமல் சளிக்கு மருந்தாக பயன்படுகின்றன. இதன் கனிகள் இதயநோய் உள்ளவர்களுக்கு மருந்தாக உதவுகின்றன.
- வல்லாரைச் சாறு, தேனுடன் மிளகுதக்காளிச் சாறையும் கலந்து காமாலை கண்டவர்களுக்கு கொடுப்பார்கள். அதி விரைவில் காமாலை குணமடையும்.
- மணத்தக்காளியின் இலை கள் விந்துப்பை வீக்க மடைந்து வலி எடுப்பவர்களுக்கு வலியைப் போக்கவல்ல மருந்தாகும். இலையை பசைபோல் அரைத்து மூட்டு வலிக்குப் பற்றுப் போடலாம். தோல் வியாதிக்கும் அது நல்ல மருந்து. விழிப்படலத்தை விரிவடையச் செய்யும் தன்மையும் இதற்கு உண்டு.

## கொழுப்பைக் குறைக்க சில ஆலோசனைகள்!

உடலில் கொழுப்பு சேர்கிறது. எடை கூடுகிறது. பல தொல்லைகள் வருகின்றன. அதனால், கவலைப்படுகிறீர்களா? கொழுப்பைக் குறைக்க சில ஆலோசனைகள் இதோ:

- பழங்கள், காய்கறிகள், தானிய உணவுகளை அதிகம் சாப்பிடுங்கள்.
- முக்கிய உணவாக மாமிசத்தை எடுத்துக் கொள்ளாமல், தொட்டுக்கொள்ளுவதற்கு மட்டுமே வைத்துக்கொள்ளுங்கள்.
- முடிந்த வரை எண்ணெயை குறைவாக பயன்படுத்துங்கள். அதுவும் கொழுப்பில்லாத எண்ணெயாக இருந்தால் மிகவும் நல்லது.
- வேக வைப்பதற்கு முன்னர், மாமிசத்திலிருந்து, கொழுப்பை நீக்கி விடுங்கள். சமைப்பதற்கு முன்னர் அதே மாமிசத்தைக் கொண்டு சூப் தயாரிப்பதன் மூலம் கடினமான கொழுப்பை நீக்க முடியும்.
- கொழுப்பில்லாத உணவு வகைகள் இப்போது சந்தைக்கு வந்துவிட்டன. கொழுப்பில்லாத உணவு என்பதால், கலோரியும் குறைவாக இருக்குமோ என்று எண்ண வேண்டிய அவசியம் இல்லை. அவற்றை சாப்பிடுவதில் தவறில்லை.
- அப்புறம் ஒரு விஷயம்... நன்றாக சாப்பிட்டுவிட்டு அப்படியே உறங்கிப் போய்விடாதீர்கள். நடப்பதும், கொஞ்சம் உடற்பயிற்சியும் நல்லது.

'பேஷண்டுக்கு சுகர் இல்லை டாக்டர்!'
'குட்... பி.பி இருக்கா?'
'இல்லவே இல்லை டாக்டர்...!'
'வெரிகுட்... அவரை டிஸ்சார்ஜ் பண்ணிடுங்க!'
'டாக்டர்... டாக்டர் பேஷண்ட் உடம்பில உயிரும் இல்லை டாக்டர்...!'



# சதிகளைத் தாண்ட வேண்டிய சமாதானம்

"மனிதர்களுக்கிடையே சமாதானம் வேண்டாம்!" என்று சொல்பவர்கள் மனிதர்களாக இருக்கமாட்டார்கள் என்பதில் உறுதி. உலகில் தோன்றிய எந்த ஒரு மதமும் சமாதானமாக வாழ வேண்டாம் என்று கூறவில்லை. அனைத்து மதங்களுமே சமாதானத்தின் தேவையை - அவசியத்தை வலியுறுத்தவே செய்கின்றன.

மனிதர்களிடையே பிளவுகள் ஏற்பட பல்வேறு காரணங்கள் இருக்கலாம். உடமைகளாற் சமாதானம் நின்று போகலாம். ஒருவர் மீது மற்றவர் கொள்ளும் காழ்ப்புணர்வினால் சமாதானம் சமாதியாகி போகலாம். இவை தனிப்பட்ட மனிதர்களுக்கிடையில் சமாதானத்தை இல்லாமல் ஆக்கி விடும் காரணிகள். ஆனால் குழுமங்களுக்கிடையில், இனங்களுக்கிடையில், நாடுகளுக்கிடையில் சமாதானம் குலைந்து சண்டைகள் மூண்டு விடுகின்றன. மொழி, சமயம், நிறம், கலாசாரம் போன்ற பல்வேறு காரணிகள் இதற்கு காரணமாகலாம்.

நமது நாட்டில் முன்னர் ஒரு காலத்தில் சமாதானமாக வாழ்ந்த இரு இனங்களுக்கிடையே திடீரென் சண்டை மூண்டதன் மூலவேர் எது என்பது எல்லோரும் அறிந்ததே. ஓர் இனம் பெரும்பான்மையானது. நாட்டின் ஆட்சி அதிகாரம் அந்தப் பெரும்பான்மை இனத்தின் கைகளிலேயே எப்போதும் இருந்து வந்தது. மற்றைய இனம் சிறுபான்மையானது. இந்த இனம் ஆட்சி அதிகாரத்தை எப்போதும் கொண்டிருந்த பெரும்பான்மை இனத்தினால் அடக்கி ஒடுக்கப்பட்டு, உரிமைகள் மறுக்கப்பட்டு வந்தது.

போதும் என்றளவுக்கு பொறுத்துப் போன சிறுபான்மை இனம் ஒரு கட்டத்தில் இனிப் பொறுக்க முடியாது என்ற நிலைமையிற் பொங்கி எழுந்தது. அடக்கு முறையாளர்களை ஆயுத முனையில்தான் சந்திக்கவேண்டும் என முடிவு செய்து போராட்டத்தை தொடங்கியது. விடுதலையை வென்றெடுப்பதற்காக வீரமான தியாகங்களுடன் சமரைத் தொடங்கியது.




தம்மைப் போலவே சிறுபான்மையினத்தையும் கருதி அந்த இனத்துக்குரிய உண்மைகளை பெரும்பான்மை இனம் வழங்கியிருந்தால் இந்தப் போராட்டம் வெடித்திருக்காது. அவ்வாறன்றி, சிறுபான்மை இனமான தமிழ் இனத்தை தம் காலடியில் போட்டு மிதிக்க வேண்டுமென்ற நினைப்பில் பெரும்பான்மை சிங்கள ஆட்சியாளர்கள் நடந்து கொண்டதனை குறிப்பிட்ட காலம் வரை சகித்து, இனிச் சகிக்க முடியாது என்ற நிலையிலேயே சிறுபான்மை தமிழினம் ஆயுதப் போராட்டத்தில் குதித்தது என்ற யதார்த்தம் தற்போது உலகெங்கனும் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது.

இருபத்தைந்து வருட கால இடையறாத தமது போராட்டத்தின் மூலம் தமிழினத்தின் தமிழீழ விடுதலைப் புலிகள் உலகிற்கு ஒரு தெளிவான செய்தியை சொல்லி விட்டார்கள். தமது போராட்டத்தின் நியாயம் என்ன என்பதை அவர்கள் முழு உலகிற்கும் காட்டிவிட்டார்கள். முன்னரெல்லாம், பத்தோடு பதினொன்றான ஒரு பயங்கரவாத இயக்கமே புலிகள் என கருதிக்கொண்டிருந்த சர்வதேச சமூகம், தற்போது "இல்லை. தமது மக்களுக்கான சுதந்திரத்தை வென்றெடுக்கப் போராடுகின்ற ஒரு விடுதலை இயக்கமே அவர்கள்" என்ற உண்மையான விடயத்தை உணர்ந்து கொண்டிருக்கிறது.

"எமக்கு உரியதைத் தந்து விட்டால் நாம் ஏன் தொடர்ந்து போராடப் போகிறோம்?" என்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் கேள்வி தர்க்க நியாயமானது. "எமது உரிமைகளைத் தருவதாக இருந்தால் நாம் சண்டையை விடுத்துச் சமாதானத்தையே நேசிப்போம்" என்ற அவர்களின் கூற்றும் உண்மையானது.

இந்த அடிப்படையில்தான் போர் நிறுத்தம் ஏற்பட்டது. கடந்த ஒரு வருடமாகத் துப்பாக்கிகளின் ஓசை கேட்கவில்லை. இரத்தம் பெருக்கெடுத்தோடவில்லை. உயிர்கள் ஆயிரக் கணக்கில் பிணங்களாகி மண்ணோடு சங்கமிக்கவில்லை.

நாட்டின் பெறுமதி மிக்க சொத்துக்களுக்கு இந்த ஒரு வருட காலத்தில் சேதங்கள் ஏற்படவில்லை. ஆயுதப் போராட்டத்துக்கான கோடிக்கணக்கான பணம் வீணாகச் செலவழியவில்லை.

அச்சப் புயலில் அகப்பட்டுத் தவித்த மக்கள் மனதில் அமைதித் தென்றல் வீசுகிறது. இலங்கை மக்களால் வாழ்க்கையின் வசந்தம் ஆழமாக நுகரப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஒரு கால் நூற்றாண்டு கால அளவில் இல்லாத அளவிற்கு வாழ்க்கையின் இன்பம் தனி மனிதர்களால் சுவைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த சமாதானத்தினால் பாதிக்கப்படுவோர் மிகச் சிலரே. யுத்தத்தின் மூலம் இலாபம் பெற்றவர்களும் யுத்தத்தின் மூலம் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொண்டிருந்தவர்களும் இந்த யுத்தத்தைச் சாக்காக வைத்து என்றாவது ஒரு நாள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குக் காத்திருந்தவர்களுமே அந்தச் சிலர்.

இந்தச் சுயநலமிகளுக்கு சமாதானம் தேவையில்லை. சமாதானம் தோன்றாவிட்டால் இவர்களின் பருப்பு வேகாது மீந்து விடும். எனவேதான் சமாதானத்தை ஏற்படுத்துவதில் சதிகள் பல செய்து இவர்கள் பெரும் தடையாக இருக்கிறார்கள்.

இத்தகையோரே சதிகாரர்கள். இவர்களின் ஒவ்வொரு முயற்சிகளும், செயல்களும் சதிகளாகவே உள்ளன. இந்தச் சதிகளுக்குள் தான் தற்போதைய சமாதானம் கொஞ்சம் தடுமாறிக் கொண்டு நிற்கிறது.

சமாதானத்தின் எதிரிகளான இவர்களின் சதிகளைத் தாண்ட வேண்டிய தேவையும், கடப்பாடும் சமாதானத்தை ஏற்படுத்த விரும்புவோருக்கு இருக்கிறது. என்ன செய்தாவது, எத்துணை முயன்றாவது சதிகாரர்களின் சதிகளை முறியடித்து, சமாதானப் பாதையில் தொடர்ந்து முன்னேறி இலக்கினை அடைவதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டுச் செயற்படுத்தப்பட வேண்டும்.

தமிழ் மக்களைக் காப்பாற்றப் போகிறோமெனச் சொல்லிக் கொண்டு ஒரு கூட்டம் சமாதானத்திற்கெதிரான ஆர்ப்பாட்டப் பேரணிகளையும், கண்டனக் கூட்டங்களையும் நடத்துவதானது ஓநாய்கள் அழுகின்ற கதையேயன்றி வேறொன்றில்லை. கோழிக்குக் கூதலென்று கொடும் பூனை இதயம் நொந்த கதை போல், தமிழ் சமூகத்தை வேரோடு பிடுங்கியெறியத் துடிக்கும் கூட்டம், இன்று தமிழ் மக்களைப் புலிகளின் பிடியிலிருந்து பாதுகாக்கப் போவதாகக் கூறிக்கொண்டு எழுந்திருப்பதை உலகம் கேலியோடு பார்க்கத் தொடங்கிவிட்டது.

சமாதானத்தைக் கொண்டு வருவதில் முனைப்போடு ஈடுபடுவோர் எக் காரணம் கொண்டும் தளர்ந்து விடக் கூடாது. எத்தகைய இடர்வரினும் சரியே, எத்தகைய சதி முயற்சிகள் குறுக்கிடினும் சரியே, தமது நோக்கில் மிக்க உறுதியுடன் நின்று, சமாதானத்தை ஏற்படுத்தியேயாக வேண்டும்.

சமாதானத்திற்கான மக்கள் ஆதரவு மிக அதிகமாக இருக்கிறது. சமாதானமா சண்டையா? என்ற ரீதியில் தற்போது ஒரு தேர்தல் நடந்தால் சமாதானமே என்பதற்குத் தொண்ணூற்றி ஒன்பது வீதம் வாக்குகள் கிடைக்கும் என்பது நிச்சயம். எனவே, சமாதானத்தை ஏற்படுத்த முன்வந்துள்ளோர் மக்கள் ஆதரவைத் துணை கொண்டு நிரந்த சமாதானம் எனும் வெற்றிக்கொடியைப் பற்றிப் பிடிக்க வேண்டும்.

**-அவதானி-**

# அஷ்ரஃப் காங்கிரஸ் அவசியமா?




கடந்த 25.02.2003ம் திகதி கொழும்பில் அஷ்ரஃப் காங்கிரஸ் என்ற பெயரில் ஓர் இயக்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் முரண்பட்டுக் கொண்டு நிற்கும் அதாவுல்லாஹ் அணியின் முக்கியஸ்தர்கள்தான் அஷ்ரஃப் காங்கிரஸின் தோற்றத்திற்கு உரித்தானவர்கள் என்பது பரகசியம்.


இது சம்மந்தமாக வெளியிடப்பட்டுள்ள பத்திரிகை அறிக்கையில், காலஞ் சென்ற மாபெரும் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் எண்ணங்களையும், அபிலாஷைகளையும் செயற்படுத்தும் நோக்கத்தைக் கொண்டதாகவே இந்த மறுமலர்ச்சி இயக்கம் அமைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு, ஸ்ரீ லங்காவின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டு மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதன் மூலம் சகல சமுகங்களுக்கிடையில் சமூக, பொருளாதார, கலாச்சார, முன்னேற்ற எழுச்சியை ஏற்படுத்துவதே இந்த இயக்கத்தின் கோட்பாடாகும் என்றும்,

இந்த இயக்கம் ஒரு அரசியல் கட்சியல்ல, எந்த ஒரு அரசியல் கட்சியையும் ஆதரிக்கும் இயக்கமும் அல்ல. எனவே மேற்கூறிய நோக்கங்களை முன்னெடுத்துச் செல்ல விரும்பும், இந்நாட்டின் எந்த ஒரு பிரஜைக்கும் இந்த இயக்கத்தில் சேருவதற்கும் ஒத்துழைப்பதற்கும் உரிமை உண்டு என்றும்,

காலஞ் சென்ற தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரஃப் அவர்கள் உயிர் வாழ்ந்த காலத்தில் அவரோடு மிகவும் நெருக்கமாகவும், மிகவும் விசுவாசமாகவும் இருந்தவர்கள்தான் இந்த மறுமலர்ச்சி இயக்கத்தின் முன்னோடிகள் என்பது இங்கு விஷேடமாக கவனிக்கத்தக்கதாகும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இது ஓர் அரசியல் இயக்கமாக எதிர்காலத்தில் மாறுமா என்ற கேள்விக்கு இந்த இயக்கத்தின் தவிசாளரும், அமைச்சருமான ஏ.எல்.எம். அதாவுல்லாஹ் பின்வருமாறு பதில் கூறினார்.



"அப்படியொரு எண்ணம் தற்போதைக்கு இல்லை. மக்களின் பிரச்சினைகளைத் தக்கபடி ஆராய்ந்து அவற்றைத் தீர்க்கின்ற வழி முறைகளை அடையாளம் காண்பதோடு, மக்களின் தேவைகளை நிறைவேற்றும் அடிப்படையிலேயே இவ்வியக்கம் செயற்படும்.

இது விடயமாக முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரின் கருத்துக்களையும் இங்கு தருகிறோம்.

### மையோன் முஸ்தபா M.P.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாற்று குழுவினர் நீதி மன்ற முடிவு தமக்குத் தோல்வியாக வரும் என்பதை உணர்ந்து தமது ஆதரவாளர்களை தம் பக்கம் வைத்துக் கொள்வதற்காக இந்த அமைப்பை உருவாக்கி இருக்கிறார்கள்.



"அஷ்ரப்" என்ற நாமத்தை வைப்பதன் மூலம் மக்கள் கண்ணை மூடிக் கொண்டு வாக்கு போடுவார்கள் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அது ஒரு போதும் நடக்காது. மக்கள் மிக தெளிவுடன் இருக்கிறார்கள். இந்த அமைப்பு மூலம் இம்மாற்று அணிக்கு இருந்த ஆதரவு இன்னும் குறையும். அஷ்ரப் என்ற பெயரை வைத்து தனிப்பட்ட இலாபங்களுக்காக அரசியல் செய்கின்ற அமைப்புத்தான் இதுவாகும்.

### சேகு இஸ்ஸதீன் M.P.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அஷ்ரப் காங்கிரஸ் ஆகிய இரண்டிற்குமே எதிர்காலம் இல்லை. இவை இரண்டும் அழிந்து விடும். எனவே முஸ்லிம் சமூகத்தை அரசியல் பாதையில் வழிநடத்த ஒரு அமைப்பு தேவைப்படும் காலம் இப்போது ஆரம்பித்து இருக்கிறது. இளைஞர்கள், புத்திஜீவிகள் சேர்ந்து புதிய அமைப்பை, முஸ்லிம் சமூகத்தை வழிநடத்துகின்ற ஒன்றை உருவாக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாற்றுக் குழுவினர் நீதிமன்றத்தடையுத்தரவினால் இயங்குவதற்கு ஒரு அமைப்பு இல்லாததன் காரணமாக இந்த புதிய அமைப்பை உருவாக்கி இருக்கின்றனர். இந்த அமைப்பை அரசியல் கட்சியாக உருவாக்கும் திட்டம் அவர்களிடம் உள்ளது. இவ்வாறு முஸ்லிம் சமூகத்திடம் புதிய அரசியல் அமைப்புக்கள் உருவாகுவது முஸ்லிம் சமூகத்தின் அரசியல் சக்தியை சிதறடிக்கும் முயற்சியாகும்.

இலங்கையில் முஸ்லிம் சமூகத்தின் நற்பணி சேவைகளுக்கு அதிகமான நிறுவனங்கள் இருக்கின்ற போது இவ்வாறான அமைப்பு தேவைதானா?

எனவே முஸ்லிம் சமூகத்தின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுக்க சகல முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் வடகிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்துடன் இணைந்து செயல்பட முன்வர வேண்டும்.

### ஹரீஸ் M.P.

முஸ்லிம் சமூகத்தை அரசியல் ரீதியாக வழி நடத்துகின்ற அரசியல் கட்சி என்றால் நிறைய கூறலாம். ஆனால் அஷ்ரப் காங்கிரஸ் ஒரு சமூக சேவை அமைப்பு என்பதால் அதனைப் பற்றி ஒன்றும் கூற முடியாது. இலங்கையில் அதிகமான பழமையான இஸ்லாமிய சமூக சேவை நிறுவனங்கள் உள்ளன.



### எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா M.P.

அஷ்ரப் காங்கிரஸ் என்ற அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டதில் நான் மிகவும் கவலையடைகிறேன். என்னதான் இருந்தாலும் இவ்வமைப்பு அரசியல் நோக்கத்துக்காகவே ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான கட்சிகளும், அமைப்புக்களும் உருவாகுவது முஸ்லிம் சமுகத்திடையே பிளவுகளைத்தான் ஏற்படுத்தும். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் எங்களை விலக்கினாலும் நாங்கள் புதிதாக கட்சி எதனையும் உருவாக்கவில்லை. நுஆ என்னும் தேசிய ஐக்கிய முன்னணி மூலமாக இயங்குகிறோமெனினும், நுஆ முஸ்லிம் காங்கிரஸின் ஓர் அங்கம்தான். இரண்டு கட்சிகளுமே தலைவர் மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களால் உருவாக்கப்பட்டதுதான். நாங்கள் இன்னமும் முஸ்லிம் காங்கிரஸ்காரர்களாகத்தான் இருக்கிறோம்.

எங்களை ஸ்ரீ.ல.மு. காங்கிரஸிலிருந்து வெளியேற்றிய பின்னர் கிழக்கு மாகாணத்திலிருந்து பலர் பல்வேறு கட்சிகளை ஆரம்பிப்போமெனக் கூறிக் கொண்டு வந்தார்கள். நாங்கள் மறுத்துவிட்டோம். ஏனெனில், இவ்வாறு மிகச் சிறுபான்மையினத்தவராகிய முஸ்லிம்களிடத்தே பல கட்சிகள் தோன்றுவது ஆரோக்கியமானதல்ல.

ஒரு கட்சியின் தலைமைத்துவம் தவறுகள செய்தால் தட்டிக்கேட்கலாம்; தகுந்த ஆலோசனைகள் வழங்கலாம் கட்சிக்குள்ளிருந்தே தவறுகளைத் திருத்த முயற்சி செய்யலாம். இதைவிடுத்துப் புதிதாகக் கட்சியொன்றைத் தொடங்குவது இந்தக்கால கட்டத்தில் அவசியமல்ல. இதுவே எனது கருத்து!

**-எம்.ஐ.அஹமட் கபீர்**
**எஸ்.நிலா**


RSL BULBS சேமியுங்கள் 80% ENERGY
DUTY FREE OFFER
1 YEAR GUARANTEE



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 05W | - | 2U | = | 25W | - | 285 |
| 07W | - | 2U | = | 35W | - | 295 |
| 09W | - | 2U | = | 45W | - | 295 |
| 11W | - | 2U | = | 55W | - | 305 |
| 15W | - | 2U | = | 75W | - | 315 |
| 20W | - | 3U | = | 100W | - | 430 |
| 26W | - | 3U | = | 130W | - | 460 |
| 55W | - | 4U | = | 300W | - | 1350 |

5W SPECIAL CHANDELIER LAMP - 285

REIMOO SONS LTD
88A, MAIN STREET, COL-11. TEL- 325060, 326643.
SHOP NO 11, NATIONAL HOUSING SCHEME, KIRIBATHGODA.
26, STATION ROAD, PANADURA.

# திருடர்களின் திருட்டு லீலைகள் அம்பலம்
# படமாளிகையில் அனாமதேயப் பொருட்கள்

வழிப்பறி, திருட்டு, மோசடி போன்ற சமூக விரோத கலாசாரங்களில் நாடு ஏதோ ஒரு வகையில் முன்னேற்றம் கண்டு வருகிறது என்பதற்கு இவை போதுமான சான்றுகள்.

கடந்த வாரம் இராமச்சந்திரா படம் பார்ப்பதற்காக சென்றிருந்தோம். அப்போது நாங்கள் தமிழ்க் கேசரியின் பத்திரிகையாளர்கள் என்பதை அறிந்து கொண்ட கெப்பிட்டல் திரையரங்கின் புதிய முகாமையாளர் எம்.சீ. எம்.ரபீக் எம்மை அவருடைய அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார்.

இப்படி ஆச்சரியமான தகவல்களையெல்லாம் அவர் சொல்லுவார் என நினைத்துக் கொண்டு நாம் உள்ளே செல்லவில்லை.






"சில விடயங்களை நான் ஆதாரப்பூர்வமாகக் காட்டினால் தான் நீங்களும், சமுகத்தினரும் ஏற்றுக் கொள்வீர்கள் எனக் கூறிவிட்டு சுமார் ஐம்பதுக்கும் அதிகமான பணப் பொதிகளையும், அறுபது எழுபது அடையாள அட்டைகளையும், பல நூற்றுக்கணக்கான வேறு ஆவணங்களையும் எம்முன் கொட்டினார்.

அவர் காட்டிய எல்லாமே அன்றாட வாழ்வில் உபயோகப்படுகின்ற பெறுமதியான பொருட்களே.

இவை பற்றி கெப்பிட்டல் படமாளிகையின் முகாமையாளர் ரபீக் எமக்களித்த தகவல்களை வாசகர்கள் நலம் கருதித் தருகிறோம்.

"இந்த அடையாள அட்டைகள், பணப்பொதிகள், ஆவணங்கள் எல்லாம் பொதுமக்கள் தறுவதலாகவோ, மறதியிலோ விட்டுச் செல்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டு கடந்த சில காலங்களாக சிரமம் பாராது நாம் உரியவர்களுக்கு அனுப்பி வந்தோம். காலப் போக்கில் தூர இடங்களைச் சேர்ந்தவர்களின் அடையாள அட்டைகளும், பணம் இல்லாத வெற்றுப் பொதிகளும், அனாமதேய ஆவணங்களும் மீதத் தொடங்கின.

சாதாரணமாக பட மாளிகைக்குச் சென்று படம் பார்க்குமளவுக்குத் தேகாரோக்கியமற்ற வயோதிபர்களுடைய, வயோதிபப் பெண்களுடைய அடையாள அட்டைகளும் எமக்குக் கிடைத்தன.

பொதுமக்களிடமிருந்து வழிபறித்து, திருடி பெறுமதியான பொருட்களையும், பணத்தையும் எடுத்து விட்டு மணி பேஸ்களை எமது படமாளிகையில் வீசி விட்டுச் செல்பவர்கள் வேறுயாருமல்ல, திருடர்கள் தான்.

இப்படிப்பட்ட திருடர்கள் எங்களுடைய திரையரங்கிற்கு மாத்திரமன்றி கொழும்பு நகரிலுள்ள சகல முன்னணித் திரையரங்குகளிற்கும் சென்று இவ்வாறே தாம் திருடிய பொருட்களிலிருந்து பெறுமதியற்றவற்றை வீசி விட்டுச் செல்கிறார்கள்.


இப்படிப்பட்டவர்களை இனம் கண்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கும் விதத்தில் எமது படமாளிகை நிர்வாகத்தையும், பாதுகாப்பு ஊழியர் பிரிவையும் நாம் தயார்ப்படுத்தியிருக்கிறோம்.

சில சமயங்களில் தூர இடங்களில் இருந்து வெளிநாடு செல்வதற்காக கொழும்பிற்கு வரும் தூரப் பிரதேசத்தைச் சேர்ந்த பெண்கள் முகவர் நிலையங்களில் கடமை புரியும் ஊழியர்களுடன் படம் பார்ப்பதற்காக வந்து உடமைகளை மறந்து விட்டுச் செல்கிறார்கள். சில வேளைகளில் பெறுமதி வாய்ந்த நகைகள், ஆடைகள் போன்றவற்றையும் இழந்து விட்டுச் செல்கிறார்கள்.

இப்படியான சந்தர்ப்பங்களில் கூட நாம் எமக்குக் கிடைக்கும் பொருட்களை சம்பந்தப்பட்டவர்களிடம் சமர்ப்பிக்கிறோம். இப்படிப்பட்ட திருடர்கள் அல்லது வழிப்பறிக்காரர்கள் படமாளிகையில் திருட மாட்டார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

எனவே படமாளிகைகளுக்கு வரும் பொதுமக்கள் தம்மைத் தாம் காத்துக் கொள்வதில் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும்.

திரைப்படப் பிரியர்கள், ஞாபக மறதி உள்ளவர்கள், அறிமுகமில்லாதவர்களுடன் படமாளிகைக்குச் செல்பவர்கள் ஆகியோருக்கு நிச்சயம் இது ஒரு முன்னெச்சரிக்கையாக அமையும்.





கெப்பிட்டல் படமாளிகையில் தங்கள் பொருட்களைத் தவற விட்டவர்கள் முகாமையாளருடன் தொடர்பு கொள்ளலாம்.

முகாமையாளர், எம்.சீ.எம்.ரபீக்
கெப்பிட்டல் திரையரங்கு.
ஆமர் வீதி.
கொழும்பு.

---

## தமிழ் மக்கள் சமாதானத்தின் பலனை நுகரவில்லை. புலிகளின் குற்றச்சாட்டை ஒப்புக் கொள்கிறார் ரணில்.

"இப்போது ஏற்பட்டுள்ள சமாதானத்தின் பயன்களை வடகிழக்குத் தமிழ் மக்கள் முழுமையாக நுகரவில்லை" என்று புலிகள் தெரிவித்த குற்றச்சாட்டில் உண்மையிருக்கிறதென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாக ஒப்புக் கொண்டிருக்கிறார். அண்மையில் இந்தியாவிற்கு விஜயம் செய்த போது 'இந்தியா டுடே' சஞ்சிகையின் கேள்விக்குப் பதில் கூறிய வேளையிலேயே இதனைத் தெரிவித்திருக்கிறார்.



பிரதமர் அந்த சஞ்சிகை க்கு அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது!

அரசுக்கும் - புலிகளுக்கும் இடையிலுள்ள இடைவெளிகளைக் குறைக்க வேண்டும். இரு தரப்புக்கும் இடையே புரிந்துணர்வை மேலும் வளர்க்க வேண்டும். அப்போது தான் நிரந்தரமான சமாதானத்தை அடைய முடியும்.

விடுதலைப் புலிகள் மீது நம்பிக்கை கொள்ள முடியுமா என்பதல்ல இப்போதுள்ள விடயம். இரு தரப்பாருக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வதே முக்கியமானது.

தற்போதைய சமாதான முன்னெடுப்புக்கள் மூலம் கிடைத்துள்ள பயன்களை வடபகுதி மக்கள் பூரணமாக நுகரவில்லை என்ற விடுதலைப் புலிகளின் குற்றச்சாட்டு உண்மையேயாகும்.

யுத்தத்தினால் வட-கிழக்கு நிர்வாகக் கட்டமைப்பு முற்றாகச் செயலிழந்து போயுள்ளது. இதனைச் சிறிய கால இடைவெளிக்குள் கட்டியெழுப்ப முடியாது. அது மிகவும் கஷ்டமான பணியாகும். எனினும் விரைவிலேயே வடக்கு-கிழக்கை வழமைக்குக் கொண்டு வரத் தேவையான எல்லா நடவடிக்கைகளும் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. வடக்கு-கிழக்குக்கான விஷேட திட்டங்கள் அமுல்ப்படுத்தவுள்ளன. அரசினால் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சியில் நல்ல நோக்கம் இருப்பதனால் சமாதான முன்னெடுப்புகள் வெற்றியைத் தரும் என்ற பரிபூரணமான நம்பிக்கை எம்மிடமிருக்கிறது.


---

## இலங்கையிலோ, ஈராக்கிலோ போர் வெடித்தால் இல்லாது போய் விடும் சம்பள உயர்வு.

"இலங்கையில் தற்போது தற்காலிக சமாதானம் நிலவுகிறது. போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அமெரிக்கா, ஈராக் மீதான போரைத் தவிர்க்க வேண்டுமென்ற குரல்கள் பலமாக எழுந்துள்ளன. இவற்றையும் மீறி இலங்கையிலோ, ஈராக்கிலோ போர் மூண்டால் நவம்பரில் வழங்க உத்திதேசிக்கப்பட்டுள்ள அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு சாத்தியமற்றதாகி விடும்!" என்று தெரிவித்திருக்கிறார் பிரதி நிதியமைச்சரும், கிராமிய, பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பந்துல குணவர்த்தன்.

எதிர்வரும் 2004ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படும் பொழுது சம்பள உயர்வை வழங்குவதற்கான யோசனைகள் இருப்பதாக நிதி அமைச்சு வட்டாரங்கள் கூறியுள்ளன. எதிர்வரும் ஜுன் மாதம் ஜப்பானில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் மகாநாட்டில் இலங்கைக்கு அதிகளவு நிதியுதவி கிடைக்க வாய்ப்புள்ளதால் அடுத்த ஆண்டு தொடக்கம் அரச ஊழியர்களுக்குச் சம்பள உயர்வொன்றை வழங்கச் சாத்தியமுள்ளது. எனினும் இலங்கையில் உள்நாட்டு யுத்தம் மூண்டாலோ, ஈராக்கில் போர் வெடித்தாலோ இந் தச் சம்பள உயர்வும் சாத்திய மில்லாது போய் விடுமென்றே பிரதி நிதி அமைச்சர் கூறியுள்ளார்.

---





புத்தளம் - பாலாவி எருக்கலம்பிட்டியில் அண்மையில் நடைபெற்ற மின்னொளி கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட வன்னிப்புனர்வாழ்வு அமைச்சர் நூர்டீன் மஷூர் உரையாற்றுவதை மேலுள்ள படத்திலும் சுற்றுப் போட்டியில் சம்பியனாக தெரிவான அணிக்கு அமைச்சர் வெற்றிக் கிண்ணம் வழங்குவதை கீழுள்ள படத்திலும் காணலாம்.

(படம்: அஹமட் கபீர்)

# விண்ணில் கரைந்த வீர மங்கை

அன்று பெப்ரவரி 1ஆம் நாள்.

அமெரிக்க நேரம் காலை 9.40. அன்றைய விடியல் கண்ணீரின் விடியல் என்பதை அறியாது புளோரிடாவில் உள்ள கென்னடி விண்வெளி மையம் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

எதிர்பார்ப்பு நிறைந்த கண்களும் கைகளில் மலர்ச்செண்டுகளுமாக முக்கியமான வருகையொன்றை வரவேற்க காத்து நிற்கின்றனர் சிலர்.

குறித்த நேரத்திற்கு 15 நிமி



டங்கள் இருக்கின்ற போது பேரதிர்ச்சி தரும் சம்பவம் நிகழ்ந்தது. தரைக்கட்டுப்பாட்டு நிபுணர்கள் பேராபத்தைத் தவிர்க்கும் பொருட்டு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட வண்ணம் இருக்கின்றனர்.

ஆனாலும் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன.

இதேநேரம் மணித்தியாலத்திற்கு 200,112 கிலோ மீற்றர் நொடிக்கு 8 கிலோ மீற்றர் (ஒலியைவிட பலமடங்கு அதிகம்) வேகத்தில் பூமியை நோக்கிப் பறந்து வந்தனால் அதன் வேகத்தை கட்டுபடுத்த வலது புறமும் இடது புறமும் அங்கும் இங்குமாக விண்வெளி வீரர்கள் விண்கலத்தை திசைமாற்றிக் கொண்டிருந்த அடுத்த நொடியில் உலகமே அதிர்ந்து போனது.

தரையில் இருந்து 200,700 அடி உயரத்தில் "கொலம்பிய" விண்கலம் கண்முன்னால் வெடித்து சிதறியது.

விண்ணுக்குச் சென்று வெற்றிக் களிப்போடு திரும்பிக்கொண்டிருந்த அந்த ஏழு விண்வெளி வீரர்களின் உடல்களும் வானோடு வானாக கலந்து போகின்றன. இவர்களின் வருகைக்காக காத்திருந்த சக விண்வெளி விஞ்ஞானிகள், இவர்களின் மனைவியர், பிள்ளைகள், உறவினர்கள் ஏன் கொலம்பியாவின் வருகையை தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருந்த முழு உலகமுமே கண்ணீர் விட்டு அழும்படியாக கண் முன் நடந்து முடிந்தது அந்த கோரம்.

மரணம் நிட்சயமானதுதான். சில மரணங்கள் நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்குகின்றன. இன்னும் சில மரணங்கள் முழு உலகத்தையுமே உலுக்கி விடுகின்றன.

இப்படியான ஒரு மரணம்தான் இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சால்வா கொலம்பியா விண்கலம் வெடித்து வான வெளியில் மரணமடைந்தது.

கல்பனாவுக்கு இது இரண்டாவது பயணம். பயணத்தை வெற்றியுடன் முடித்து பூமிக்கு திரும்பியிருந்தால் எவ்வளவு புகழ் அடைவாரோ அதை விட ஆயிரம் மடங்கு புகழ் அடைந்துவிட்டார் கல்பனா சவ்லா தனது வீர மரணத்தால்.

தனது மரணம் விண்வெளியிலே நிகழக்கூடும் என்று கல்பனா தனது குடும்பத்திடம் சொல்லியிருக்கிறார்.

எனவே கல்பனா விண்வெளிப் பயணத்தின்போது மரணங்கள் கூட சம்பவிக்கலாம் என்பதை அறிந்திருந்தும் மரணத்தை எண்ணி அஞ்சாமல் ஈடுபட்டிருக்கிறார்.

"வீரனுக்கு அழகு சாவுக்கு அஞ்சாமை" என்றபடி கல்பனா தனது மரணத்தை எண்ணி அஞ்சாமலேயே சென்றிருக்கிறார்.

கல்பனா சவ்லாக்கு சிறு வயதிலிருந்தே பைலட் ஆக வேண்டுமென்ற ஆசை இருந்தது. தனது ஆசையை பெற்றோரிடம் தெரிவித்த போது அவரது பெற்றோர்கள் அதை வரவேற்கவில்லை.

பைலட்டாவது, மண்ணாவது!

ஒரு டொக்டராவதற்கோ, இல்லை எஞ்சினியராவதற்கோ படி இல்லையேல் ஐ.ஏ.எஸ் படி என்று கடிந்து கொண்டனர்.

அன்று அந்தப் பெற்றோரின் ஆசைப்படியே நடந்திருந்தால் பல கோடி எஞ்சினியர்களில், டாக்டர்களில் ஒருவராக இருந்து யாருக்கும் தெரியாமலேயே வாழ்ந்து மறைந்திருப்பார் கல்பனா. இன்று உலகப் புகழ் சாதனையாக விண்வெளிக்குப் போய் வந்து கடமையிலேயே தனது உயிரை அர்ப்பணித்து இந்த உலகையே கண்ணீர் கடலில் ஆழ்த்திவிட்டார். இந்த விபத்தில் பலியான விண்வெளி வீரர் கல்பனா சவ்லாவுக்கு இது இரண்டாவது விண்வெளிப் பயணமாகும். ஐந்து வருடங்களுக்கு முன்னர் விண்வெளிக்குப் பயணம் செய்த முதல் இந்தியப் பெண் என்ற பெருமையை பெற்றிருந்தார். ஐந்து குழந்தைகள் கொண்ட குடும்பத்தில் கல்பனாதான் கடைக்குட்டி. இவரைத் தவிர இவரது குடும்பத்தவர்கள் இந்தியாவில்தான் வசிக்கிறார்கள்.

1994ம் ஆண்டு கம்பியூட்டர் என்ஜினியரான ஜே.பி.ஹரிஷன் என்பவரைத் திருமணம் செய்தார். தனது கடுமையான வேலை காரணமாக குழந்தை கிடைப்பதை தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தாராம் கல்பனா.

41 வயதான கல்பனா ஹரியானாவில் உள்ள கர்னால் என்னும் இடத்தில் பிறந்தார். 1994ம் ஆண்டு நாசாவில் வேலைக்குச் சேர்ந்தார். நாசாவில் இணைந்து கொள்வதற்காக உலகம் முழுவதிலும் இருந்து சுமார் 4000க்கும் அதிகமான விஞ்ஞானிகள் விண்ணப்பித்திருந்தார்கள்.

"இந்தியாவைச் சேர்ந்த உனக்கு அமெரிக்க விண்வெளி நிலையத்தில் வேலை கொடுக்க மாட்டார்கள்" என்று கல்பனாவின் உற்சாகத்தை கரைய வைக்கப் பார்த்தவர்களும் உண்டாம்.

முதன் முறையாக 1997ம் ஆண்டு விண்வெளியில் கல்பனா பறந்தபோது அவரது மேற்பார்வையில் இருந்த துணை "சற்றலைட்" ஒன்று கழன்று தனியாக பிரிந்து போய்விட்டதாம். அவரின் சக விண்வெளிவீரர்கள் வானிலேயே "ஸ்பேஸ் வாக்" செய்து அந்த உப சற்றலைட்டை மீட்டுவிட்டார்களாம். இது பற்றி கல்பனாவுக்கு கடைசி வரை மனவருத்தம் இருந்ததாம். "இதனால் என் விண்வெளிப் பயண வாழ்க்கைக்கே ஒரு முடிவு வந்துவிடுமோ என்று பயந்தேன். நல்ல வேளை எனக்கு மேலே பணிபுரிந்த விஞ்ஞானிகள் அதை பெரிது படுத்தவில்லை" என்று கல்பனா தனது நெருங்கிய நண்பர்களிடம் அடிக்கடி கூறுவாராம்.


விண்வெளி வீரர்கள்

அமெரிக்கா போயும் கூட வெஜிற்ரேரியனாக இருந்த கல்பனா இரு முறை விண்வெளி பயணம் செய்த போதும் பதப்படுத்தப்பட்ட அரிசி ச்சாதம், "டோர்டிலாஸ்" என்னும் ஒருவகையான சிப்ஸ், ப்ரோக்கலி, உலர்ந்த பழங்கள் ஆகியவற்றை த்தான் கொண்டு போனாராம்.

இந்திய பிரதமர் வாஜ்பாய் இரண்டு வருடங்களுக்கு முன்பு அமெரிக்கா சென்றிருந்தபோது பிரபலமான இந்தியர்களைச் சந்திக்க ஏற்பாடாகி இருந்தது. அதில் பிரதமரோ பார்க்க ஆர்வம் காட்டிய வி.ஐ.பி கல்பனாதானாம். பிரதமரிடம் ஒரு சிறு குழந்தை போல குதூகலித்துப் பேசினாராம் கல்பனா.

"இங்கே நான் வந்தாலும் என் இதயம் எல்லாம் இந்தியாதான். விண்ணில் இருந்து பாரதத்தின் கங்கை நதியின் அழகையும் இமய மலையின் அழகையும் பார்த்து பார்த்துப் பரவசப்பட்டேன்" என்று கல்பனா சொன்ன போது பிரதமர் நெகிழ்ந்து போனாராம்.

விபத்து நடப்பதற்கு சுமார் ஏழு மாதங்களுக்கு முன்னர் நியுயோர்க் நகரத்துக்கு கல்பனா வந்திருந்த போது இந்தியப் பத்திரிகையாளர்கள் அவரை சூழ்ந்து கொள்ள பாசத்தோடு இவர்களைப் பார்த்த கல்பனா,

"இங்கே அமெரிக்காவில் எல்லாத் துறைகளிலுமே இந்திய மூளைக்கு நல்ல மரியாதை அல்லவா?" என்று உற்சாகமாக கேட்டாராம்.

விண்வெளி ஆராய்ச்சி துறையில் எப்படி உங்களுக்கு ஆர்வம் ஈடுபாடு வந்தது? என்ற பத்திரிகையாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த கல்பனா,

நான் சிறு பிராயத்தில் இருக்கும் போதே விண்வெளி என்றால் எனக்கு அப்படி ஒரு ஆசை. மொட்டை மாடியில் அமர்ந்து வானத்தையே பார்த்துக்கொண்டிருப்பேன். நட்சத்திரங்களை எண்ணுவேன். இதைப் பார்த்த எனது நண்பர்கள் என்னை கேலி செய்வார்கள். ஆனால் எனக்கு மட்டும் வானில் இருந்து அழைப்பது போன்ற ஒரு குரல் கேட்டுக் கொண்டே இருக்கும் என்றாராம்.

சிறுவயதில் இருந்த அந்த பிரமிப்பு நிஜமாகவே விண்வெளியில் பறந்தபோது அடங்கியதா? என்று கேட்க,


கல்பனா சாவ்லா

பலமாக மறுத்துத் தலையசைத்தவாறு, அது தீர்க்கக் கூடிய பிரமிப்பா என்ன? விண்ணிலிருந்து நட்சத்திரங்களையும், பூமியையும் பார்க்கும் போது நாம் பூமியைச் சேர்ந்தவர்கள்தானா? அல்லது வேற்றுக் கிரக மனிதர்களா? என்றே ஒரு மயக்கம் கலந்த சந்தேகம் வரும் என்றார்.

1986ம் ஆண்டு டெக்ஸாஸ் மாநிலத்தில் உள்ள ஆர்லிங்கடன் பல்கலைக்கழகத்தில் விண்வெளி பற்றிய மேற்படிப்புப் படிக்க அட்மிஷன் கிடைத்ததே அதுதான் என் வாழ்க்கையின் பொன்னான நேரம். ஒரு குழந்தையைப் போல குதூகலித்தேன். கொலரோடா பல்கலைக்கழகத்தில் எனது டொக்ரரேஜ் படிப்பை வெற்றி கரமாக முடித்தபோது எனது விண்வெளிக் கனவுகள் வசப்படும் என்று முழு நம்பிக்கை வந்துவிட்டது என்றார் அவர்.

விண்வெளிக்குப் பயணம் செய்த முதல் இந்தியப் பெண் என்ற பெருமையையும், விண்வெளியில் சுமார் 65 இலட்சம் மைல்களில் பறந்த ஒரே ஆசியர் என்ற பெருமையையும் சாதித்த கல்பனா சவ்லா அந்தரத்திலேயே தீப்பிழம்பில் கலந்து போவார் என்பதை யார்தான் நினைத்துப் பார்த்திருப்பார்கள்.

முழு ஆசியாவுக்குமே பெருமையைத் தேடித் தந்த கல்பனா சவ்லாவின் உடல் வானோடு கரைந்து போனாலும் அவரின் இலட்சிய தாகத்தை சுமந்தபடி ஆயிரம் ஆயிரம் கல்பனா சவ்லாக்கள் தோன்ற வேண்டும்.

**–கே.சிவா**

---

# கவுண்டமணி-செந்தில்-வடிவேலுவின் கலகலக்கும் கலாட்டா டீ கடை

**கவுண்டமணி:** டேய்... டேய்... டீசல் வாயா... மரியாதையா நீ குடிச்ச டீக்குப் பைசாவவச்சிட்டுப் போ. இல்லைன்னா மவனே... மாடு சப்பின பனங்காய் மாதிரி இருக்கிற மண்டைய ஒடைச்சுப் போடுவேன்... ஆமா... சொல்லிப்புட்டேன்.



**வடிவேல்:** அண்ணே... ஏன்னே இப்புடி அவரைத் திட்டுறீங்க. அமெரிக்காவிலேர்ந்து அவருக்குப் பணம் வரப் போகுதுன்னுதான் சொல்லிட்டாரே. அப்புறமா, வாங்கிக்கிறது...

**கவுண்டமணி:** டேய்... சும்மாருடா. அப்புறம் உன்ன நான் கன்னாபின்னான்னு திட்டிடுவேன்...

(அந்நேரத்தில் அந்த டீக்கடையின் முன்பு ஒரு பென்ஸ் கார் வந்து நிற்கிறது. அதிலிருந்து யூனிபோர்ம் அணிந்த ட்ரைவர் இறங்கி வருகிறார்.)

**ட்ரைவர்:** வணக்கம்...

**கவுண்டமணி:** ம்...ம்...

**செந்தில்:** அண்ணே... அவரு வணக்கம்னு அஞ்சு எழுத்தில அழகாய்ச் சொன்னாரா, இல்லியா? நீங்க என்னன்னா, ம்...ம்...னு ஒரே எழுத்தை ரெண்டு தரம் சொல்றீங்களே... இது உங்களுக்கே நல்லாயிருக்கா?

**வடிவேல்:** அப்படிக்கேளுங்கண்ணே...! இவுரு சம்பளம் தர்ரத்துலதான் வடிகட்டின கஞ்சன்னு நெனைச்சுக்கிட்டிருந்தேன். ஆனா, இப்பதான் தெரியுது, வணக்கம் சொல்றதுலயும் கஞ்சன்னு...

**கவுண்டமணி:** டேய்... மரியாதை... மரியாதை! இல்லேன்னா வேலய விட்டே தூக்கிடுவேன்...

**ட்ரைவர்:** வந்து... இங்க மிஸ்டர் செந்தில்னு...

**கவுண்டமணி:** மிஸ்டர் செந்திலா? அப்படி ஒருத்தரும் இங்க இல்லியே...!

**வடிவேல்:** அண்ணே மிஸ்டர் செந்தில்னா திருவாளர் செந்தில்னு அர்த்தம். இதோ... நம்ம செந்தில் அண்ணனைத்தான் இவுரு கேக்கிறாரு போல...

**கவுண்டமணி:** அட போடா, கரிச்சட்டி வாயா... ம்மாம் பெரிய காரில, இப்புடி சிறப்பான சீருடையோட ஒரு ஆள் வந்து இந்த பேமானியையா தேடுவாங்க?

**செந்தில்:** அண்ணே... சும்மா இருங்கண்ணே... நானே பேசிக்கிறேன் (ட்ரைவரைப் பார்த்து) யேஸ்... இங்க மிஸ்டர் செந்தில்னு எங்கிறது நான்தான். உங்களுக்கு என்ன வேணும்?

**ட்ரைவர்:** வந்து... அமெரிக்காவிலேர்ந்து மிஸ்டர் புஷ் உங்களைச் சந்திக்கிறதுக்கு வந்திருக்கிறாரு...

**கவுண்டமணி:** (வாயைப்பிளந்து கொண்டு) என்ன சொன்னீங்க...? அமெரிக்காவிலேர்ந்து புஷ்ஷா... நான் என்னமோ இத்தினி நேரமும் இந்தக் கோமுட்டித் தலையன் ரீல்வுடுறான்னுல்லே நெனைச்சேன்... சேச்சே...! புஷ்ஷு தேடி வந்தவரு இந்த செந்திலா இருக்காது ட்ரைவர். ஏன்னா, இந்த கிராமத்துல எத்தினையோ நல்லநல்ல செந்திலெல்லாம் இருக்காங்க. அவங்கள்ள யாரையாவதுதான் தேடி வந்திருக்கோணும்...



**ட்ரைவர்:** (செந்திலைப் பார்த்து) உங்க புல் நேம் என்ன?

**செந்தில்:** பச்சையப்பன் செந்தில். அதான் என்னோட முழுப்பேரு...

**ட்ரைவர்:** அப்புடீன்னா, சரி... மிஸ்டர் புஷ் தேடி வந்த ஆளு நீங்களேதான் ..

**வடிவேல்:** அண்ணே... நான் முன்னாடியே சொல்லலே, இவுருக்கு அதிர்ஷ்டம் அடிக்கப் பேகுதுன்னு. நீங்கதான் நம்பலே. இப்ப பாருங்க. அந்த புஷ்ஷே தேடி வந்திருக்கிறாரு...

**கவுண்டமணி:** (செந்திலைப் பார்த்து) செந்தில் சார்... செந்தில் சார்... என்னை மன்னிச்சுக்குங்க செந்தில் சார்... நீங்க குடிச்ச டீக்கு ஒரு நயா பைசா கூட வாணாம் செந்தில் சார்... வேணுமுன்னா, இன்னொரு டீ நல்ல ஸ்ட்ராங்கா போட்டுத் தரட்டுமா செந்தில் சார்...?

**செந்தில்:** ஷ் ஷ் ஷ் ... இப்படிப் பச்சோந்தி மாதிரி நிறத்தை மாத்துற ஆக்களை எனக்குப் பிடிக்காது. நீங்க என்னைத் திட்டி இருந்தாக்கூட உங்களை மன்னிக்கலாம். ஆனா, என்னோட தலையை, என்னோட கலரை, என்னோட உடம்பைத் திட்டிட்டீங்க. இதுக்காக உங்களுக்கு நான் நல்ல பாடம் ஒன்னு படிப்பிக்காம விடப் போறதில்லை.

**கவுண்டமணி:** செந்தில் சார்... அப்படியெல்லாம் சொல்லாதீங்க செந்தில் சார்... ஏதோ தமாஷுக்கு நான் உங்களைத் திட்டிட்டேன் சார்... வேணுமுன்னா, உங்க கால்ல விழட்டுமா செந்தில் சார்?

தொடரும்....

# காதலோடும் அரசியலோடும் கலந்துவிட்ட தூதிலக்கியங்கள்

**சென்ற வாரத் தொடர்...**

நூல்களும் தமிழில் பல உள்ளன. வனச விடு தூது (தாமரை), நெல்விடு தூது, பணவிடு தூது, விறலிவிடு தூது என்பன புதுமைப் பொருள்களைக் கொண்டவை. தமிழையும் தூதுப் பொருளாக்கியுள்ளார் ஒரு புலவர். தவிர அன்றில், இருவாட்டி, குவளை, சண்பகம், பாரிசாதம், பிச்சி முதலியவற்றின் மலர்களும் புரவு, பொன் முதலியனவும் தூதுக் குரியனவாகக் கவிஞர்கள் புலப்படுத்தியுள்ளார்கள். புகையிலை விடு தூது என்ற பிரபந்தமும் பிற்காலத்ததாகக் காணப்படுகிறது.

காதல் நிகழ்ச்சியான தூது பிரபந்தங்கள் இன்பமும் மகிழ்ச்சியும் தருபவை. தவிர பகைவர் மேல் வசை மாரி பொழியவும் புலவர்கள் இத்தூதினைப் பயன்படுத்தியுள்ளார்கள். செருப்புவிடு தூது கழுதை விடு தூது என்பன வசைத் தூதுகளாகும்.

தூது இலக்கியங்கள் தூது விடப்படும் பொருளின் பெயரைச் சார்ந்தே பெயர் பெறும். எந்த வகையான பொருளை கவிஞன் தூதுக்குரிய பொருளாகத் தேர்ந்தெடுத்தாலும் அப்பொருளைத் தாம் தேர்ந்தெடுப்பதற்குரிய சிறப்புக்களை எடுத்தியம்பும் பகுதி அவருடைய அறிவாற்றலைப் புலப்படுத்தும் பகுதியாகும். தூது செல்லவிருக்கும் பொருளின் சிறப்புக்களை எடுத்துப் பேசுவது ஒரு புறமாக, பிறபொருள்களைத் தூதுவிடின் அவை திறம்பட எடுத்துச் சொல்லும் ஆற்றல் இல்லன என அவற்றிற்கு சில குறைகளைக்கற்பித்து விலக்கும் பாங்கும் கவிஞரின் திறனைக் காட்டுவதாகும்.

கம்பராமாயணமும் தூது பற்றி சுவைபடச் சொல்லி நிற்கிறது. பாலகாண்டத்தில் பதினெட்டாவது படலத்தில் வரும்:

"மானமர் நோக்கியோர் மதுகை வேந்தன் பால்..." என்ற பாடலில் தூதை நகைச்சுவை உணர்வுடனும் சுவாரஸ்யத்துடனும் சுவை படச் சொல்லியுள்ளார் கம்பர். ஒரு பெண் தன் கணவனுக்கு நன்கு அறிமுகமான தோழியர் பலரோடு குடித்துக் கொண்டிருந்தாள். குடிமயக்கத்தில் தன் கணவனைச் சேர வேண்டும் போல் ஆசை வந்தது. அவனை அழைத்துவரும் படி ஒரு தோழியை அனுப்பினாள். அவள் போய்க் கொண்டிருக்கும் போதே மனது தாங்காமல் இன்னொரு தோழியை அனுப்பினாள் மற்றொரு தோழியையும் அனுப்பினாள். இப்படியே எல்லாத் தோழியரையும் அனு ப்பி விட்டாள். திரும்பிப் பார்த் தாள் இனித்தூது போக யா ரும் இல்லையென்றவுடன் தாமாக எழுந்து நடக்கலானாள். போன தோழியர் ஏன் திரும்பி வரவில்லையாம்! அவர்கள் எல்லோருமே அவனை விரும்பினராம். அதுதான் காரணம்.

இதேபோல் நளவெண்பாவிலே அன்னம்விடு தூது என்ற ஒரு தனி அதிகாரமே உண்டு. நளனிடத்தில் அகப்பட்ட அன்னம் அவனிடம் தமயந்தியின் சிறப்புக்கள் பற்றி எடுத்துரைத்தது. அதனால் தமயந்தி மீது ஏற்பட்ட காதல் மேலீட்டால்

"இனி என்னுடைய வாழ்வு உன் வாய்ச் சொற்களின் இடமாகவே இருக்கிறது. என்று அன்னத்தை தூது போக அனுப்பிவைக்கிறான் நளன் என்று ஆசிரியர் கருத்தாக அமைகிறது.

"இற்றது நெஞ்சம் எழுந்த திருங்காதல்..." என்ற பாடல் வரிகள் இதனை உணர்த்தி நிற்கின்றது.



நளனிடம் இருந்து அன்னம் தமயந்தியிடம் செல்கின்றது. அங்கு நளனுடைய குண நலன்களைப் பற்றிக் கூறியதும் தமயந்தி அன்னத்திடம் இவ்வாறு கூறினாள்.

**'வாவியுறை மட வன்னமே**
**என்னுடைய**
**ஆவி உவந்தளித்தாய்**
**ஆதியால்~**
**காவினிடைத் தேர் வேந்தற்**
**கென்னிலைமை சென்றுரைத்தி**
**என்றுரைத்தாள்."**

அதாவது நளன் மேல் கொண்ட காதலால் துடித்த தமயந்தி மலர்ப் பொய்கையிலே வாழுகின்ற இளம் பருவத்து அன்னப் பறவையே பூஞ்சோலையினிடத்தே இருப்பதாக நீ கூறிய அந்த தேர் வேந்தனுக்கு என்னுடைய இந்த நிலையினையும் போய்ச் சொல்லுவாயாக அங்ஙனம் நீ சொல்வாயானால் என்னுடைய உயிரினை எனக்கு விருப்பத்துடன் அளித்தனையாவாய். அதாவது நீ அங்கு சென்று சொல்லாவிட்டால் உயிர் என் உடலில் தரியாது என்றாள்.

நளவெண்பாவிலே நளன்- தமயந்தி அன்னத்தைத் தூது விட்டது சிறப்பிடம் பெருவது குறிப்பிடத் தக்கதாகும்.

இப்படி இலக்கியங்களில் தூது சுவை படவும் சிறப்பாகவும் இடம் பெற்றிருப்பதோடு ஈழத்து இலக்கியங்களில் கூட இவற்றை நாம் சிறிதளவில் காணமுடிகிறது. சந்திரசேகர பண்டிதரால் இயற்றப்பட்ட நல்லூர் கந்தசுவாமி கிள்ளை விடு தூது வரத பண்டிதரால் இயற்றப்பட்ட காங்கேசன்துறை குருநாத சுவாமி கிள்ளை விடுதூது, அச்சுவேலி நமசிவாயப்புலவர் பாடிய பஞ்சவர்ணத்தூது இவை மூன்றும் இறைவன் மேற்பாடப்பட்டவையாக இருக்கின்றன. ஆனால் தி.த.சரவண முத்துப்பிள்ளையின் தத்தைவிடு தூது என்பது மட்டுமே காதல் தூதாக அமைகிறது. இது மிகவும் சுவையுடைய ஒரு பிரந்தமாகும்.

**தேனாங்கு பூம் பெதும்பர்ச்**
**செறிந்து பசுந் தழைப்பரப்பி**
**வானோங்கு தேமாவில்**
**வாழுமிளம் பைங்கிளியே**
**மானேங்கு மைவிழியென்**
**வஞ்சியிடைப் பைந்தொடிபால்**
**நானீங்கு புகலுமொழி**
**நற்கிளியே கூறாயே**
**நங்கையவள் பாற் சென்று**
**நலம் பெற நீ கூறாயே.**

என்ற இப்பாடல் தத்தைவிடு தூதில் ஒரு பகுதியாகும்.

அண்மையில் இந்தியக் கலைஞர்களும் இலங்கைக் கலைஞர்களும் அதிகளவில் தூதுக் கவிதைகளை இயற்றியிருப்பதோடு புதுப்புது யுக்திகளையும் கையாண்டு தூதுப்பாடல்களின் சுவையை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளார்கள்.

பாரதிதாசனின் தோழியே சொல்வாய் என்ற கவிதையிலே தன் தலைவனுக்குத் தோழியைத் தூது விடுகிறாள்தலைவி.

**காசு பணம் வேண்டாமடி**
**தோழியே ~ அவன்**
**கட்டழகு போதுமடி தோழியே...**
**ஒன்றெனக்குச் செய்திடடி**
**இப்போதே ~ நல்ல**
**ஒத்தாசை ஆகுமடி தோழியே...**
**அன்றெனக்குக் காட்டித் தந்த**
**கண்ணாளன் ~ கொஞ்சம்**
**அன்பு தந்து போகச் சொல்வாய்**
**தோழியே!**

என தனது தலைவனை தன்னிடம் வரும்படி தூதனுப்புகிறாள் தலைவி.

***தூது இன்னும் வரும்...***

***-கார்த்திகா-***

# கண்களுமான ஹாஷிம் உமர்


முதற்பிரதி வாங்கும் முதல்வரானீர்
முத்தமிழ் மட்டுமன்றி
மும்மொழி நூலையும்
முழுமையாய்த் தான் படித்து
அதில் மூழ்கும்
நூல்(ஆழ்)கடல் முத்தானீர்.

பதவிகள் பல வகித்து
பட்டங்கள் பெற்ற போதும்
பாசம் மாறாத - உம் இதயத்தில்
நாம் அன்பின் ஆழத்தை
எவ்வாறு அளவிடுவது!

அள்ளி அள்ளி நீர் கொடுக்க இங்கு
அடைமழையாய் பொழிகிறது
எம் கண்ணீர் துளிகள்
அல்லாஹ்விடம் உமக்காக

இவ்வுலக வாழ்விலே
இனிய பயன் பெற்றிட
இவ்வாறு நீர் செய்யும்
எல்லையற்ற சேவைகள்
மறுமை நாள் வரை
மாற்றம் ஏதுமின்றி தொடரட்டும்.

மனதில் ஓயாது
எழுகின்ற கவியலையில்
சில வரிகளைக் கரைசேர்த்து
பேனை முனை தொடுத்து
பேணுதலாய் இவ்வேட்டில்
பேதை நான் வடித்து
விட்டேன் - இன்னும்
வரிகளைக் கூட்டலாம் - என்
கரம் ஓய்வு கேட்க
என் பேனை எழுத மறுத்திட
கவலைகள் சிறிதினை
மனதிலே தேக்கி விட்டு
வைக்கின்றேன் இக்கவிக்கு



இலங்கை வந்திருந்த பிரபல பின்னணிப் பாடகரும் நடிகருமான எஸ்.பி.பாலசுப்ரமணியம் ஹொலிடே இன் ஹோட்டலில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் புரவலர் ஹாஷிம் உமருடன் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.

(படப்பிடிப்பு:எம்.பிரபாதரன்.)

ஓர் முற்றுப்புள்ளி.

ஹுஸ்னியா யாக்கூப்பின் இந்தக் கவிதையைப் போல். புலவர் ஹாஷிம் உமருக்கு ஏராளமான கவிஞர்களிடமிருந்து கவிதைகள் வாழ்த்துக்களாகவும், பிரார்த்தனைகளாகவும் வந்து குவிந்திருக்கின்றன. அக்கவிதைகளில் ஒரு சிலவற்றை அவ்வப்போது இத்தொடரிற் சேர்க்கவும் எண்ணியுள்ளோம்.

**கள்ளங் கபடமற்ற உள்ளம்**

மனிதநேய மாமணியான புரவலர் ஹாஷிம் உமர் 1978ல் தனது நண்பர் ஹாஜி முஹம்மட் இக்பாலுடன் மிகவும் நெருக்கமாகிறார். உதைப்பந்தாட்டப் போட்டிகளைப் பார்க்கச் செல்வது, சினிமாப் படங்களுக்குப் போவது, தேர்தல் காலங்களில் வானொலி, தொலைக்காட்சிகளில் ஒலிபரப்பப்படும் தேர்தல் முடிவுகள் பற்றிய அறிவித்தலை விடியவிடியக் கேட்பது போன்றவற்றிலெல்லாம் ஹாஜி முஹம்மது இக்பாலுடன் புரவலர் ஹாஷிம் உமர் இரண்டறக் கலந்து ஈடுபடுகிறார். அது மாத்திரமன்றி, வானொலியில் ஒலிபரப்பப்படும் உங்கள் விருப்பம், நீங்கள் கேட்டவை போன்றவற்றுக்கும் பாட்டுக் கேட்டு எழுதுவதும் இவ்விருவரது பொழுது போக்காக இருந்தது. அத்தோடு முன்னர் வெளியான வானொலி மஞ்சரி சஞ்சிகையில் பிரசுரமான கூப்பன்களை நிரப்பி அனுப்புவதற்கும் இவர்கள் தவறுவதில்லை.

மிகவும் தெளிந்த, குளிர்ந்த பரந்த மனமே நமது கண்களுமான ஹாஷிம் உமர் அவர்களுடையது என்பதை அவரது மேற்கண்ட சின்னச் சின்ன ஆசைகள் மூலம் புரிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

(ஹாஷிம் உமர் வருவார்)

# தூறல்

"இடி" இடையிலே நிறுத்தப்பட்டது என்னை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. ஆனால்... "இடி" தமிழ் இடியாய், தமிழின் தன்மான முழக்கத்துடன் "தமிழ் கேசரி"யாய் வெளிவந்து அசத்தியது என்னை. வீரத்தமிழினத்திற்கு, செந்தமிழின் செறிந்த கருத்துக்களை செய்திகளாய் வாரி வழங்கி தமிழரின் நெஞ்சங்களில் என்றென்றும் நீங்கா இடம் பிடிக்க வாழ்த்துகின்றேன், இந்த "தமிழ் நேசன்",

—கா.சுபாஷ்,
டிக்கோயா.

நீண்ட நாட்களின் பின் பத்திரிகைக்காக என்னை எழுதத் தூண்டிய "இடி" தமிழ்கேசரிக்கு எனது நன்றிகள். அத்தோடு தங்களின் மேலான பத்திரிகை மீண்டும் வெளி வந்தமையால் நானடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. எம் போன்ற இளைஞர்களின் எண்ணங்களை, ஆற்றல்களை வெளிக்கொணர்ந்த ஒரே பத்திரிகை எமது இடியாகும். இடையில் நிறுத்தப்பட்டமையால் நாமும் இடிந்தே போய் விட்டோம். தற்போது புத்துயிர் பெற்றுவிட்டது போல் ஓர் உணர்வு.

அத்தோடு, ஒரு சின்ன மன வருத்தமும் உண்டு. காரணம் எமது "இடி" யின் பெயர் மாற்றமே! இவ்வளவு பிரபல்யமும், சிறப்பும் பெறுவதற்கு "இடி" என்ற பெயரும் ஒரு காரணமாய் அமைந்தது என்பதை நாம் மறுக்கவோ, மறைக்கவோ முடியாததொன்றாகும். "இடி" என்ற பெயர் மற்றைய தமிழ் பத்திரிகைகளிலிருந்தும் வித்தியாசப்பட்டதாகும். பெயர் மட்டுமன்றி அதன் அம்சங்களும் வித்தியாசமான தாகவே அமைந்திருக்கிறது. இப்பெயரில் அசௌகரியப்படுவதற்கு என்ன உண்டு? "அதிரடி, அசத்தல், ஆச்சரியம்" என்பன தமிழ்கேசரியை விட "இடி"க்குத் தான் ரொம்ப பொருத்தம்.

இவற்றோடு, "YU கில்" தொடர் கதையின் எழுத்தாளரின் பெயரையும், தியானம் போன்ற தொடர்களுடன், யோகாசனம் போன்றவற்றையும் சேர்த்துக் கொண்டால் மிகவும் பிரயோசனமாய் அமையுமென நம்புகிறோம்.

"இடி" மென்மேலும் சிறக்க எமது வாழ்த்துக்கள்.

என்.அஜாந்தா,
பதுளை.

என்றும் என் நெஞ்சில் நிறைந்திருக்கும்...
"இடி" தமிழ்கேசரிக்கு...
எங்கே... சென்றிருந்தாய்...
எம் ஒருவரிடமும் சொல்லாமல்...
நீ... இல்லாததால்...
தாய் மகனைப் பிரிந்த ஏக்கம்...!
காரணமே... இல்லாமல்
பிரிந்து போன...
"காதலி"யின் துயரம்...!
உன்னைக் காணாததால்
நான் வாடிக்கிடக்கின்றேன்...
காலில் மிதிபட்ட பூவாய்...
கசங்கித் துடித்தேன்...!
கார்கால மேகமாய்த் தோன்றி
காயங்களை ஆற்றிவிட்டாய்...!
எனக்கு மட்டுமல்ல
என்னைப் போலவே உன்னை நேசிக்கும்
எல்லா கலைஞர்கள் மனதிலும்...
நீங்காத இடம் பிடித்து விட்டாய்...!
இனி எம்மைவிட்டுப் பிரியாமல்
இணைந்திருக்க வேண்டி
இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்...!
நன்றி
"இடி" தமிழ்கேசரியின் ஆஸ்தான கலைஞன்

—எஸ்.தமிழாம்பிகை
ஜெகன்,
நானாட்டான்.

அசத்தலான அட்டைப் படத்துடன் வெளியான இடி-தமிழ் கேசரியே! உனது அத்தனை பக்கங்களும் திரும்பத் திரும்ப என்னை வாசிக்கத் தூட்டுகிறதே என்ன மாயம்?

எம்.துர்க்கா
வெள்ளவத்தை

# துணுக்கள்

ஏ.டிரோன்

## கடைசி ஆசை

ஒரு கிறிஸ்தவ பாதிரியார் மரணப் படுக்கையில் இருக்கிறார். "பாதிரியார் மரணப்படுக்கையில் இருக்கிறார். அவர் இறக்கும்போது நீங்கள் இருவரும் அவர்கூட இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்" என்று ஆலய நிர்வாகிகள் இரண்டு பேருக்குத் தகவல் அனுப்பப்பட்டது.

அவர்களும் வந்தார்கள். ஆனால் ஏன் பாதிரியார் அவர்களைக் கூப்பிட்டார் என்பது மட்டும் அவர்களுக்கு விளங்கவில்லை. அதை துணைக்கு இருந்த இன்னொரு பாதிரியாரிடம் கேட்டார்கள். அவர் சொன்னார். "இவர் இறக்கும்போது இயேசு நாதரைப் போலவே இறக்கவேண்டு மென்று விரும்பினார் அதனால்தான்" என்றார். இவர்களுக்குப் புரியவில்லை. அதனால் அவர் விளக்கமாகச் சொன்னார்.

"இயேசுநாதர் இறக்கும்போது அவர் இரண்டு கள்வர்கள் நடுவில்தானே சிலுவையில் அறையப்பட்டார். அதுபோலவே உங்கள் நடுவில் உயிர்விட அவர் ஆசைப்பட்டார்!!!


உங்கள் ரசித்த படங்கள், நகைச்சுவைத் துணுக்குகளைப் பின்வரும் ஈமெயில் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
diron@musician,org


## பட்டனுக்குப் போட்டியாக

இன்று பெரும்பாலான ஆடைகளில் உபயோகப்படுத்தப்படும் சிப் (Zip) 1891இல் அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டது. பட்டன்கள் உள்ள சட்டைகளைப் போடவும் கழற்றவும் நேரம் அதிகமெடுப்பதால் சுறு சுறுப்பை விரும்பும் அமெரிக்கர்கள் மத்தியில் இந்த சிப் விரைவில் பிரபலமானது. ஆனால் ஆரம்பத்தில் செய்யப்பட்ட சிப்புகள் நம்பகமாக வேலைசெய்யவில்லை. பின் 1913 இல் சுவீடன் நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட சிப் தயாரிக்கும் இயந்திரத்தால் உறுதியான சிப்புகள் தயாரிக்கப்பட்டன. இப்போது நாம் பாவிக்கும் சிப்புகள் இந்த வகையில் சேர்ந்தவைதான்.

## சிரிப்புக்குக் காரணம்

ஆஸ்பத்திரி ஒன்றின் சவ அறையில் இரண்டு பிணங்கள் சிரித்த முகத்துடன் காணப்பட்டன. விசாரணைக்கு வந்த பொலிஸார் "இவர்கள் எப்படி செத்தார்கள்? ஏன் சிரித்த முகத்துடன் இறந்தார்கள்" என்று கேட்டபோது அங்குள்ள ஊழியர் ஒருவர் விளக்கம் சொன்னார். "முதலாமவருக்கு 25 வயது. லொத்தர் சீட்டில் 50 லட்சம் பரிசு கிடைத்தது. சந்தோஷத்தில் அளவுக்கதிகமாகக் குடித்துவிட்டு கத்தி சிரித்தபோது மாரடைப்பு வந்து இறந்துபோனார்." இரண்டாமவர் தான் கொஞ்சம் வித்தியாசமான கேஸ். 30 வயது இடி விழுந்து செத்துப்போனார்." பொலிசாருக்குக் குழப்பம்... "இடி விழுந்து செத்தது சரி. அது எப்படி சிரித்துக்கொண்டு செத்திருக்கிறார்?" என்று கேட்க ஊழியர் சொன்னார். "அதொன்றுமில்லை சேர், இவரு மேல இடி விழுறதுக்கு முன்னால மின்னல் அடிச்சிருக்கு இவரு யாரோ போட்டோ எடுக்குறாங்கன்னு நினைச்சு சிரிச்சிருக்கார்!"





# நெட்டில் சுட்டவை



எக்ஸ்கியூஸ்மீ... உங்க லைசன்ஸ்ச கொஞ்சம் பார்க்கலாமா?



உனக்கு மட்டும் சொல்றேன் வேறு யாருக்கும் சொல்லிறாத...!!




இடம் மாறி வந்துட்டனோ?



என்ன தைரியம்?

# கணவரை வசப்படுத்த

உங்களையும், உங்கள் குழந்தைகளையும் காப்பாற்றுவதோடு மட்டுமல்லாமல் குடும்ப வளர்ச்சிக்காக எத்தனை பாடு படுகிறார் அவர். அவருக்காக சின்னச்சின்ன விஷயங்களில் நீங்கள் உதவுவதன் மூலம் உங்களவரின் மனதை குளிரச் செய்யாலாமே! அப்போதுதானே அவருக்கு உங்கள் மீது ஒரு 'இது' வரும்.

கணவர் ஷேவிங் செய்கிறாரா? அந்த சமயத்தில் தொண, தொண வென்று எதையாவது பேசாதீர்கள். ஷேவ் செய்து முடித்ததும் தேங்காய் எண்ணெய் எடுத்து கொடுத்து முகத்தில் தடவச் சொல்லுங்கள். லோசனை விட இது முகத்துக்கு நல்லது. முன் னதாக அவர் ஷேவிங் செய்ய போகிறார் என்றாலே, அதற்குரிய அயிட்டங்களை நீங்களே முன்வந்து எடுத்துக் கொடுங்கள்.


உங்களவர் குளிக்கச் செல்லும் போது நிச்சயமாய் காக்காய் குளியல் தான் செய்வார். ஆகவே வாரத்துக்கு ஒருமுறை வெட்கப்படாமல் அவருக்கு நன்கு முதுகு தேய்த்துவிடுங்கள்; தப்பில்லை.

மாதத்தில் ஒரு நாள் உங்கள் கணவரின் உடைகளையெல்லாம் செக் செய்து கிழிந்த இடங்களை தையுங்கள். அவரின் காலணிகளை நன்கு கழுவி வெயிலில் உலரவைத்து எடுங்கள்.

கணவரிடம் பேசும்போது முக்கியமாக அவரது படிப்பு, வேலை, வருமானம் ஆகியவற்றை, பிறரோடு ஒப்பிட்டு பேசாதீர்கள். இது யாருக்கும் தகா எரிசசலை ஏற்படுத்தும்

அவருக்கு எது மிகவும் பிடித்த உணவோ அதை அவ்வப்போது செய்து கொடுத்து அசத்துங்கள்.

அவர் உங்களுக்காக எதைச்



செய்தாலும், எதை வாங்கி வந்தாலும் ஆஹா! ரொம்ப ஜோர் என்றே புகழுங்கள். ஹும்.... இது எதுக்கு? என்று ஒரு மாதிரி மூஞ்சியை இழுத்து இகழாதீர்கர்.

அவர் அலுவலகம் செல்லும் போதோ, அல்லது வீடு திரும்பியதுமோ எந்த விஷயத்தையும் பேசாதீர்கள். அவருக்கு சிறிது ரிலாக்ஸ் தேவை.

உங்கள் கணவரோடு அவரது நண்பர்களையோ, அல்லது உறவினர்களையோ பார்க்கப்போனால், போன இடத்தில் உங்கள் கணவரைப்பற்றி புகார் சொல்லிக்கொண்டு இருக்காதீர்கள் புகழாரம் சூட்டி பெருமைப்படுத்துங்கள்.

இரவு தூங்கச் செல்லும் முன் அவர் மறுத்தாலும் பக்கத்தில் அமர்ந்து கொண்டு அவரது கை, கால்களை இதமாக அமுக்கி விடுங்கள். மேல் - கால்வலி இல்லாத மனிதனே இல்லை.

மாலையில் அவர் வீடு திரும்பும்போது சுத்தமான ஆடையுடன், தலை நிறைய பூ வைத்த பளிச் என்ற புன்னகை முகத்துடன் இருங்கள். இது போதும்.... உங்கள் கணவரின் முகத்தில் எப்போதும் அந்த புன் சிரிப்புக்கு!

# ரவை இனிப்பு அடை

## தேவையானவை

ரவை : அரை கிலோ
சீனி : 2 கப்
தேங்காய் : ஒரு மூடி
முந்திரிப் பருப்பு : 10 கிராம்
ஏலக்காய் : 5
நெய் : 50 கிராம்
உப்பு : 1 சிட்டிகை

## செய்முறை :

தேங்காய் மூடியை துருவிக் கொள்ளவும். ஏலக்காயை பொடி செய்யவும். முந்திரிப்பருப்பை சிறு, சிறு துண்டுகளாக்கி, சிறிதளவு நெய்விட்டு வறுத்துக் கொள்ளவும். ரவையுடன் ஒரு சிட்டிகை உப்பு சேர்த்து தண்ணீர் சிறிது, சிறிதாக விட்டுப் பிசைந்து கொள்ளவும். தண்ணீர் அதிகமாக சேர்க்கக் கூடாது. மாவில் போட்டு நன்கு பிசைந்து, இரண்டு மணி நேரம் வைத்திருக்கவும். ரவை நன்றாக ஊறி சேர்ந்ததும், தேங்காய்த் துருவலை சேர்த்து பிசையவும். வறுத்து வைத்துள்ள முந்திரிப் பருப்பு. ஏலக்காய் தூள் இவைகளையும் சேர்த்து கலந்து கொள்ளவும். கரண்டியால் எடுத்து ஊற்றும் பதத்தில் மாவைத் தயார் செய்துகொள்ள வேண்டும். தோசைக் கல்லை அடுப்பில் வைத்து, காய்ந்ததும், நெய் சிறிதளவு விட்டு, மாவைக் கரண்டியால் எடுத்து ஊற்றி, சுற்றிலும் நெய் விட்டு நன்கு சிவக்க பொரித்து எடுக்கவும். சூடாக சாப்பிட சுவையான அடை இது. இப்போதே தயாராகுங்கள்

# டிப்ஸ்

சுவாமி படங்களுக்கு வைக்கும் பூக்களை மாலை வாடியவுடன் ஒன்று சேர்த்து நல்ல வெயிலில் காயவைத்து அவை நன்றாக காய்ந்த பின் கைகளால் தேய்த்தால் சுலபமாக தூளாகி விடும். பிறகு அந்த தூளை செடிகளுக்கு நல்ல உரமாக பயன்படுத்தலாம்.

நீங்கள் வீட்டுக்கு பெயின்ட் அடித்திருந்தால் அந்த வாடை போக 2.3 பெரிய வெங்காயத்தை நாலாக நறுக்கி வைத்துவிட்டு ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வைத்து விட்டு மின்விசிறியை போட்டுவிட்டால் ஓரிரு மணி நேரத்தில் பெயிண்ட் வாடை சுத்தமாக அடங்கிவிடும்.

# வெளிச்ச நகரத்தின் இருட்டுக் கதைகள் 04

## சுலோவின் சோகம்

கடந்தவார தொடர்ச்சி

நன்கு பழக்கப்பட்டவன் போல் என்னை அழைத்துக் கொண்டு அந்த பாரைத் தாண்டி உள்ளே போனான் மோகன். பின் பக்கம் ஒரு வரவேற்பறை போன்றிருந்தது. அதில் உள்ள ஒரு கதிரை யில் ஒரு நாற்பது வயது மதிக்கத்தக்க, செக்கச் செவேலென்ற பெண்மணி கால்மேல் கால் போட்டபடி அமர்ந்திருந்தாள்.

அந்தப் பெண்ணிடம் என்னை அறிமுகப்படுத்தி வைத்தான் மோகன். அவளும் சிரித்துக் கொண்டு முதலில் ஆங்கிலத்தில் என்னிடம் எதுவோ கேட்டாள். எனக்கு ஆங்கிலம் தெரியாதென்று சொல்ல சிங்களத்தில் பேசினாள். நானும் அரைகுறை சிங்களத்தில் பதில் சொன்னேன்.

"இந்தத் தொழில் உனக்கு விருப்பமா?" என்று அவள் கேட்ட போதுதான் நான் மோகனைப் பார்த்தேன். "ஒன்றுமில்லை சுலோ... இங்கே வெளிநாட்டு ஆட்கள் வருவார்கள். அவர்களுக்கு உடம்பு பிடித்துவிடுவது தான் தொழில். மிக இலேசான வேலை. ஆனால் நல்ல சம்பளம்" என்றான்.

"ச்சே... இது கேவலமான தொழில்... வேண்டாம். நான் ஊருக்குப் போகிறேன்!" என்று அழத் தொடங்கினேன்.

எனது அழுகை கண்டு அந்தப் பெண் மோகனிடம் ஏதோ கோபமாகப் பேசினாள். உடனே மோகன் என்னை ஓர் அறைக்குள் அழைத்துச் சென்று சமாதானப்படுத்தினான்.


"சுலோ, இதோ பார்... சும்மா ஆண்களின் உடம்பைப் பிடித்து விடுவதுதானே உன் வேலை. பெண் டாக்டர்கள் ஆண்களைத் தொடுவதில்லையா? நர்சுகள் தொடுவதில் லையா? அது போலத்தானே இதுவும். முதலில் கஷ்டமாக இருந்தாலும் பின்னர் பழகி விடும்..." என்றான்.

"இது வெளியே தெரிந்தால் ஊர் என்ன சொல்லும்?" என்று தேம்பினேன்.

"ஊர் ஏதாவது சொல்லட்டும்... உன்னைத் திருமணம் செய்யப் போகிறவன் நான்தானே? நானே இதற்கு அனுமதி தரும்போது நீ யாரைப் பற்றியும் கவலைப்பட வேண்டிய அவசியமில்லையே!" என்று கூறினான்.

சுமார் ஒரு மணித்தியாலத்தின் பின்னர் நான் அந்தத் தொழிலுக்குச் சம்மதித்தேன்.

அந்த ஹோட்டலில் என்னைப் போல் இன்னும் ஏழெட்டுப் பெண்



கள் இருந்தார்கள். எல்லோருக்கும் இருபது தொடக்கம் இருபத்தேழு வயதிற்குள்தான் இருக்கும்.

ஒவ்வொரு நாளும் பல ஆண்கள் வருவார்கள். வெளிநாட்டுக்காரர்கள் மட்டுமன்றி உள்நாட்டவரும் வருவார்கள்.

முதலில் அவர்களுக்கு ஒரு டவலை கொடுத்து, மற்றைய ஆடைகளையெல்லாம் களைந்து அந்த டவலைக் கட்டிக்கொள்ளும்படிக் கூறுவோம். பின்னர் அந்த டவலுடன் அவர்களை ஒரு நீண்ட கட்டிலில் படுக்க வைத்து உடலைப் பிடித்து மசாஜ் செய்வோம். இவ்வாறு நாற்பத்தைந்து நிமிடங்களுக்கு மசாஜ் செய்தால் எங்களுக்கு நூற்றி ஐம்பது ரூபாய் கிடைக்கும். ஒரு நாளைக்கு ஆறு ஏழு பேருக்கு இவ்விதம் செய்வோம் எனவே சராசரி எண்ணூற்று ரூபா தொடக்கம் ஆயிரம் ரூபாய் வரை சம்பாதித்தோம்.

நான் வேலைக்குச் சேர்ந்து ஓர் இரண்டு மூன்று நாட்களுக்குள்ளேயே எனக்கு அந்தத் தொழிலின் விபரீதத் தன்மை புரிந்தது. அங்கு மசாஜுக்கு வரும் ஆண்கள் எங்கள் உடலை வருடத் தொடங்கினார்கள். தேவையற்ற பகுதிகளில் சேஷ்டை விடத் தொடங்கினார்கள்.

நான் இது பற்றி ஹோட்டல் பெண்மணியிடம் கூற, அப்படித் தான்... அட்ஜஸ்ட் பண்ணிக்கோ! என்றாள் அவள். மோகனை வரவழைத்து விடயத்தைச் சொல்லலாம் என்று பார்த்தால், அந்த ராஸ்கல் எவளோ ஒருத்தியைக் கல்யாணம் செய்து கொண்டு இந்தியாவுக்குப் போய்விட்டதாகத் தகவல் தெரிந்தது.

என்ன செய்ய? நான் ஏமாந்து போனேன். ஆயினும் என்னை ஏமாற்றிய மோகனைப் பழிவாங்கும் உணர்வு மேலோங்கியிருக்கிறது. அவனைப் பழி வாங்க வேண்டுமென்றால் நிறையப் பணம் வேண்டும். அதற்காக இப்போது இங்கு வரும் ஆண்களோடு நான் எவ்வளவோ கெட்ட செயல்களில் ஈடுபட்டுப் பணம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறேன்.

என் கதை உங்களுக்கெல்லாம் ஒரு பாடமாக இருக்கட்டும்!

உண்மைச் சம்பவம், பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன

## சினி செய்திகள்

### விஜய் - ஐஸ்வர்யா ராய் இணைகிறார்கள்.

ஆச்சர்யமாக இருக்கிறது இச்செய்தியைக் கேட்டால். அதுவும் கோலிவுட்டில் அறிமுகமான ஐஸ்வர்யா ராய் பாலிவுட்டில் புகழடைந்து அடுத்த கட்டமாக ஹாலிவுட்டை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கும் பொழுது மீண்டும் அவர் தமிழ் படத்தில் நடிக்கவிருக்கிறார் என்ற செய்தியை அறியும் போது வியப்பாகத் தான் இருக்கிறது.

ஐஸ்வர்யா ராயுடன் டூயட் பாடப்போவது வேறு யாருமில்லை, புரட்சித்தளபதி விஜய்தான்.

வசீகராவிற்குப் பிறகு அடுத்ததாக விஜய் நடித்து வரும் படம் கீதை. இதில் மீரா ஜாஸ்மின், அமீஷா பட்டேல் ஆகியோர் நடிக்கவுள்ளனர்.


இதற்கடுத்ததுதான் ஐஸ்வர்யாராயுடனான படத்தில் நடிக்க உள்ளார் விஜய். நந்தா, மௌனம் பேசியதே படங்களைத் தயாரித்த அபாரஜித் நிறுவனம் தான் இப்படத்தையும் தயாரிக்க உள்ளது.

வல்லரசு படத்தை இயக்கிய பிறகு நிரந்தரமாக பாலிவுட்டில் டெண்ட் அடித்துக் கொண்ட மகாராஜன் தான் விஜய் - ஐஸ்வர்யாராய் இணையும் படத்தை இயக்கவிருக்கிறார்.

### எச்சரிக்கிறார் அபிநயஸ்ரீ

"எம் பாட்டுல நான் இருக்கேன். யார் வம்புக்கும் நான் போறதில்லே. அப்படியிருக்க நான் கவர்ச்சி நடிகைன்னு சில பேரு கிண்டல் பண்றாங்களாம். அவங்க தான் கவர்ச்சி நடிகைங்க. எதை வேணுன்னாலும் திறந்து காட்டுவாங்க! நான் கவர்ச்சி ராஜ்ஜியத்தின் மகாராணி அனுராதாவோட பொண்ணு. நிறைகுடம் போல இருக்கேன். எனவே அந்த அரை குடங்கள் அடக்கி வாசிக்கட்டும். இல்லேன்னா அவங்க அட்ரஸே இல்லாமப் பண்ணிடுவேன்."

இவ்வாறு எச்சரிக்கை விட்டிருக்கிறார் அபிநயஸ்ரீ.


ஷங்கர் - த்ரிஷா


மணிரத்தினம் - சிம்ரன்

### டைரக்டர்களுடன் நடிகைகள்

கதாநாயகர்கள்தான் கதாநாயகிகளைப் கட்டிப் பிடித்து டூயட் பாடுவார்கள். ஆனால் கதாநாயகர்களின் "டூயட்" வேலையை டைரக்டர்கள் செய்தால் எப்படியிருக்கும் என்று யோசித்ததன் விளைவாக உருவான படங்கள் இவ்வாரம் உங்கள் பார்வைக்கு அங்காங்கே விருந்து படைக்கின்றன. இரசித்து, ருசித்து மகிழுங்கள்!


கே. எஸ். ரவிகுமார் - ஜோதிகா

## சினி - கிசுகிசு

### கன்னித்தீவு

சிந்துபாத்தின் காதலி பெயர் கொண்ட இரண்டெழுத்து நடிகை தீவிரமான மதுப்பிரியராம்! மதுவும் ஓசியில் கிடைக்கிறது என்றால் விடிய விடிய குடிப்பாராம்! சமீபத்தில் "மலர்களான" படப்பிடிப்புக்காக வெளிநாடு சென்றவர், ஓட்டல் ரூமுக்கு "ஒயினை" வர வழைத்துக் குடித்தாராம்! "பில்" தயாரிப்பாளர் கணக்கில் வந்த போதுதான் விஷயமே வெளியில் தெரிந்திருக்கிறது.

அவர் அப்படியென்றால் பிரியமான மற்றொரு நடிகைக்குப் பிடித்தது பிராந்தியாம்! "ஐஸ்" படப்பிடிப்புக்காகப் பனிப்பிரதேசமான ஆஸ்திரியா சென்ற போது அங்கு குளிர் மைனஸ் பத்து டிகிரியாம்! உடம்பை சூடாக வைத்திருக்க அங்கு "கோனியாக்" மது குடிப்பது வழக்கம்! அம்மணிக்கும் வாங்கிக் கொடுக்க, முதலில் "அய்யய்ய..." என்று முகம் சுளித்தவர், அடுத்தடுத்து அருந்தினாராம், ஐந்து பெக்!

### உதட்டோடு உதடு முத்தம்

விக்ரம் நடிக்கும் காதல் சடுகுடு படத்தில் இரண்டு முத்தக் காட்சிகள் இடம் பெற்றுள்ளன. ஒன்று பிரியங்காவைத் திடீரென முத்தமிடுகிறார் விக்ரம். இரண்டு விக்ரமை, பதிலுக்கு முத்தமிடுகிறார் பிரியங்கா. உதடா, கன்னமா என்று பிரியங்காவிடத்தில் கேட்டால், கன்னத்தில் முத்தமிடுவதெல்லாம் ஒரு முத்தமா? என்று கேட்கிறார்.

### விக்னேஷ் அடித்த மொட்டை

"சாண் ஏறினால் முழம் வழுக்குகிறது" என்பது மாதிரி நடிகர் விக்னேஷின் நிலைமை!

பல வெற்றிப் படங்களில் நடித்தவரின் மார்க்கெட் தளர்ந்து போக அவர் இப்போது நம்பிக் கொண்டிருப்பது "சூரி" படத்தைத்தான்! இந்தப்படம் அவரது லட்சியப்படமாம்! இதனால் இரண்டு ஆண்டுகளாக வேறு எந்தப்படத்திலும் நடிக்காமல் இப்படத்திலேயே முழுக்கவனம் செலுத்தி வரும் விக்னேஷ்... படத்துக்காக "மொட்டையும்" போட்டுள்ளார். முடி மறுநாளே துளிர் விட்டு விடுவதால் தொடர்ந்து 22 நாட்கள் தலையை பிளேடால் "ஷேவிங்" செய்து நடித்தாராம்!.


இனியும் வருமோ இப்படியொரு சந்தர்ப்பம்

4 சக்கர டிரக்டர் ஒன்றை சொந்தமாக்கிக் கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்

உங்களது 2 சக்கர டிரக்டருக்கு புத்தம் புதிய 4 சக்கர டிரக்டருடன் இலவச பரிசொன்று




* வட்டி இல்லாத இலகு முறை கட்டணம்
* இரண்டு வருட உத்தரவாதம்
* 5 இலவச சேவைகள்
* பலதரப்பட்ட கருவிகளை இணைக்கலாம்
* Hydraulic இனால் இயங்கும் பெட்டி (மரம் அல்லது இரும்பினால்)
* உதிரிப்பாகங்கள் தாராளமாக உள்ளன


ஒரு வருடத்திற்கு மேல் பயன்படுத்தாத 12HP கொண்ட S195 ரக இயந்திரங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்

GUDWIL

அனைத்து விபரங்களுக்கும்:
55, துட்டுகெமுனு வீதி, பாமன் கடை, தெஹிவளை.
தொ.பே : 818415, 074-208101-2, 0777-351695
தொலைநகல் : 818416, மின்னஞ்சல் : gudwil@eureka.lk

கமராவின் பின் பக்கம் - 3

# மும்ஸ் நடிகையின் முதலிரவுகள்



மும்தாஜ்

"சொன்னால்தான் காதலா" என்ற தாடிக்காரரின் படத்தில் தான் அறிமுகமாகியதாக "டுப்" விட்டவர் இந்த மும்ஸ் நடிகை. ஆனால் அதற்கு முன்னமே பலான பல ஹிந்திப் படங்களில் நடித்துச் சக்கையாகியிருந்தவர்தான் என்ற கதை பின்னர் வெளியாகிய போது நடிகை புகழின் உச்சத்தில் இருந்தார். இவர் நடித்த ஒரு பலான ஹிந்திப் படம் குயின்ஸ் என்ற பெயரில் தமிழில் "டப்" செய்யப்பட்ட போது, அதை வெளியிடாமற் தடுக்க நடிகை பெரும் பிரயத்தனம் செய்தார். ஆனால் அதையும் மீறி படம் வெளியாகி மும்ஸின் வண்டவாளத்தப் பறைசாற்றி விட்டது.

மும்ஸுக்கு நல்ல உடற்கட்டு. அகலமான கண்கள்,
தாராளமான மார்புகள், சதைப் பிடிப்பான பின்னங்
கம். ஆரம்பத்தில் ஒரு சாதாரண ஸ்ரூயோ வில்
ரிஷப்ஸனிஸ்ட்டாகத் தான் வேலை பார்த்
தவர். ஆனால் சீக்கிரமே முதலாளியம்மா ஆகி
விட்டார். காரணம், சபலபுத்திக்கார ரான
அந்த ஸ்ரூடியோ முதலாளி மும்ஸை வைத்
துக் கொண்டிருந்ததுதான். சீக்கிரமே முதல
ாளிக்குத் தண்ணி காட்டி விட்டுத் தான் முதலா
ளியாகிவிட்டார்.

மும்ஸ் இந்த நேரத்தில்தான் சில கவர்ச்சி
விளம்பரங்களில் நடிக்கத் தொடங்கி னார். தாரா
ளமாக உடலழகைக் காட்டினார். அவரின்
வாளிப்பான தொடைகளில் சோப் பூசுவது போல் வெளி
யான ஒரு விளம்பரம் இந்திய இளை ஞர்கள் பல
ரின் தூக்கத்தைக் கலைத்து விட்டது.

ஸ்ரூடியே முதலாளியிடம் படுக்கை
யைப் பகிர்ந்து கொண்ட போது ஏதோ அப்
போது தான் முதலிரவை அனுபவி ப்பது போற்
சிணுங்கிய இந்த மும்ஸ், விளம் பர உலகில்
தன்னை அறிமுகப்படு
த்திய ஹிந்திக்கார
ருடன் ஹோட்ட
லில் தங்
கிய போதும் அதுவே தனது முதலிரவு என்பது போல் பாவ்லா காட்டினார். அவ்வாறான நடிப்பில் மும்ஸ் எப்போதும் கை தேர்ந்தவராகவே விளங்கினார்.


விளம்பரப்படங்களில் மும்ஸின் உடல் வாளிப்பைக் கண்ட சில படத் தயாரிப்பாளர்கள் அவரை அணுகினார்கள். "ஓகே" சொன்னார் மும்ஸ். படுக்கையறைக் காட்சிகளில் தூள் கிளப்பினார்.

ஒரு நாள் தனது புதிய படத்திற்கு கதாநாயகி தேடிக் கொண்டிருந்த ராஜ தாடிக்காரர் மும்ஸின் சோப் விளம்பரத்தைப் பார்த்துவிட்டு, அவரின் அட்ரஸ் தேடிப் புறப்பட்டார். தாடிக்காரர் காதலைப் பற்றி பெரிதாகக் கதை சொல்வாராயினும், காமம் என்று வரும்

மும்ஸைக் கண்டதும் தாடிக்காரரின் உடல் பற்றியெரிவது போல் இருந்தது. என்ன ஆனாலும் சரி, இவளை ஒரு மாத மாவது அனுபவிக்க வேண்டும் என்று முடிவு செய்தார். மும்தாஸுக்கு ஒரு பெருந்தொகைப் பணத்தை அட்வான்ஸாகக் கொடுத்தார். அன்றிரவு தன் வீட்டிலேயே தங்கும் படி தாடிக்காரரை மும்ஸ் கேட்டுக் கொண்டார். காம நரிக்குத் தேன் குடிக்கக் கசக்குமா என்ன? அன்றிரவு மும்ஸின் வீட்டிலேயே ஜாகை அடித்தார் தாடிக்காரர்.

தாடிக்காரருடன் படுக்கையைப் பங்கு போட்டுக் கொள்ளும் போதும் அதுதான் தான் கன்னி கழியும் முதலிரவு என்பது போல் மும்ஸ் ஜாலம் காட்டினார். ஆனால் இந்த விடயத்தில் தாடிக்காரர் படு எக்ஸ்பேர்ட் ஆயிற்றே. மும்ஸின் தொடர்பில் அவள் இதற்கு முன்னரும் ஆண்களை அனுபவித்தவள் தான் என்பது அவருக்கு நன்றாகத் தெரிந்தது. எனினும், மும்ஸின் கவர்ச்சியை வைத்தே தன் படத்தை ஓட்டிவிடலா மென்று கணக்குப் போட்டார்.

படம் தயாராகிக் கொண்டிருந்தது. அப்போதுதான் படத்தில் கதானாயகனாக நடித்த முஸ்லிம் நடிகரோடு மும்ஸ் நெருங்கிப் பழகுவது தாடிக்காரருக்குத் தெரிய வந்தது. ஆனால் அவர் விட்ட டோசில் கதாநாயக நடிகர் தன்னை அடக்கி வாசிக்க ஆரம்பித்தார்.



கதிர் - ஸ்ரீதேவி

எத்தனை முறை தான் மும்ஸை ஆடையுரித்து அந்தப் படத்தை எடுத்தாலும் படம் படு தோல்வியைத்தான் சந்தித்தது. அத்தோடு மும்ஸைக் கை கழுவிவிட்டார் தாடிக்காரர்.

ஆனால் அதன் பின்னர் யார் யாரையெல்லாமோ மடக்கி, சினிமாவுலகில் கவர்ச்சி ஆடல் ராணியாகத் தன்னை நிலை நிறுத்திக் கொண்டார் மும்ஸ். அதற்காக அவர் ஆடிய அந்த ரங்க ஆட்டங்களுக்கு கணக்கே இல்லை.

கமராவின் பின் பக்கம் இடையிடையே அவரின் அந்தரங்க கட்டங்கள் வெளியாகும்.



ஸ்ரீகாந்த் - சிநேகா
"ஏப்பிரல் மாதத்தில்"


## ஜூன் மாதத்தில் மஹா

வாலி, சிட்டிசன், முகவரி, ரெட் ஆகிய படங்களுடன் இப்போது வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் வில்லன் படத்தைத் தயாரித்த நிறுவணம் எஸ். எஸ். சக்ரவர்த்தியின் நிக் ஆர்ட்ஸ். இந்த நிறுவனத்தின் அடுத்த புதிய படம் தான் மஹா. இதில் அஜீத் கதாநாயகனாக நடிக்கிறார். ஜோடியாக மீரா ஜாஸ்மின் நடிக்கவுள்ளார்.

விவேக் முக்கிய வேடத்தில் நடிக்கும் இப்படத்திற்கு ஜீவா ஒளிப் பதிவு செய்கிறார். வைரமுத்து எழுதிய பாடல்களுக்கு வித்யாசாகர் இசையமைக்கிறார். பாலகுமாரன் வசனம் எழுதுகிறார். கதை—திரைக் கதை—டைரக்ஷன் பொறுப்பேற்றிருப்பவர் ஏ.பி. ரவிராதா. ஜூன் மாதம் படம் திரைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நடைய பாரு... இடைய பாரு... நங்கநல்லூர் நயாகரா

இசையமைப்பாளர் தேவா இந்த ஆண்டில் முதன் முதலாக இசையமைக்கும் படம் மும்தாஜ் நடிக்கும் "தத்தித்தாவுது மனசு". இந்தப்படத்திற்கு மும்தாஜின் அறிமுகக் காட்சி ஒன்றிற்கான பாடலுக்கு மெட்டமைத்தார் தேவா. உருகிப்போன மும்தாஜ் விலையுயர்ந்த இலக்ட்ரோனிக் மியூசிக் இன்ஸ்ருமெண்ட் ஒன்றை வாங்கிப் பரிசளித்தார்.



பாலா-லைலா

"கட்டிப்புடி கட்டிப் புடிடா" மற்றும் "மலமல" பாடல் போன்ற அந்தக் கலக்கல் பாடலுக்காகத்தான் மும்தாஜ் பரிசளித்திருக்கிறார். இந்தப் பாடல் சரியத் தொடங்கியுள்ள தனது செல்வாக்கைத் தூக்கி நிறுத்தும் என நம்புகிறார்.

அந்தப் பாடலை இயற்றியவர் வாலி. பாடியோர் எஸ்.பி.பி மற்றும் சின்மயி பாடலின் முதல் நான்கு வரிகளும் வருமாறு.

அதோ வர்றா அதோ வர்றா மதுரவயல் மாடப்புறா
நடைய பாரு.... இடைய பாரு.... நங்கநல்லூர் நயாகரா...
பச்சைமலை பவள மலை போடுங்கடா அரோகரா.!.
போட்டு போட்டு ஆட்டம் போட்டு பாடுங்கடா சகோதரா...

இந்தப் படத்தில் பொலிஸ் இன்ஸ்பெக்டராக வந்து வடிவேலு வயிறு வலிக்கச் சிரிக்கவைக்கப் போகிறார். ஒரு கட்டத்தில் அவர் வித்தியாசமான கெட்டப்பில் வருகிறாராம். அந்த கெட்டப்பை இரகசியமாக வைத்திருக்கிறார்கள்.

இந்தப் படத்தைத் தயாரிப்பவர் குஷ்பு, அப்பாஸ், சங்கவி, சங்கீதா உட்பட மற்றும் பலருக்கு மனேஜராகப் பணியாற்றி வரும் வி.கே.ரியாஸ் அஹமது.

ஐந்து இளம் தேவதைகளை உலவவிட்டு, இளைஞர்களின் தூக்கத்தைக் கெடுப்பதெற்கென்று உருவாக்கப்பட்டிருக்கும் இப்படம் ஏப்ரல் மாதத்தில் புத்தாண்டு விருந்தாகத் திரைக்கு வரப் போகிறது.

## "லபக்கு லபக்கு" விந்தியா


ஆர்.பி.சௌத்திரியின் ஐம்பதாவது படம் 'ஆசை ஆசையாய்.' இதில் 'லபக்கு லபக்கு' என்ற பாடலில் அரைக்காற்சட்டையுடன் ஆடுகிறாராம் 'சங்கமம்' நாயகி விந்தியா. பாவம் விந்தியாவுக்கு ஒழுங்கான பட வாய்ப்பும் இல்லை. அம்மா, அப்பா ஆதரவும் இல்லை. தனது மனேஜருடன் வீட்டை விட்டு வெளியேறி தன் வீட்டில் வசிக்கும் விந்தியா எதைக் கழற்றவும், எதைக் காட்டவும் தயாராக

## நொருகுதே நெஞ்சம்

**என் இனிய அருளாசான் அவர்கட்கு,**

என் பெயர் அருன். வயது இருபது. கடந்த வருடம் ஏ.எல். பரீட்சை எடுத்து, நல்ல பெறுபேற்றையும் எடுத்துள்ளேன். பல்கலைக்கழக அனுமதி கிடைக்குமென்று நம்பியிருக்கின்றேன்.

என் பிரச்சினை என்னவென்றால், நான் ஒரு பெண்ணை விரும்புகிறேன். அவள் மிகவும் அழகானவள். ஆனால் இப்போது தான் ஏ.எல். பரீட்சை எடுத்து முடித்திருக்கிறாள். 16 வயது.



எத்தனையோ முறை அவளைக் கண்டு சிரித்திருக்கிறேன். அவளும் என்னைப் பார்த்து சிரித்திருக்கிறாள். ஆனால் ஒரு முறை கூட நான் அவளுடன் பேசியது கிடை யாது. வெட்கமும், பயமும் என் னைத் தடுத்து விடுகிறது.

அவளின் குடும்பம் பெரும் பணக்காரக் குடும்பம். நாங்கள் ஏழைகள் இல்லையென்றாலும், அவளின் குடும்பத்தினர் அளவுக்குப் பணக்காரர்கள் இல்லை. ஒரு வேளை அவள் என் காதலை ஏற்றுக் கொண்டாலும் அவளின் வீட்டார் ஏற்றுக் கொள்வார்களோ என்பதில் சந்தேகமாயுள்ளது.

என்னால் அவளை மறக்க முடியவில்லை. திருமணம் என்று ஒன்று எனக்கு நடந்தால் அது அவளுடன் தான் நடக்க வேண்டும் என்று மனதுக்குள் சபதம் எடுத்திருக்கிறேன். அவளைத் திருமணம் செய்ய முடியாது போனால், காலம் முழுவதும் திருமணம் செய்யாமலேயே வாழ்ந்து விடவும் நான் முடிவு செய்திருக்கிறேன்.

நான் எப்படி அவளுடன் பேசுவது? எவ்வாறு எனது காதலை அவளுக்குத் தெரியப்படுத்துவது? தயவுசெய்து எனக்கு நல்ல ஆலோசனை வழங்குமாறு உங்களைத் தாழ்மையுடன் கேட்டு விடைபெறுகிறேன். நன்றி!

**இப்படிக்கு,**
**அருண்,**
**வவுனியா.**

**அன்புள்ள அருணுக்கு!**

ஏ.எல். பரீட்சை எழுதி, நல்ல பெறுபேறுகளும் பெற்றுள்ள நீங்கள் அடுத்துப் பல்கலைக் கழகம் சென்று அங்கேயும் சிறப்பாகப் படித்துப் பாஸ் பண்ணி, பட்டம் பெற்று, நல்ல பதவியில் அமர்வதனை ஓர் இலட்சியமாகக் கொண்டிருப்பீர்களென்று பார்த்தால், இப்படி காதலை இலட்சியமாகக் கொண்டு விட்டிருக்கிறீர்களே... உண்மையில் உங்கள் நிலை எனக்குக் கவலையையும் வருத்தத்தையும் தருகிறது.

அருண்! பெரிய செல்வந்த வீட்டுப் பிள்ளையான அந்தப் பதினாறு வயதுப் பெண் உங்களைப் பார்த்துச் சிரிப்பதை மட்டும் வைத்துக் கொண்டு உங்கள் ஒரு தலைக் காதலைக் கட்டியெழுப்பிக் கொண்டு வருவது புத்திசாலித்தனமாகத் தெரியவில்லை.

காதலுக்கு மிக மிகப் பிரதானம் துணிவு. அது கூட உங்களிடம் இல்லை. ஆனால் உங்களுக்குள் நீங்களே சபதம் செய்து கொள்கிறீர்கள். இது விநோதமாவே எனக்குத் தெரிகிறது.

அந்தப் பெண்ணிடம் நேரடியாக உங்கள் விருப்பத்தைச் சொல்லிப் பாருங்கள். அவளும் உங்களைக் காதலிக்கிறாள் என்று தெரிந்தால், அந்தக் காதலை அப்படியே வைத்து விட்டு, நீங்கள் படித்துப் பட்டம் பெற்ற பின் உங்கள் வீட்டாரிடம் சொல்லி அவளைப் பெண் கேட்டுப் பார்க்கலாம். நல்ல பதவியில் நீங்கள் இருந்தால் அவளை உங்களுக்கு மணமுடித்துத் தருவதில் அவள் பெற்றோருக்கு ஆட்சேபனைகள் இருக்காது.

ஒருவேளை அந்தப் பெண் உங்களைக் காதலிக்கவில்லை என்று தெரிந்தால் அத்தோடு கதையை விட்டு விடுங்கள். அவளை மறந்து விட்டு படிப்பில் கவனம் செலுத்துங்கள். உங்கள் நிலை உயரும் போது உங்களால் அவளை விட நல்லதோர் அழகியை மனைவியாக அடைய முடியும்.

இன்னும் ஒன்றையும் உங்களுக்குக் கூறி வைக்க விரும்புகின்றேன். அந்த அழகான பதினாறு வயதுப் பெண்ணின் மேல் காதலா அல்லது வெறும் கவர்ச்சியா என்று ஒரு முறை சோதித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். அந்தப் பெண் மீது மட்டும்தான் உங்களுக்கு ஆசை இருக்கிறதா...? நீங்கள் காணும் வேறு அழகான பெண்களின் மீது உங்களுக்கு ஆசை வரவில்லையா...? என்று நன்றாக யோசித்துப் பாருங்கள். கண்ணிற்படும் பல பெண்களின் மேல் "அட அழகாக இருக்கிறாளே. இவள் என் மனைவியானால்..." என்ற ரீதியில் உங்கள் கற்பனைகள் வளர்ந்தால், நீங்கள் அந்தப் பெண் மீது கொண்டிருப்பது காதலல்ல என்று முடிவு செய்து விடலாம். எதற்கும் உங்களது மனசாட்சிக்குத் துரோகம் செய்யாமல், உங்கள் காதலைப் பரீட்சித்து விடுவது நல்லது.

ஆலோசனை: அருளாசான்

## அதிர்ஷ்ட விஞ்ஞானம்

1 2 3 4 5 6 7 8 9 10

### எண் – 1 (சூரியன்) 04

**பெயர் எண் 10**

10ல் பெயர் அமைந்தவரின் வாழ்க்கை பெயரும், புகழும் நிறைந்ததாக இருக்கும். நம்பிக்கை அதிக மாகும். சில நேரம் பொருளாதார வசதிகள் கூடியும் சில நேரங்களில் குறைந்தும் இருந்தாலும், கொடிய வறுமைக்குள் சிக்கும் நிலை ஏற்படாது.

**பெயர் எண் 19**

வாழ்க்கையில் உயர்வையே இந்த எண் வழங்கும். நல்ல கணவன் அல்லது மனைவி அமைவார்கள். என்றும் இளமையோடு வாழ வைக்கும் எண் இது.

**பெயர் எண் 28**

நிறையச் சோதனைகள் ஏற்படும். முதலில் முன்னேற்றம் போல் தோன்றினாலும் இறுதியில் சகலதும் இழந்து கஷ்டப்பட நேரும். உறவினர்களே ஏமாற்றுவார்கள். நண்பர்கள் சதி செய்வார்கள். 1ம எண்காரருக்கு மட்டுமன்றி, ஏனைய எண்காரருக்கும் மிகவும் மோசமான பலனை எண் 28 தருமாதலால் இந்த எண்ணில் யாரும் பெயரை அமைத்துக் கொள்ள வேண்டாம்.

**பெயர் எண் 37**

இது மிகவும் அதிஷ்டகரமான எண். இந்த எண்ணில் பெயரிருந்தால் அதிர்ஷ்டம் தானாக வரும். மிகவும் கஷ்டப்படுவோரையும் உயர்த்திவிடும் ஆற்றல் 37ற்கு உண்டு. உயர்ந்தோரும், மற்றோரும் இந்த எண்ணில் பெயர் கொண்ட 1ம் எண்காரருக்கு மதிப்பும் மரியாதையும் வழங்குவர். தோழர்கள், தோழிகள் கிடைப்பார்கள். வியாபாரம் செழிப்பாகும். உடல் ஆரோக்கியம் கிட்டும். எதிர்பாராத இடங்களிலிருந்தெல்லாம் உதவிகள் வரும்.

மற்றும் 46, 55, 64, 73 ஆகிய எண்களில் பெயர் அமைந்தாலும் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும்.

அடுத்த வாரம் எண் - 02 இற்குரிய விபரங்கள் தொடரும்...

## தலை ஒட்டிப் பிறந்த சகோதரர்கள்



எகிப்து நாட்டில் தலை ஒட்டி பிறந்த சகோதரர்கள் அஹமது இப்ராஹிம் (இடது), முஹமது இப்ராஹிம். அமெரிக்காவின் டல்லாஸ் நகர மருத்துவமனைக்கு சனிக்கிழமை புறப்பட்ட அவர்களின் உடல்நிலையை விமானதத்ல் பரி சோதிக்கிறார் டாக்டர். தலை உச்சி யில் ஒட்டிப் பிறந்த அவர்களின் மூளையில் சிறிய பகுதியும் சேர்ந்தே இருக்கிறது.அவர்களை அறுவை சிகிச்சை மூலம் தனியாக பிரிக்க முடியுமா என்பதை டல்லாஸ் டாக்டர்கள் பரிசோதித்து முடிவு செய்வார்கள்.

## இடுப்பு ஒட்டிப் பிறந்த சகோதரர்கள்

இவர்களும் எகிப்தைச் சேர்ந்தவர்கள் தான். தலைநகர் கெய்ரோவிலுள்ள மருத்துவ மனையில் ஒரு வாரத்துக்கு முன், இடுப்பு ஒட்டிப் பிறந்த சகோதரர்கள் முஹம்மது சுஹைல் (இடது), இப்ராஹிம் சுஹைல்.



## கேள்வி பதில்

பதில்கள் தாமரை

உலக அரசியல் மையமாக மாறி வரும் வன்னி பற்றி தாமரையின் கருத்து என்ன?

*–அஸ்லம், ஆமர்வீதி.*

புலிகள் அரசியல் சதுரங்கத்தின் அத்தனை காய்களையும் அற்புதமாக நகர்த்துகிறார்கள் என்பது.

எனது நண்பன் ஒருவன் எப்பவும் நித்திரை கொள்ளவே பிரியப்படுறான் ஏனோ?

*–சூரியகுமார், வவுனியா.*

அப்போது தானே அவர் கனவில் ஜோதிக்கா வருவார்.

பெண்களின் கண்களை மீன் விழி என்கிறார்களே, ஏன்?

*–சுமதி, கொக்குவில்.*

ஆண்கள் போடும் தூண்டிலில் அகப்பட்டுக் கொள்வதனால்.


சுகமான சண்டை எது?

*–கவிதா, முல்லைத்தீவு.*

காரணமில்லாது சண்டை பிடித்து கதையாதிருந்து கதைக்கும் காதலர் சண்டை.

நடிகை "மும்"க்குப் போட்டியாக நடிகை "கும்" களமிறங்கினால் எப்படியிருக்கும்?

*–ஜெயந்தி, கல்லடி.*



இரசிகர்கள் "டம்" பிடிக்க வேண்டி வரும்.

ஒரு பெண்ணின் மனதைத் தொடப் போகிறேன். ஐடியா சொல்லுமேன்?

*நௌபர், பதுளை.*

மனதைத் தொடப் போகிறேன் என்று சொல்லி கைய வைத்து மாட்டிக் கொள்ளப் போகிறீர் கவனம்.

ஹோட்டல் வெயிட்டர் என்னுடன் கலாட்டா பண்ணுகிறான். வழி சொல்லும் தாமரையே!

*–முஹமட் சபீர், சாய்ந்தமருது.*

நாடு எதிர்நோக்கும் நிதி நிலமை சரியானதும் "டிப்ஸ்" தாறன் என்று சொல்லுறதை நிறுத்தும்.

2004ம் ஆண்டு பெண்களின் கை ஓங்குமாமே?

*–குகநாதன், வெள்ளவத்தை.*

இப்போது மட்டும் என்ன தாழ்ந்தா இருக்கிறது?

சூப்பர் சிக்சுக்குள்ளே நுழைய வாய்ப்பிருக்காது என்று கருதிய ஆசிய அணிகளில் இலங்கையும் இந்தியாவும் நுழைந்தது பற்றி?

*–குகநாதன், வெள்ளவத்தை.*

வெற்றியும் தோல்வியும் நிச்சயிக்கப்பட்ட ஒன்றல்ல. எதுவும் எப்பொழுதும் நிகழலாம். இந்த நியதி விளையாட்டுக்கு ஒன்றும் விதிவிலக்கல்ல.

காதலிக்காமல் இருப்பது தவறா?

*–றமீஷா, கண்டி.*

உதை வாங்காமல் இருப்பது எப்படித் தவறாகும்?

பெண்களைத் தொட்டுப் பேசினால் ஒட்டிக் கொள்கிறார்களே?

*–எம்.சுரேஸ், மொறட்டுவ.*

உறை போட்ட பின் தொட முனையுங்கள். (கையுறையைச் சொன்னேன்.)

கரும்பு தின்னக் கைக்கூலி கேட்கலாமா? இதற்கு தக்க பதில் சொல்லாவிடில் உமது தலை சுக்குநூறாக உடைந்து விடும்.

*–கலாநிதி, கிளிநொச்சி.*

நீர் என்ன முருங்கை மரத்து வேதாளமா? தலை நொறுங்க நான் என்ன விக்ரமாதித்தனா?

பெண் என்ற பெருங்குலத்துக்குள் கன்னியை மட்டும் ஏன் குறிப்பாக "கன்னிப் பெண்" என்று சிறப்பிக்கிறார்கள்?

*–ரி.சேகர், மாத்தளை.*

காண்பதெல்லாம் கற்கண்டாகுமா?

முன் ஜாக்கிரதை எனப்படுவது யாது?

*–கே.நஸீமா, காத்தான்குடி.*

ஒருவர் தனது மாளிகையில் மூன்று நீச்சல் குளங்களைக் கட்டினார். ஒன்றில் கூலான தண்ணீர். மற்றதில் சூடான தண்ணீர். மூன்றாவதில் தண்ணீரே இல்லை.
நீச்சல் குளங்களைப் பார்க்க வந்தவர் கேட்டார்.
"எதுக்கு கூலான தண்ணீர்?"
"வரண்ட பிரதேசங்களிலிருந்து வருகின்ற நண்பர்கள் குளிக்க!"
"எதுக்கு சூடான தண்ணீர்?"
"குளிர்ப் பிரதேசங்களிலிருந்து வரும் நண்பர்கள் குளிக்க!"
"பின்னே, எதுக்கு தண்ணீரே இல்லாமல் ஒரு குளம்?"
"அதுவா... அது வந்து, நீச்சல் தெரியாமலும் நண்பர்கள் வருவாங்க, இல்லையா? அவங்களுக்குத் தான்...!"
முன் ஜாக்கிரதை என்பது இது தான்.

# தீயில் கரைந்த உயிர்கள்

-முனையூரான்-

செம்பருத்திப் பூக்களும் பல வர்ண ரோஜா செடிகளும் அந்தூரிய மலர்களும்!... ஆகா! ஒரு பெரிய பூங்காவனத்தையே முற்றமாகக் கொண்ட நவீன தொழில் நுட்பங்களால் வடிவமைக்கப்பட்ட ‘பெரிய வெள்ளை’ மாளிகை அது. அதன் மொட்டை மாடியில் செந்நிற ரோஜாச் செடியின் அருகே பவள உதட்டோடு ஒரு இளம் மங்கை புன்னகைத்தாள், வீதியில் சென்ற சாந்தனைப் பார்த்து. பாதையில் சென்ற சாந்தன் தனக்கு முன்னாலும், பின்னாலும் தெருவை நோக்கினான். அவனைத் தவிர அந்த நேரத்தில் எவரும் அவ்வழியில் வரவில்லை. “ஓகோ! இந்த அழகிய ரோஜா என்னைத் தான் பார்த்துச் சிரித்ததோ!” சந்தோஷ மழையில் நனைந்து கொண்ட சாந்தன் பதிலுக்கு சிரித்தபடி அந்த மாளிகையைக் கடந்தான்.

அது காலை நேரம் ஒன்பது மணியிருக்கும். அவன் காரியாலயம் செல்லும் நேரமும் அது தான். சாந்தன் கலைப்பட்டதாரியாகப் பட்டம் பெற்று திட்டமிடல் உத்தியோகத்தராக சொந்த ஊரிலே கடமை புரிகிறான். அன்று அவன் கந்தோருக்குச் சென்றடைந்த நேரம் அவனுக்கே தெரியவில்லை.


“சாந்தன் இன்றைக்கு சரி ‘கெப்பியா’ இருக்கான். ஆமா... பெரிய இடத்து ரோஜா ஒன்று ‘சிக்னல்’ கொடுத்திருக்கு... ‘ஒப்பிசுக்கு’ வார வழியில...” என்று கிண்டலாகச் சொன்னான் சங்கர்.

அதற்கு சசி “அப்படியா...! யாரு மச்சான் அது?” என்று சாந்தனிடம் கேட்க “அது...?” என அவன் மழுப்பத் தொடங்கினான். நண்பர்களின் அன்பான கிண்டல் பேச்சுக்களின் பின் விஷயத்தைச் சொன்னான் சாந்தன். இதைக் கேட்ட சுரேஷ் “பெரிய இடம் மச்சான், பார்த்துப் பிடிச்சுப் போடு... வேணுமென்றா நீ சொல்லு, நாங்க புல் சப்போட் தர்றோம்.” சுரேஷின் அன்புக்கடி தொடர்ந்தது.

அன்றைய சாப்பாட்டு நேர கலந்துரையாடலின் கருப்பொருள் சாந்தனைப் பார்த்து புன்னகைத்த பெரிய தம்பி போடியார் மகள் சரோஜா பற்றியதாகவே இருந்தது.

சாந்தனின் நெஞ்சத் தோட்டம் எங்கும் சரோஜாவின் புன்னகைத் தென்றல் அந்த நாள் முழுவதும் உலா வந்தது.

ஒவ்வொரு நாளும் அவன் அலுவலகம் செல்லும் நேரம் பார்த்து அவள் மொட்டை மாடியில் நின்று புன்னகைப்பாள். இவ்வாறே நாட்களாய் நீண்ட புன்னகை அம்புகள் இருவர் இதயத்திலும் காதலாய்க் குத்தியது. மனதை மனம் புன்னகைச் சங்கிலிகளால் இணைத்துக் கொண்டன. அவனும் அவளும் ஒருத்தரையொருத்தர் சந்தித்துப் பேசும் சந்தர்ப்பம் ஒன்றை எதிர்பார்த்து தவம் கிடந்தனர். சந்தர்ப்பம் வந்தது.



சாந்தனின் நண்பன் ஒருவனுக்கு சரோஜாவின் பக்கத்து வீட்டில் திருமணம் நிச்சயிக்கப்பட்டு கல்யாணம் நிறைவேறும் நாள் அன்று.

சாந்தன் மாப்பிள்ளைத் தோழனாக வராவிடிலும் சக தோழர்களோடு மணவீட்டுக்கு மாப்பிள்ளையை அழைத்து வந்தவர்களோடு வந்திருந்தான். சரோஜாவும் அவ்வீட்டிற்கு வருவாள் என்பது அவனுக்குத் திண்ணம்.

அவனது எண்ணம் பொய்த்து விடவில்லை.

“மச்சான் அந்தா பாரு.... உன்ட ஆள் வந்திருக்கு” தாரகை ஒளி வீசிய சேலை உடுத்திருந்த அவளைக் காட்டிச் சொன்னான் சசி.

இரு ஜீவன்களின் விழிகளும் சங்கமித்துக் கொண்டன. புன்னகை மொட்டுக்கள் விரியத் தொடங்கின. இருவர் வதனங்களிலும் சில நிமிடங்கள் இமைகள் பேசின. சற்று நேரத்தில் அவள் இருப்பிடம் இருந்து எழுந்து செல்ல... தன்னை எழும்பி வரச் சொல்லிக் கொடுக்கப்பட்ட பச்சைக் கொடி சைகைதான் என உணர்ந்த சாந்தன் அருகில் இருந்த நண்பனிடம் ஏதோ பேசி விட்டு அவள் சென்ற திசை யை நோக்கி நடந்தான். அங்கே சரோஜாவும் அவள் தோழியும் கதை அளந்து கொண்டிருந்தனர். அருகில் சென்ற அவன் எக்ஸ்கியுஸ்மி என ஆரம்பித்து நலம் விசாரிக்க, நேருக்கு நேரான கன்னிச் சந்திப்பினால் அவளுக்கு பேச வார்த்தைகள் தடுமாறுவதை உதடுகள் குறி காட்டின. அவளோடு பேசிக் கொண்டிருந்த தோழி விலகிச் செல்ல இருவர் இதயங்களும் திறந்தன. வார்த்தைகள் பூக்களாய்ச் சொரிந்தன.

திருமண வீடு அவள் பக்கத்து வீடு என்றபடியால் அங்கு சுதந்திரம் கொஞ்சம் அதிகமாகவே இருந்தது அவளுக்கு. கல்யாண வீட்டுக்கு தனது மூத்த சகோதரியுடனே வந்திருந்தாள். பணக்கார வீட்டுப் பிள்ளையாக இருந்தாலும் எல்லோருடனும் ஒரே மாதிரியாகவே பழகுவாள். பணத்திமிர் அவளிடம் இருக்கவில்லை. அதனால் அயலவர்கள் அவள் மேல் அன்பு கொண்டிருந்தனர். கலைத்துறையில் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தும் பெரிய தம்பி போடியார் பழமைவாதி என்பதால் கலாசாலை செல்ல அனுமதிக்கவில்லை. அதனால் அவளுக்குள் கணணித்துறையில் ஏதாவது படிக்க வேண்டுமென்ற ஆர்வம் உதித்து குறுகிய கால கணனி டிப்ளோமா ஒன்றைப் பூர்த்தி செய்து கொண்டாள்.

அத்திருமண வீட்டின் சந்திப்பைத் தொடர்ந்து இருவருக்கும் தனிமையில் சந்திக்கும் வாய்ப்பு நிறையவே கிடைத்தது. இவ்வாறு தொடர்ந்த இவ்விருவரது காதல் இரு வீட்டாருக்கும் தெரிய வந்தது. ஊராருக்கும் கொஞ்சம் கொஞ்சமாகத் தெரிய வர “சாந்தன் நல்ல பொடியன். படிச்சவன் என்ற தலைக்கனமே அவனுக்கிட்ட இல்ல. எல்லோரிடமும் சிரிச்சுப் பேசுவான். ஓப்பீசுக்குப் போனாலும் நல்லாவே கவனிப்பான். பெரிய தம்பி போடியார் கொடுத்து வைக்கணும் அவனைப் போல மாப்பிள்ளை எடுக்க. குட்டியும் நல்லவள். அவளுக்கிட்டயும் பணக்காரன்டபிள்ள என்ற பெருமை கொஞ்சமும் இல்ல. சோடி சேரண்டா இப்படித்தான் சேரணும். போடியார் என்னதான் டொக்டர், இன்ஜினியர் மாப்பிள்ளை எடுத்தாலும் இப்படி யொரு மருமகன் எடுக்க மாட்டாரு” இப்படி இந்தக் காதல் ஜோடிகளின் வர்ணனை ஊராரால் வர்ணிக்கப்பட்டது.

போடியார் மூத்த மகளுக்கு, டாக்டர் மாப்பிள்ளை எடுக்கக் கொடுத்த சீதனம் மூன்று பிள்ளைகளுக்கும் வீடு கட்டி மாப்பிள்ளை எடுத்திருக்கலாம். அப்படி சீதனம் சீர்வரிசை கொடுத்து எடுத்தும் அவரின் பண்புகளும் சமூகத்தோடு உள்ள தொடர்புகளும் கொஞ்சம் கூட சரியில்லை. அதனாலேயோ என்னவோ பெரிய தம்பி போடியார் விடயம் அறிந்து மகளின் விருப்பமும் தெரிவும் நல்லதாகவே இருப்பதாக உணர்ந்தார். “சமூகம் மதிக்காத ஒருத்தரை மாப்பிள்ளையாக எடுப்பதிலும் பார்க்க மதிக்கிற ஒருவரை மணமகனாக எடுப்பது தனக்கும் தனது பரம்பரைக்கும் பெருமையே” என விளங்கிக் கொண்ட போடியார் சாந்தன் வீட்டுக்கு மாப்பிள்ளை பேசச் சென்றார். சாந்தனின் வீட்டாருக்கு ஆரம்பத்தில் விருப்பம் சற்றுக் குறைவாக இருந்தது. அதற்குப் பல காரணங்களும் இருந்தன. இருப்பினும் சாந்தனின் விருப்பம் நிராகரிக்க முடியாதவொன்றாக அவனுக்குள் முடிவாகி விட்டதால் குடும்பத்தினர் ஒத்துக் கொண்டனர். திருமண நாளும் நிச்சயிக்கப்பட்டது. அவளும், அவனும் இணையும் நாளை எதிர் பார்த்திருந்தனர். இன்ப ஆசைகள் இருவர் நெஞ்சமெங்கும் சுற்றிப் பறந்து திரிந்தன. திருமண நாளும் வந்தது...

பல கோலங்களில் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மணமேடையில் அழகு ராணியாக மணப்பெண் என்ற பெயருடன் அமர்த்தப்பட்டிருந்தாள் சரோஜா. திருமண விருந்தாளிகளின் கண்கள் எல்லாம் அவளையே இமைவெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தன. அவள் அழகை வர்ணிப்பதற்கு வார்த்தைகள் இருக்கவில்லை. மாப்பிள்ளை சாந்தன் கலாச்சார உடைக்கு சற்று மேலே சென்று கோட் சூட் அணிந்து மணமகனுக்குரிய சிறப்புடன் மாப்பிள்ளைத் தோழனினால் அழைத்து வரப்பட்டு சரோஜாவின் அருகில் அமர்த்தப்பட்டான். ஒருவரையொருவர் பார்த்து புன்னகைத்துக் கொண்டனர். ஆகா! பொருத்தம் ரொம்பப் பொருத்தம். முன்னால் இருந்தவர்களின் வாய்கள் முணுமுணுத்தன. அவ்வளவு தான் பெரிய... சத்தம்... கேட்டது... மணமேடையில் இருந்த மின்விளக்கு வெடித்துச் சிதற நெருப்பு சுவாலை விட்டெரிந்தது. கல்யாண வீடு அல்லோல கல்லோலப்பட்டது. வீட்டில் இருந்தவர்கள் சிதறி ஓடினர். சிலர் காயங்களுடன் கதறி அழுதனர். அழுகுரல் வானைப் பிளந்தது. ஊராரின் உதவியோடும் அயலவர்களும் சேர்ந்து மிகவும் சிரமப்பட்டு தீயை அணைத்தனர். தீயும் அணைந்தது. உள்ளே சாந்தனும், சரோஜாவும் ஒருவரையொருவர் கட்டியணைத்தபடி கருகிக் கிடந்தனர். அவர்கள் வாழ்க்கையின் ஆரம்ப நாளே முடிவு நாளாகவும் மாறியது. ஆம் இருவரும் இறையடியெய்தி விட்டனர் ஆயிரம் ஆசைகளோடு... ஊரே துயரத்தில் ஆழ்ந்து கிடந்தது. நல்ல இரு உயிர்களின் பரிதாபப் பிரிவினால் “உண்மைதான் நல்லவர்கள் நீண்ட காலம் வாழ்வதில்லை” ஊரார் பேசிக் கொண்டனர்.

(கற்பனையில் பூத்தது.)

---

# தீர்ந்த சந்தேகம்

சத்துருக்கொண்டான்
கே.வின்சன்.

மாலை நான்கு மணி. சுரேஸ் வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தான். வீட்டை அணுகும் போது அவனுக்கு ஒரே அதிர்ச்சி! வழமைக்கு மாறாக வீட்டுக் கதவுகள், ஜன்னல்கள் எல்லாம் மூடப்பட்டிருந்தது. உள்ளே ஒரு ஆண் குரல் கேட்டது. சுரேஸ் வீட்டுச் சுவரோரம் சாய்ந்து நின்று கொண்டு சற்றுக் காது கொடுத்துக் கேட்டான்.

“ஆமா வினு, உங்களை அடிக்கடி வந்து பார்த்திட்டுப் போகாட்டால் மனதுக்கு ரொம்பவும் சங்கடமாக இருக்குது. வரும் வழியில உங்களுக்கு ஏதாச்சும் வாங்கி வரணும் போல இருந்துச்சு. எனக்குப் பிடிச்ச கலரில உங்களுக்காக ஒரு சாரி வாங்கி வந்திருக்கிறேன். உங்களுக்கு பிடிச்சிருக்குதா? இல்லையான்னு இதைப்பிரிச்சுப் பாருங்க...” என்றது அந்த ஆண் குரல்.

“இதோ பாருங்க. நீங்க விருப்பப்பட்டு எனக்கு வாங்கிக் கொண்டு வந்து தந்த ஏதாச்சையும் நான் எப்போதாவது எனக்குப் பிடிக்கலைன்னு உங்ககிட்ட திருப்பித் தந்திருக்கேனா? உங்களுக்குப் பிடிச்சிருந்தா அது எனக்கும் பிடிச்ச மாதிரித் தான்...”

“அதென்ன பிடிச்ச மாதிரித்தான். அரைகுறை விருப்பத்தோடு சொல்லுகிற மாதிரி இருக்குது” என்றான் அவன். கலகலவென்று அந்த அறையே அதிரும்படியாக சிரித்தாள் வினுஷா. அவளது சிரிப்பில் கலந்து கொண்டான் அவனும்.

ஒட்டுக் கேட்டுக் கொண்டு நின்றிருந்த சுரேஷிற்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. “ம்... பாழாய்ப் போன இவளுக்கு என்ன கொழுப்பு. என்ன மாதிரி அவனோடு சிரிச்சு சிரிச்சுப் பேசுறாள். நான் இவளுக்கு என்ன குறை வெச்சேன். ஏன் இவள் இப்படியெல்லாம் நடந்துக்கிறாள். எனது ஒவ்வொரு மாதச் சம்பளத்திலையும் அவளுக்குப் புடிச்ச கலரிலையே ஒவ்வொரு பட்டுப் புடவை புதுசு புதுசா வாங்கிக் கொடுக்கின்றேனே? அப்படியிருக்க அவள் ஏன் எவனோ ஒருத்தன் புடவைக்கு ஆசைப்பட வேணும். இவள் பெயரைக் கூட அவன் சுருக்கமா “வினு” என்று அழைக்கின்றான். நான் கூட இப்படி அழைச்சதில்லையே! என்னமா உரிமை கொண்டாடுகிறான். நான் இவளைத் திருமணம் செய்து கொள்வதற்கு முன்பே ரெண்டு பேருக்கும் ரகசியத் தொடர்பு இருந்திருக்குமோ? இருந்த படியால்தானே ரெண்டு பேரும் உரிமையோடு பழகுறாங்க. இது முன்னமே எனக்குத் தெரியாமல் போச்சுதே! தெரிந்திருந்தால் இவளது நிழலைக் கூட நான் தொட்டிருக்கவே மாட்டேன். கல்யாணம் செய்து கொண்ட புதுசுல என்னமாக என்னோடு நடந்து கொண்டாள். இப்போது அப்படியெல்லாம் இல்லையே? இதற்கெல்லாம் இவன் தான் காரணம். இவனை சும்மா விடக் கூடாது. தொட்டுத் தாலி கட்டிய புருசன் வீட்டில இல்லாத நேரம் பார்த்து. எவனோ ஒருத்தனோடு உறவாடும் இவள்தான் ஏக பத்தினியா? இவள் பத்தினியே இல்லை. இவளைப் போய் உத்தமி என்று இத்தனை நாளும் நான் நம்பி இருந்தது எவ்வளவு தப்பாப் போச்சுது. இனியும் இவளை நான் நம்பப் போறதில்லை. இவள் வேசக்காரி! இத்தனை நாளும் என்னை சிரிச்சு சிரிச்சு மயக்கிய மோசக்காரி! இனியும் இவளோடு நான் சேர்ந்து வாழப்போறதில்லை.” சுரேஷின் முகம் கோபத்தில் சிவந்து கொண்டது.



ஒன்றல்ல - இரண்டல்ல எட்டு மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக கடுமையான வேலை செய்துவிட்டு கணவன் களைத்துப் போய் வீடு வரும் போது தனது மனைவி எவனோ ஒருத்தனுடன் தனது கணவன் வீடு வந்து விட்டதைக் கூட கவனியாது தன் பாட்டில் தன்னையே மறந்த நிலையில் உல்லாசமாக இருந்தால் எந்த ஒரு ஆண் மகனுக்குத் தான் ஆத்திரம் வராது போகும்.

சுரேஷ் சுற்றும் முற்றும் முற்றத்தை நோட்டம் விட்டான். பெரியதொரு இரும்புக் கம்பி ஒன்று தான் அவன் கண்களில் தென்பட்டது. அதைக் கையில் எடுத்துக் கொண்டு வாசற்படிக்கட்டுகளில் ஏறினான். உள்ளே தனது மனைவியின் பலத்த சிரிப்பொலி! அது அவனது ஆத்திரத்தை மேலும் இரு மடங்காக்கியது.

வீட்டுக்கதவினை மெதுவாகத் திறந்தான். அமர்ந்திருந்தவன் சுரேஷினது பார்வைக்கு பின்புறம் காட்டி அமர்ந்திருந்தது. சுரேஷிற்கு வசதியாகப் போய்விட்டது. தனது பலம் முழுவதையும் வரவழைத்துக் கொண்டு அமர்ந்திருந்தவனின் தலையில் இரு கைகளாலும் ஓங்கி ஒரு அடிவிட்டான். “அம்மா” என்று பலமாகக் கத்தியபடி தரையில் சரிந்தான் அவன்.

“என்னங்க! என்ன காரியம் பண்ணிட்டீங்க” என்று அந்த அறையே அதிரும்படி கத்தினாள் அவனது மனைவி வினுஷா. விழுந்தவன் யார் என்று அறிந்து கொள்வதற்காக வேண்டி விழுந்தவன் தலையை சப்பாத்துக் காலினால் நிமிர்த்திப் பார்த்த சுரேஷ் அதிர்ந்தான். ஆம் அவளுக்கென இருந்த ஒரே அண்ணன் சுரேன் இரத்த வெள்ளத்தில் பிணமாக மிதந்தான். “அண்ணா” என்ற அவளது கூக் குரல் திசையெங்கும் கேட்க சிலையாய் நின்றான் சுரேஷ்.

(யாவும் கற்பனை)

# மெஸ்மரிசம் ஹிப்னாடிசம்

## தொழில் முறை மருத்துவங்களுக்குச் சவால் - 04

மெஸ்மரிசம் முறையை தெரிந்துகொள்ளாததற்கு முன்பே தொழில் முறை மருத்தவர்களுக்கு இவர் ஒரு சவாலாக திகழ்ந்தார்.

ஜான் எல்லியட்சன் முறையான மருத்துவக் கல்வியைப் பயின்று பட்டம் பெற்றார். அத்துடன் மருந்துகள் தயாரிப்பதிலும் வல்லுனர் என்பதைக் குறிக்கும் "ணிரு" என்ற பட்டத்தையும் எடின்பரோ சர்வகலாசாலையில் பெற்றார். இந்நாளில் டாக்டர்கள் சர்வசாதாரணமாக பயன்படுத்தும் நாடி, இருதய துடிப்பறியும் கருவியான ஸ்டெதாஸ் கோப்பை தொழில் முறையில் முதன் முதலாகப் பயன்படுத்தியவர் எல்லியட்சன் தான்.

டாக்டர்கள் அக்காலத்தில் சில வகை குருட்டு நம்பிக்கைகளின் அடிப்படையில் செயற்பட்டு வந்தனர். அறுவைச் சிகிச்சை செய்யும்போது நோயாளியின் உடலிலிருந்து பெருமளவு இரத்தம் வெளியேறுவது நோயாளிக்கு நன்மையே விளைவிக்கும் என்பது அக்கால டாக்டர்களின் நம்பிக்கைகளில் ஒன்று. அறுவைச் சிகிச்சையின் போது நோயாளிகள் வலியை அனுபவித்து அதைச் சகித்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்பது அக்கால டாக்டர்களின் நம்பிக்கைகளின் மற்றொன்று.

மேற்சொன்ன இரண்டு விஷயங்களையும் அறிவுக்குப் புறம்பானவை - நோயாளியின் நலனை பெரிதும் பாதிக்கவல்லவை என்று டாக்டர் எல்லியட்சன் கடுமையான குரலில் ஆட்சேபித்தார். அறுவை சிகிச்சை செய்யும் போது நோயாளிக்கு வலி தெரியாமலிருக்க ஏதாவது செய்வது தான் சரியான நடைமுறை என்றும், அறுவைச் சிகிச்சையின் போது பெருமளவு இரத்தசேதம் ஏற்படாமல் தவிர்க்க வழி முறைகளைக் கண்டாக வேண்டும் என்றும் டாக்டர் எல்லியட்சன் வாதித்தார்.

பழைய பாணியில் செயல்ப்பட்ட டாக்டர்கள் டாக்டர் எல்லியட்சனின் சிந்தனைகளை மூர்க்கமாக எதிர்த்தனர். டாக்டர் எல்லியட்சன் மருத்துவத் தொழிலின் கௌரவத்தைக் காப்பாற்றவில்லை என்று பழைய பாணி டாக்டர்கள் குற்றம் சுமத்தினர். "மருத்துவத் தொழில் என்பது கௌரவத்தைக் காப்பதற்கு ஏற்பட்டதல்ல- அது பிணியாளர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்காகத் தோன்றியது." என்று அழுத்தமான குரலில் டாக்டர் எல்லியட்சன் திருப்பியடித்தார்.

டாக்டர் ஜான் எல்லியட்சனுக்கு மெஸ்மரிசம் தொடர்பாக 1887 ஆம் ஆண்டுவாக்கில்தான் ஆர்வம் ஏற்பட்டது. டாக்டர் மெஸ்மரின் சீடர்களில் ஒருவர் என்று கருதப்பட்ட டுபெடிட் (Dupotetu) என்ற அறிஞரைச் சந்தித்து மெஸ்மரின் சிகிச்சை முறையினைக் கற்றுத் தேர்ந்தார். பின்னர் அவர் டாக்டர் மெஸ்மரின் முறையைப் பயன்படுத்தி நோயாளிகளுக்கு சிகிச்சை செய்ய முற்பட்டார்.

அப்போது டாக்டர் எல்லியட்சன் லண்டன் சர்வகலாசாலையில் இணைக்கப்பட்டிருந்த மருத்துவமனையில் தலைமை டாக்டராகப் பணியாற்றி வந்தார். அந்த மருத்துவமனை தோன்றுவதற்கே டாக்டர் எல்லியட்சன் காரணமாக இருந்தார்.

டாக்டர் எல்லியட்சன் மருத்துவத்துறைக்கு புறம்பான முறையில் செயற்பட்டு மருத்துவ இயலைச் சீரழிக்கிறார் என்று மருத்துவமனையைச் சார்ந்த பிற டாக்டர்கள் டாக்டர் எல்லியட்சனுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். மருத்துவமனை நிர்வாகிகளும் மெஸ்மரிசம் போன்ற நடைமுறைகளை மருத்துவத் தொழிலோடு சேர்க்கக் கூடாது என்று கண்டித்தனர். டாக்டர் எல்லியட்சன் தமக்கு இலட்சிய நோக்கம் பெரிதே தவிர, பதவிக் கட்டுப்பாடுகள் அல்ல என்று கூறி பதவியை தூக்கி எறிந்துவிட்டு வெளியேறி விட்டார்.

பின்னர் டாக்டர் எல்லியட்சன் டாக்டர் மெஸ்மரின் சிகிச்சை முறையின் சிறப்பினை உலகிற்கு பிரசாரம் செய்யும் நோக்கத்துடன் ஜாயிஸ்டு ( Zoist) என்ற பெயரில் ஒரு பத்திரிகையைத் துவக்கினார். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பிரசுரமான அந்தப் பத்திரிகை மூலம் மெஸ்மரிசத் தத்துவம் குறித்தும், சிகிச்சை முறை குறித்தும் தீவிரமான முறையில் பிரசாரம் செய்ய முற்பட்டார்.

(தொடரும்)

---

எண்ணும் ஆற்றலிலும், செயற்படும் ஆற்றலிலும் மட்டுமல்லாமல் எந்தவொன்றின் பகுதியாகவும் நீங்கள் இருக்கக்கூட விரிந்தொரு வெளியில் வாழும் உணர்விலும் எல்லையற்றதாகிறது.

தியானம் அதன் பின் இயக்கம்.

அது ஒருவர் அல்லது பலரின் அன்பு அன்று.

போய், எவ்வகை அளவீடும் அற்றுப் போகிறது.

இந்த கிளையில் ஒழுங்கு, அழகு, செறிவு உடைய அமைதி ஏற்படுகிறது. அவை எல்லாம் நீங்கள் ஒரு மலரை நாசமாக்கி விடுவதுபோல் நாசமாக்கி விடக் கூடியனவே. ஆனாலும் அதன் அழியக்கூடிய நெய்தல் தன்மை

# தியானம்

அது பொன்னாலோ, மண்ணாலோ ஆன எந்ததொரு சாடியிலிருந்து யாரொருவரும் எடுத்துக் குடிக்கக் கூடிய நீரமுதம். அது வற்றாது. அப்போது எந்த ஒரு மருந்தும் கண் மயக்கமும் உண்டு



பண்ண முடியாததொரு விந்தை நிலை ஏற்படுகிறது. அப்போது மனம் தனக்குள் தானே நுழைந்து மேற்பரப்பில் புகத் தொடங்கி, மேலும் மேலும் ஆழமாகத் துருவிச் சென்று இறுதியில் ஆழம், உயரம் என்பதெல்லாம் பொருளற்றதாய்ப்

யாலேயே அது அழிக்க முடியாததாகிறது. இந்தத் தியானம் இன்னொருத்தரிடமிருந்து கற்றுக் கொள்ள முடியாதது. நீங்கள் அதுபற்றி அறியாத நிலையில் ஆரம்பிக்க வேண்டும். தியானம் மனம் வேர் பிடிக்கத் தொடங்கும் நிலம். அன்றாட வாழ்க்கைப் போராட்டம், துன்பம் மின்னி மறையும் இன்பம்.

அங்கிருந்து அது ஆரம்பிக்க வேண்டும். ஒழுங்குக்கு கொண்டு வரவேண்டும். அங்கிருந்து முடிவில்லா நிலைக்கு நகர வேண்டும். ஆனால் நீங்கள் ஒழுங்கு செய்யும் ஒன்றைப் பற்றி மட்டுமே கவலை கொள்வதனால் அந்த ஒழுங்கே அதற்குரிய வரம்புகளை ஏற்படுத்தும். அப்புறம் அந்த மனமே தனக்குத் தானே கைதியாகிவிடும். இந்த மன இயக்கத்தில் எல்லாம் நீங்கள் எப்படியாவது அக்கரையிலிருந்து ஆரம்பிக்க வேண்டும்.

எப்போதும் இக்கரை பற்றியும் ஆற்றை எப்படிக் கடப்பது என்பது பற்றியும் கவலை கொள்ளலாகாது.

நீங்கள் எப்படி நீந்துவது என்பது அறியா நீருக்குள் பாய வேண்டும்.

தொடரும்.....

---



# ஆண்மைக் குறைவும் பெண்மைக் குறைவும்

## தாமதம் கூடாது - 04

ஆண்மைக்குறைவை நீக்கிக் கொள்ள டாக்டரிடம் ஆலோசனையும் சிகிச்சையும் பெறுவதில் எவ்வித தவறும் கிடையாது. ஒரு கணவன் தனக்குக் காய்ச்சல் அடித்தால் சிகிச்சை பெறுவதற்காக டாக்டரிடம் செல்கிறான். நெஞ்சு வலி என்றால் டாக்டரிடம் செல்கின்றான். வயிற்று வலி என்றால் டாக்டரிடம் செல்கிறான்.

அதே போல்தான் ஆண்மைக் குறைவு ஏற்பட்டாலும் சிகிச்சை பெறுவதற்காக டாக்டரிடம் செல்ல வேண்டும். இதில் வெட்கப்படுவதற்கோ அல்லது அவமானப்படுவதற்கோ எதுவுமில்லை

சரி ஆண்மைக்குறைவு என்றால் என்ன? அதைப் பற்றி விவரமாகத் தெரிந்து கொள்வதற்கு முன்னால் மேல்நாடுகளில் திருமணம் செய்து கொள்ளும் ஆடவர்கள், பெண்கள் ஆகியோரின் நிலையைப் பற்றிச் சற்றுத் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

### பள்ளியில் பாலியல் கல்வி

மேல்நாடுகளில் திருமணம் செய்து கொள்ளப்போகும் ஆடவர்களும், பெண்களும் தங்களுடைய உயிர்நிலை உறுப்புக்கள், அவற்றின் அமைப்பு, செயல்முறை ஆகியவற்றைப் பற்றியும் உடலுறவைப் பற்றியும் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அது எப்படி சாத்தியமாகிறது?

மேல்நாடுகளில் பள்ளிகளிலேயே உடலியல் கல்வி கற்றுக் கொடுக்கப்படுகிறது. அதனால் திருமணமானதும் நடைபெறும் உடலுறவு நிகழ்ச்சிகளில் தங்கள் உயிர்நிலை உறுப்புக்கள் எவ்வாறு பங்கேற்றுச் செயல்படுகின்றன என்பதை அங்குள்ள ஆடவர்களும் பெண்களும் பள்ளிப் பருவத்திலேயே கற்றுக்கொண்டு விடுகிறார்கள். அத்துடன், அவர்கள் திருமணம் செய்துகொள்வதற்கு முன்னால் உடலியல் நிபுணரிடம் சென்று அவருடைய ஆலோசனைகளையும் பெறுகிறார்கள். தங்கள் சந்தேகங்களையும் போக்கிக் கொள்கிறார்கள்.

அதனால் அவர்களால் தங்கள் மணவாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளையும் அவற்றின் தன்மைகளையும் உடனே புரிந்துகொள்ள முடிகிறது. அவற்றை சமாளிக்க உடனே டாக்டரிடம் சென்று ஆலோசனை பெறவேண்டும் என்பதையும் நன்கு உணர்ந்து கொள்ளமுடிகிறது.

ஆனால் நம் நாட்டில் ஆடவர்கள், பெண்களின் நிலை வேறு விதமாக இருக்கிறது. இருபது அல்லது முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் திருமணம் செய்துகொள்ள போகிறவர்களில் பெரும்பாலானவர்களுக்கு உடலுறவு நிகழ்ச்சியைப் பற்றிச் சரியாகத் தெரிந்திருக்கவில்லை. முதலிரவு நடைபெறும் தினத்தன்றுதான் பெரியவர்களின் மூலமாகத்தான் அப்போது கணவனும் மனைவியும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வார்கள். உடலுறவு நிகழ்ச்சியை பற்றியே முதலிரவு தினத்தன்றுதான் தெரிந்துகொள்பவர்களுக்கு மணவாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை எப்படிச் சமாளிப்பது என்பது எப்படித் தெரிந்திருக்க முடியும்?

(தொடரும்...)

---

# இதோ உதவி 04

## உங்கள்வாழ்வின் இலட்சியத்தை நீங்கள் அடையலாம்!

நீங்கள் உங்கள் வாழ்வின் இலட்சியத்தை அடையலாம். உங்கள் இப்போதைய நிலை எதுவாயினும் உங்கள் வாழ்க்கையின் கனவை நனவாக்கலாம். உங்கள் இலட்சியம மிகவும் உயர்வானது. ஆனால் இப்போது இருக்கும் நிலை தாழ்வானது என்றாலும் நல்லது தான். நல்லது? ஏன்?

கஷ்டங்களை வெற்றி கொள்வதற்கு, கடினமாக உழைக்கத் தூண்டுதலும், தேவையும் அவசியம். சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அதிக முயற்சி தேவை. "அதிகமாக ஈடு கட்டுதல்" என்று இதை மனோதத்துவ நிபுணர்கள் சொல்கிறார்கள். 'வெற்றியின் இரகசியம் கடினமான உழைப்பு என்ற இரண்டு சொல்லில் அடங்கியிருக்கிறது' என்கிறார் அமெரிக்க சூப்பர் கோடீஸ்வரன் பால் கெட்டி. யாரும் எங்கும் கடினமாக உழைக்கலாம். உங்கள் கஷ்டங்கள் அதிகமாக இருந்தால் அவைகளைப் போக்குவதற்கு தீவிரமாக உழைக்க வேண்டும். கடினமாக உழைக்க - உழைக்க அதிக அளவு வெற்றி காணலாம்.

இதனால் வெற்றி அடைவதின் வேகம் அதிகரிக்கும். உங்கள் தீர்வை சீக்கிரம் அடைவீர்கள். பிறகு மீண்டும் கடினமாக உழைக்க அதுவே தூண்டிவிடும். மிகக் கடினமான சோதனைகளுக்கு ஆட்பட்டவர்களுக்கு அதிகமான சமயோசி தங்களும் தோன்றும். அவர்களுக்குத் தீர்வு உடனடித் தேவை. கடின உழைப்பு நல்ல பலன் தரும். அவர்கள் கடுமையாக உழைக்காவிட்டால் அவர்கள் தோற்றுப் போவார்கள். முயற்சி செய்து உழைத்தால் வெற்றிகளை அள்ளிக் குவிப்பார்கள். வெற்றி அடையும் வாய்ப்பின் தீவிரத்தை அவர்கள் அதிகம் காட்டுவார்கள். குறைவான கஷ்டங்கள் உள்ளவர்



கள் தீவிரமாக உழைக்காமல் சோம்பி இருப்பார்கள்.

கடினமாக உழைக்காமலே முன்னேற வேண்டும் என்று நினைப்பவர்கள் வெற்றியடைய முடியாது என்பதே பல ஆண்டுகளாக நாம் கண் கூடாக காணும் உண்மை. கடினமாக உழைத்தால் எவரும் - ஒவ்வொருவரும் தனது திட்டத்தை நிறைவேற்ற முடியும். நிச்சயமாக அதிகம் சொல்ல வேண்டி இருக்கிறது. அவைகளைப் பின்பு பார்க்கலாம். முதல் பாடம் கடினமான உழைப்பு. கடின உழைப்புக்கு நீங்கள் தயாரான உடன் இந்தத் தொடரில் சொல்லப்பட்ட நிரூபிக்கப்பட்ட வெற்றி முறைகளைப் பயன்படுத்தி உங்கள் நோக்கம் எதுவாயினும் அதை அடைவதற்கு நிச்சயம் முடியும்.

இருந்தாலும் கஷ்டம் அதிகம் இருப்பவர்களுக்கு அனுகூலங்களும் அநேகம் என்பதை முதலில் புரிந்து கொள்வோம். கடினமாக உழைப்பதற்கு அவர்கள் ஆயத்தமான நிலையில் அதிகமாக பலன் அவர்களுக்கு வந்து சேரும். குறைவான கஷ்டங்கள் உள்ளவர்கள் முயற்சி செய்யத் தயங்குவதால் தன்னைத் தானே ஈடுபடுத்துவதில் அதிக அக்கறை காட்ட வேண்டும். உங்கள் இப்போதைய நிலை எதுவாயினும் உங்கள் வாழ்வின் இலட்சியத்தை அடையமுடியும்.

அதற்கு முதல் தேவை ஆசை.

உங்கள் வாழ்க்கையின் இலக்கை நீங்கள் அடைய வேண்டுமென்று தீவிரமாக விரும்பினால் கடினமாக உழையுங்கள்.

இந்தத் தொழிலில் சொல்லப்பட்ட முறைகளைப் பயன்படுத்திக் கடினமாக உழையுங்கள். நீங்கள் நினைத்ததை அடைய வழியையும் சக்தியையும் பெறுவீர்கள். கடினமாக உழையுங்கள்.

(தொடரும்...)

# சும்மா ஒரு வானொலி பரிசு

இதய வாசகர்களே!
உங்கள் அனைவருக்கும் வாரா வாரம் சும்மா ஒரு வானொலி பரிசாகப் போகிறது.
இங்கே பிரசுரமாகும் கூப்பனில் உங்கள் பெயர், முகவரி என்பவற்றை மாத்திரம் நீங்கள் அனுப்பவேண்டும். ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம். ஆயினும் அவை இங்கு பிரசுரிக்கப்படும் கூப்பனாகமட்டும் இருக்க வேண்டும். பிரதிபண்ணியோ, வேறு வகைகளில் நகல் எடுத்தோ அனுப்பக் கூடாது.
முடிவுகள் வெளியான ஒருமாதகாலத்திற்குப் பின்னர் எந்நேரமும் நீங்கள் இடி-தமிழ்கேசரி அலுவலகத்திற்கு வந்து உங்களுக்குரிய வானொலியைப் பெற்றுக் கொள்ளலாம்.
ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.
கீழுள்ள கூப்பனில் பெயர், முகவரியை எழுதி தபாலட்டையில் ஒட்டி அனுப்பவும்.

பரிசுக் கூப்பன் - 04 முடிவு திகதி : 23.03.2003

பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

..............................


# இணைக்கும் போட்டி - இல 04

இதயம் நிறைந்த வாசகர்களே!

பிரிந்திருப்போரை ஒற்றுமைப்படுத்துவது உயர்ந்த செயலாகும். உங்களிற் பலரும் அந்த உயர்ந்த செயலைப் புரிந்திருப்பீர்கள் பாராட்டுக்கள். பிரிந்திருப்போரை இணைக்கும் உங்களுக்கு மேலும் பயிற்சியும் பரிசும் தருவதற்கு தமிழ்கேசரி விரும்புகின்றது ஆனால் இங்கே இணைப்பதற்கு மனிதர்கள், பொருட்கள் என்று பலவும் உள்ளன.

என்ன யோசிக்கிறீர்கள்? வாரா வாரம் இங்கு நாம் ஒரு படத்தைப் பல்வேறு துண்டுகளாக வெளியிடுவோம். அத் துண்டுகளை இணைத்து முழுமையான படமாக்கி நீங்கள் எமக்கு அனுப்ப வேண்டும். இது தான் போட்டி. இப்போட்டியில் வெற்றிபெறும் அதிர்ஷ்டசாலி ஒருவருக்கு முடிவுகள் வெளியான ஒருமாதகாலத்திற்குள் காசோலையாகவோ, மணி ஓடராகவோ வந்து சேரும். பாராட்டுக்குரிய பலரின் பெயர், முகவரிகளும் இடம்பெறும். மறந்து விடாதீர்கள். இங்குள்ள முகவரிக் கூப்பன் ஒட்டப்படாமல் வருகின்ற விடைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இனி இணையுங்கள்!



இணைக்கும் போட்டி - இல 04
தமிழ்கேசரி,
3A, தர்மராஜமாவத்தை,
கொழும்பு-03.

பரிசு ரூபா : 200/-
முடிவு திகதி : 23.03.2003

## குறுக்கெழுத்துப்போட்டி இல:04

பரிசு ரூ 300/= முடிவு திகதி: 23.03.2003

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 க | 2 ற் | 3 பூ | 4 ர | 5 ம் | 6 |
| 7 ன் | 8 | 9 ஜோ | 10 | 11 ஆ | 12 தி |
| 13 ண | 14 தி | 15 த | 16 ய | 17 | 18 ர |
| 19 தா | 20 க | 21 ம் | 22 | 23 பு | 24 வி |
| 25 ச | 26 தி | 27 | 28 ஜ | 29 ணை | 30 ய |
| 31 ன் | 32 | 33 தி | 34 சோ | 35 | 36 ம் |

**இடமிருந்து வலம்:**
01. பூஜைக்குத் தேவையான எரியும் பொருள்.
11. தொடக்கம்.
13. வினாயகக் கடவுள் (குழம்பி)
19. இது ஏற்பட்டால் தண்ணீர் குடியுங்கள்.
23. பூமி
25. இது செய்து ஆட்சிகளைக் கவிழ்ப்பர்.
28. ஒன்றும் செய்ய இயலாத நிலை (குழம்பி)
33. வெளிச்சம் (குழம்பி)

**மேலிருந்து கீழ்:**
01. தமிழ் திரையுலகில் கொடி கட்டிப் பறந்த கவிஞன்.
03. உலகிற்கு இப்படியும் ஒரு பெயர்.
05. 'இல்லை' என்பதற்கு எதிர்ச்சொல் (தலைகீழ்)
12. திரைகடலோடியும் தேட வேண்டியது.
14. கலண்டர் வாங்குவது பெரும்பாலும் இது பார்க்கத்தான்.
23. நெருப்பில்லாமல் இது வருமா?
28. இலங்கையர்களின் பிரதான பகல் உணவு (தலைகீழ்)

# சொல்ஜாலப் போட்டி இல:04

பரிசு ரூபா: 300/-
முடிவு திகதி: 23.03.2003

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ம் | ர | பா | ம் | க | ப் | ட |
| கா | ம் | ரு | ண் | ம | த | கு |
| பு | வை | டி | மு | ம் | ம் | ங் |
| த் | யி | ரோ | கு | ம் | ட | பி |
| ள | டி | ம் | பெ | வி | மா | லை |
| ப் | து | ஷ் | ள | ரி | ன் | ம் |
| க | கு | த் | ஷே | டை | க் | ம |

அன்பு வாசகர்களே!

இது முற்றிலும் புதுமையான தொரு போட்டி. இங்கேயுள்ள 49 கட்டங்களிலும் உள்ள எழுத்துக்களைக் கொண்டு நாம் தந்திருக்கும் தரவுகளுக்கான சொற்களைக் கண்டு பிடித்து இங்குள்ள முகவரிக் கூப்பன் ஒட்டப்பட்ட தபாலட்டையில் உரிய முடிவுதிகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும். நட்ட நடுவில் உள்ள தடித்த எழுத்து கு. எனவே முதலாவது தரவுக்கான விடை குடம் இவ்வாறே ஏனைய தரவுகளுக்கான சொற்களையும் கண்டுபிடித்து அனுப்ப வேண்டும்.

பரிசு விபரம்:

முற்றிலும் சரியான விடைகளை எழுதியோரில் அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்படும் முதல் மூவருக்கு முறையே (ரூபா 150/-, ரூபா. 100/-, ரூபா. 50/- பரிசாகக் கிடைக்கும். மற்றும் பாராட்டுக்குரிய ஐவரின் பெயர் விலாசங்கள் பிரசுரமாகும். பரிசுத் தொகை முடிவுகள் வெளியான ஒரு மாத காலத்திற்குள் காசோலையாகவோ, மணிஓடர் மூலமாகவோ உங்களை வந்து சேரும். மற்றும் இப்போட்டி சம்பந்தமாக ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது. இனி, போட்டிக்குச் செல்வோம்.

01. கிராமங்களில் தண்ணீர் சேகரித்து வைக்க இன்றும் பயன்படுவது.
02. மங்களகரமான வைபவங்களை இது ஏற்றித் தொடங்குவர்.
03. தாமரை
04. மாடு கன்று ஈனும், வாழை இது ஈனும்.
05. கோயில்கள் புனரமைக்கப்பட்ட பின் இது நடாத்துவர்.
06. பெரு வியாதி
07. இவன் பேச்சு விடிஞ்சால் போச்சு.
08. இவளின் உள்ளத்தில் குடியிருக்க வர வேண்டும் என்று பாடினான் ஒரு கவிஞன்.
09. நமது நாட்டுப் பணிப் பெண்கள் அதிகம் உள்ள நாடு.
10. வீடுகள் பல சேர்ந்த ஒரு பகுதி.
11. பணம் இருக்கிறதென்ற திமிரில் சிலர் இது போட்டுத் திரிவர்.
12. இந்து சுமங்கலிகள் அதிகமாக இந்தப் பொட்டை வைத்துக் கொள்கிறார்கள்.

சொல்ஜாலப் போட்டி இல - 4 *பதில்களை அனுப்புவேண்டிய முகவரி :*

சொல்ஜாலப் போட்டி - 04
தமிழ்கேசரி,
3A, தர்மராஜமாவத்தை,
கொழும்பு-03.

# குறுக்கெழுத்துப் போட்டி -02ன் முடிவுகள்

நூற்றுக்கணக்கான வாசகர்கள் சரியான விடைகளை எழுதியிருந்தார்கள். அவர்களில் பரிசு, பாராட்டு பெறுவோர் விபரம் வருமாறு:

**முதலாம் பரிசு ரூபா 150/=**
தி.கிருபாகரன்,
C/O-நி.சாருமதி,
வயல் எல்லை,
தும்பளை,
பருத்தித்துறை.

**இரண்டாம் பரிசு ரூபா 100/=**
ஐ.விஜயபாலன்,
இ.212, பிரதான வீதி,
கொழும்பு-11.

**மூன்றாம் பரிசு ரூபா 50/=**
க.கமால்தீன்,
புன்னக்குடா வீதி,
ஏறாவூர்-03.

## பாராட்டுக்குரியவர்கள

சர்மிளா காதர்,
மின்ஹாத் கனிஷ்ட வித்தியாலய விடுதி,
யோனகபுர,
திக்குவல்லை.

எச்.எம்.அர்கம்,
வட்டார இல-04,
எருக்கலம்பிட்டி,
மன்னார்.

ப.சரோஜினி,
10/06, கிராமோதய மாவத்தை,
ஒபேசேகரபுர,
ராஜகிரிய.

வி.செல்வநாயகம்
சத்திரை,
சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

எம்.எல்.எப்.றிஸ்வானா,
இல.547, பெண்கள் பாடசாலை வீதி,
ஏறாவூர்-03.

*குறுக்கெழுத்துப் போட்டி 03ன் முடிவுகள் அடுத்த வாரம் வெளியாகும்.*

# சொல்ஜாலப் போட்டி 02ன் முடிவுகள்

**சரியான விடைகள்**
01. ஆமை
02. ஆறுவது சினம்
03. ஆண்டவன்
04. ஆகாயம்
05. ஆசிரமம்
06. ஆங்கிலம்
07. ஆணவம்
08. ஆரோகணம்
09. ஆத்திரம்
10. ஆமணக்கு
11. ஆரணங்கு
12. ஆட்டுப்பட்டி
13. ஆசை

சரியான விடைகளை எழுதிய நூற்றுக்கணக்கான வாசகர்களில் பரிசுக்குரியவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்:

**முதலாம் பரிசு ரூபா 150/=**
எஸ்.நாவலன்,
உடுவில் வீதி,
மருதணார் மடம்,
சுன்னாகம்.

**இரண்டாம் பரிசு ரூபா 100/=**
த.றிஷானந்த்,
ஸ்ரீஅகம்,
ஆரையம்பதி-02.

**மூன்றாம் பரிசு ரூபா 50/=**
சி.றதீபா,
இல.11, நாலாவது ஒழுங்கை,
கதிரேசு வீதி,
வைரவ புளியங்குளம்,
வவுனியா.

## பாராட்டுக்குரியவர்கள்

*க.கமால்தீன்,
புன்னக்குடா வீதி,
ஏறாவூர்-03.

*சில்மியா சின்னா,
இல.42, மச்சமாடி வீதி,
ஏறாவூர்-03A.

*ஏ.அரசரத்தினம்,
சேனையூர்-06,
மூதூர்.

*சர்மிளா காதர்
மின்ஹாத் கனிஷ்ட வித்தியாலய விடுதி,
யோனகபுர,
திக்குவெல்ல.

இணைக்கும் போட்டி இல.02ற்கான சரியான விடை:
சச்சின் டெண்டுல்கர்

சரியாக இணைத்து அனுப்பிய ஏராளமான வாசகர்களில் பரிசுக்குரிய அதிர்ஷ்டசாலி:
*ஏ.சி.எம்.முஸம்மில்,
இல.222, சதாம் வீதி,
வட்டதெனிய,
கம்பளை

*சும்மா ஒரு வானொலி பரிசுப் போட்டி இல.02 ன் வானொலியை வென்ற வாசகர்:*
என்.எம்.ரம்சீன்,
இல.174, மத்திய வீதி,
ரஹூமானியா பாத்,
அட்டாளைச் சேனை-07.

# ஊற்று

கே.கார்த்திகாயினி

## இவ்வாரத் தென்றல்

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்"

அதிகாரம் 97 குறள் 969

தன் மயிர் திரளில் இருந்து ஒரு மயிர் நீங்கினாலும் உயிர் வாழாத கவரி மானைப் போன்றவர் தம் மானம் அழியக்கூடிய நேரம் வந்தால் அதைத் தாங்காமல் உயிரை மாய்த்துக் கொள்வர்.

## நீங்களும் எழுதலாம் 03

மின்னும் தாரகை யேவா
மேதினி மீதினில் வாவா

அன்புச் சிறுவர்களே! ஒரு கவிதையின் இரு வரிகள் தரப்பட்டுள்ளன. இக் கவிதையினைத் தொடர்ந்து உங்கள் கற்பனையில் கவிதையைப் பூரணப்படுத்துங்கள். உங்கள் கவிதை வரிகளின் எண்ணிக்கை நாலு வரிகளுக்குக் குறையாமலும், ஆறு வரிகளுக்குக் அதிகமாகாமலும் இருக்கட்டும். கவிதையைப் பூரணப்படுத்தி அதற்குப் பொருத்தமான தலைப்பிட்டு எமக்கு அனுப்பி வையுங்கள். முதலிடம் பெறும் கவிதை இப் பகுதியில் பிரசுரிக்கப்படுவதோடு ரூபா. 100 பரிசாகவும் வழங்கப்படும். 2ம், 3ம் இடத்தைப் பிடிக்கும் கவிதைகளுக்கு முறையே ரூ. 50, ரூ. 25 பரிசாக வழங்கப்படும். எங்கே, இப்பொழுதே எழுத ஆரம்பியுங்கள் பார்க்கலாம். கவிதைகள் எமது முகவரி ஒட்டப்பட்ட தபால் அட்டையில் வந்து சேரவேண்டும்.

முடிவுத் திகதி : 23.03.2003.

தமிழ் கேசரி
நீங்களும் எழுதலாம்
போட்டி இல : 3
இல: 3 A, தர்மராஜ மாவத்தை,
கொழும்பு - 03.

### பரிசுக்குரிய கவிதை

மழையே மழையே
நீ வர வேண்டும்
எம்வாழ்வில் இன்பம்
நீ தர வேண்டும்
தழையும் வயல், செடி
நல் பூங்காவும்
தரணியில் செழித்தே சீர்
பெற வேண்டும்

நீங்களும் எழுதலாம் போட்டி 01 இல் ரூ100 பரிசு பெறுபவர்:
**எம்.எல்.எப்.றிஸ்வானா, ஏறாவூர் 03.**

## வரையுங்கள், வர்ணம் தீட்டுங்கள் 03



மாணவர்களே! இங்கு உள்ள படத்திற்கு தரப்பட்ட புள்ளிகளை ஒழுங்காக இணைத்துப் படத்தை முழுமைப்படுத்தி வரைந்து அழகிய வர்ணம் தீட்டி அனுப்புங்கள். சிறப்பாக வரைந்து வர்ணம் தீட்டி அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா. 100 பரிசாக வழங்கப்படும். ஓவியங்கள் எமது முகவரி ஒட்டப்பட்ட தபால் உறையில் வைத்து அனுப்பப்படல் வேண்டும்.


முடிவு திகதி :- 23.03.2003

தமிழ் கேசரி
வரையுங்கள் வர்ணம் தீட்டுங்கள்
போட்டி இல : 3
இல: 3 A, தர்மரா்ஜ மாவத்தை,
கொழும்பு - 03.

வரையுங்கள் வர்ணம் தீட்டுங்கள் போட்டி 1 இல் ரூ100 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:
**ரீ.எச்.அஹமது புஹைல், ஏறாவூர்.**
பாராட்டினைப் பெறுவோர்:
1) **தி.தீபதர்ஷன், காலி**
2) **தே.மதன்ராஜ், மட்டக்களப்பு.**

## உங்களுக்குத் தெரியுமா?

1) உலகிலே பெண் எழுத்தாளர்கள் அதிகமாக உள்ள நாடு எது?
ரஷ்யா
2) இலங்கையின் ஆதி மனிதன் வாழ்ந்த சில கற்குகைகள் எவை?
குருவிற்ற, பலாங்கொட, மஹியங்கனை
3) உலகில் எத்தனை வகையான தாவரங்கள் உள்ளன?
$2\frac{1}{2}$ இலட்சம்
4) சின்னஞ்சிறு இதயத்தைக் கொண்ட மிருகம் எது?
சிங்கம்
5) ஜனநாயகத்தின் தாய் நாடென அழைக்கப்படுவது எது?
கிரேக்கம்
6) உலகிலே இரண்டு கண்டங்களை தொட்டுக்கொண்டிருக்கும் நாடு எது?
துருக்கி
7) உலகில் "பொற் கோவில்" நகரம் என கூறப்படுவது எது?
அமிர்தசரஸ் (இந்தியா)



ஜெனிபர் மகேஷிகா பெரேரா
ஆண்டு - 5ஏ,
கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை,
கொழும்பு - 15

# சத்திர சிகிச்சைத் துறையில் ஒரு முன்னோடி

— அல் - ஸஹ்றாவி —

ஸ்பெயினை முஸ்லிம்கள் ஆட்சி செய்தகாலத்தில் தலை சிறந்த சத்திர சிகிச்சை நிபுணராகத் திகழ்ந்தவர் அபுல்காஸீம். இவரது முழுப் பெயர் அபுல்காஸீம் கலாப் இப்ன்அல்- அப்பாஸ் அல்ஸஹ்ராவீ என்பதாகும். ஸ்பெயின் கோர்டோவா நகருக்கு அண்மையிலிருந்த ஸஹ்றா என்ற இடத்தில் பிறந்ததனால் இவர் அல்ஸஹ் ராவி என அழைக்கப்பட்டார். கி.பி 936ல் பிறந்த இவர் ஸ்பெயினின் இரண்டாவது அல் - ஹகம் மன்னரின் அரசவை மருத்துவராகப் பணியாற்றியுள்ளார்.

சத்திர சிகிச்சைத் துறையில் இவர் பல்வேறு புதிய சாதனைகளை ஏற்படுத்தினார். சூடிடுவதன் மூலம் அல்லது கடுங்காரங்களை தடவுவதன் மூலம் வெட்டுக் காயங்களைத் தொற்று நீக்கம் செய்தல் சிறுநீர்ப்பையிலிருந்து கற்களை அகற்றுதல், மிருகங்களை வெட்டித் திறத்தல், குருதிப் பெருக்கைத் தடுத்தல். கண், காது, தொண்டை சம்பந்தமான சத்திர சிகிச்சைகள். கருப்பையினுள் இறந்துவிட்ட குழந்தையை அப்புறப்படுத்துதல். நோயுற்ற அல்லது புரையோடியுள்ள அவயங்களை வெட்டி நீக்குதல். போன்ற நுணுக்கமான சத்திர சிகிச்சை முறைகளை அவர் அறிமுகப்படுத்தினார்.

சத்திரசிகிச்சைக்குரிய பல்வேறு கருவிகளைக் கண்டுப் பிடித்த பெருமை ஸஹ்றாவிற்கு உண்டு. செவியின் உட் பகுதியை அவதானிப்பதற்கான கருவி, சிறுநீர் வழியின் உட்புறத்தை பரிசோதிப்பதற்கான கருவி, தொண்டையிலிருந்து பிற பொருட்களை நீக்குவதற்கான கருவி என்பன இவற்றில் முக்கியமானவையாகும். ஹீமோபீலியா என்னும் குருதியுறையா நோய் பற்றி முதன்முதலில் விபரித்தவர் என்ற பெருமையையும் ஸஹ்றாவி பெற்றுக் கொண்டார். சத்திரசிகிச்சை துறையில் அவர் வகுத்துக் கொடுத்த கோட்பாடுகள் மருத்துவ உலகில் ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேல் பின்பற்றப்பட்டன. இவர் கி.பி. 1013ல் தனது 77வது வயதில் காலமானார்.

**தருவது:– கா.வா அப்துல் மனாப் பொத்துவில் – 1-6**

## விடுகதைகள்

1.பார்க்க அழகான பூ கையில் எடுக்க முடியாத பூ அது என்ன?
2.போட்ட இடத்தில் அடிபடுவான் கிடைத்த இடத்தில் கிழிபடுவான்?
3.வெயிலில் மலரும் காற்றில் உலரும் அது என்ன?

விடைகள்
1.நெருப்பு
2.கடிதம
3.வியர்வை

**தருவது: சு.நேசினி கம்பளை**

# கெற்றிலாக மாறிய நாய்

ராமசாமி வயதானவர். ஒரு மலையடிவாரம் வழியே நடந்து கொண்டிருந்தார். வழியில் மூன்று சிறுவர்கள் ஒரு நாயைத் துன்புறுத்திக் கொண்டிருந்தனர். ராமசாமிக்கு இந்தக் காட்சி மிகவும் வேதனை அளித்தது. உடனே சிறுவர்களிடம் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து நாயை விலைக்கு வாங்கினார். நாய்க்கு காயம்பட்ட இடத்தில் மருந்து வைத்து, கட்டுப் போட்டார். இரண்டு நாட்களில் நாய் குணமானதும் மலையடிவாரத்தில் கொண்டு வந்து விட்டார்.

"இனிமேல் இந்தப் பக்கம் வராதே. காட்டுக்குள் போய் சுதந்திரமாக வாழ்" என்று கூறியதும் நாய் மகிழ்ச்சியுடன் வாலை ஆட்டியது. நாட்கள் சென்றன. ராமசாமி ஏழ்மையில் வாடினார். இன்னும் சில நாட்களில் பண்டிகை வர இருந்தது. ராமசாமியின் கையில் பணம் இல்லை. செய்வதறியாது மலையடிவாரத்தில் நடந்துக் கொண்டிருந்தார். அப்போது ஒரு நாய் ஓடிவந்து அவர் காலைக் நக்கியது.

"ஐயா, என்னை நினைவிருக்கிறதா? சென்ற ஆண்டு மூன்று சிறுவர்களிடமிருந்து என்னைக் காப்பாற்றினீர்களே!" என்றது நாய்.

"ம்.... நினைவிருக்கிறது. எப்படி இருக்கே?" என்று வாஞ்சையுடன் தடவிக் கொடுத்தார் ராமசாமி. "நான் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறேன். தங்களுக்கு என்ன கவலை? என்னால் முடிந்த உதவியைச் செய்கிறேன்" என்றது- நாய். "உன்னால் என்ன செய்யமுடியும்? இந்த ஊர் பண்ணை யார் என் நிலத்தை ஏமாற்றி வாங்கி விட்டார். நான் பண்டிகையைக் கொண்டாடக்கூட முடியாமல் இருக்கிறேன்" என்று வருத்தத்துடன் கூறினார் ராமசாமி.

"ஐயா, நான் ஒரு தங்கக் கெற்றிலாக மாறிவிடுகிறேன். என்னைக் கொண்டுபோய் பண்ணையாரிடம் விற்று விடுங்கள். உங்களுக்கு நிறையப் பணம் கிடைக்கும்" என்ற



நாய் உடனே தங்கக் கெற்றிலாக உருமாறியது.

ராமசாமி பண்ணையாரிடம் கொண்டுப் போய் கெற்றிலைக் கொடுத்தார். பண்ணையார் உடனே ராமசாமியின் நிலத்தைத் திருப்பிக் கொடுத்ததுமல்லாமல் சிறிய பணத்தையும் கொடுத்தார். ராமசாமி மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினார். பண்ணையார் கந்தனை அழைத்து, "இந்த தங்கக் கெற்றிலை நன்றாக தேய்த்து, டீ போடு" என்று கூறினார். கந்தன் புளியைப் போட்டு நன்றாக தேய்க்க ஆரம்பித்தான். "ஐயோ மெதுவாய் தேய், வலிக்குது" என்று கெற்றிலில் இருந்து குரல் வந்தது.

கந்தசாமி பயந்து, பண்ணையாரிடம் தகவலைச் சொன்னான். பண்ணையார் வந்து பார்த்தார். கெற்றில் அமைதியாக இருந்தது. பண்ணையார் கண் முன்னே கெற்றிலை சுத்தம் செய்து அடுப்பில் வைத்தான் கந்தன். "ஐயோ சுடுதே" என்ற சத்தம் கெற்றிலிலிருந்து வந்தது. பண்ணையார் கண் முன்னாலேயே தங்கக் கெற்றில் நாயாக மாறி ஓட்டம் எடுத்தது. எல்லோரையும் ஏமாற்றிய பண்ணையார் ஏமாந்து போய் நின்றார்.

# இளைய கேசரி

—தயாரிப்பு: எம்.எம்.ஏ.ஸமட்—

**இளைய வாசகர்களுக்கு இதய வந்தனங்கள்!**

**ஆற்றலும் வாய்ப்பும் பற்றி உங்களுடன்...**

வாய்ப்புகள் என்பவை தாமதமாக வருவன அல்ல. அவற்றை நாம்தான் உருவாக்கிக் கொள்ளவேண்டும். அதற்கே நம் ஆற்றலில் ஒரு பகுதியைச் செலவிட்டாக வேண்டும்.

வாய்ப்புகள் தாமதமாக நம்மைத்தேடி வந்து நம் வீட்டுக் கதவைத் தட்டாது. நாம்தாம் வாய்ப்புகளைத் தேடிச் செல்ல வேண்டும். எனக்கு இந்த வாய்ப்புக் கிட்டவில்லையே என்று ஏங்கிக் கொண்டிருக்காமல் இந்த வாய்ப்பை என்னால் அடைய முடியும் என்னும் நம்பிக்கையோடு முயற்சியைத் தொடங்க வேண்டும்.

சிந்தித்துப் பார்த்தால் ஆற்றல் நம்மை இயக்குவதும் நாம் ஆற்றலைப் பயன்படுத்துவதும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. இங்கே நம் மூளையின் அற்புதமான சக்தியையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். மனிதன் செயல்பட உத்வேகம் பெறும் பொழுது மூளையும் உத்வேகம் பெறுகிறது.

ஆற்றலை வெளிப்படுத்த வாய்ப்புகளை தேடுவது ஒரு நிலை. கிட்டிய வாய்ப்பில் ஆற்றலை வெளிப்படுத்துவது இன்னொரு நிலை. இந்த இரு நிலைகளும் வாழ்க்கையில் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. ஆற்றல் வெளிப்படும்போதுதான் ஒருவருக்கு அங்கீகாரம் கிட்டுகிறது. ஆற்றலை வெளிப்படுத்த அறியாதவர்கள் சமூகத்தின் மதிப்பைப் பெறும் வாய்ப்பை இழந்தவர்கள் ஆகிறார்கள்.

எனவே, ஆயிரம் ஆற்றல்களை அடக்கிக்கொண்டுள்ள நம் இளமை அவற்றினை வெளிப்படுத்தக் கூடிய வாய்ப்புகளையும் தேடிப்பெற்று, இலட்சிய வாழ்க்கையின் உச்ச நிலையை அடைந்து கொள்ள வேண்டும்.

அடுத்த வாரம் உங்களுடன் இணையும் வரை...

தோழமையுடன்,
தயாரிப்பாளர்.

## சொந்தச் சிறகுகளில் பறப்போம்!

## மெழுகுவர்த்தி செய்வது எப்படி?

மெழுகுவர்த்தி தயாரிப்பதற்கு பெரிய அளவிலான இயந்திர சாதனங்கள் தேவைப்படுவதில்லை. சிறு மூலதனம் போதுமானது. இத்தொழிலை வீடுகளில் ஓர் உபதொழிலாகவும் மேற்கொள்ள முடியும். உற்பத்தி செய்யப்பட்ட மெழுகுவர்த்தி இலகுவில் பழுதடையும் தன்மையற்றது. எனவே நீண்ட காலத்திற்கு இதனைப் பேணிவைக்க முடியும். பிரதான மூலப் பொருட்கள் பெற்றோலியக் கூட்டுதாபனத்திலிருந்து பெறப்படவேண்டும். உற்பத்திக்கான ஏனைய மூலப்பொருட்களை உள்ளூரிலேயே பெற்றுக் கொள்ளலாம். வழிபாட்டுத் தலங்களிலும், மின்வசதியற்ற நகரங்களிலும் கிராமப் புறங்களிலும் மெழுகுவர்த்திகள் பயன்படுத்தப்படுகின்றன. எனவே தொடர்ச்சியான சந்தை வாய்ப்பு மெழுகுவர்த்திக்கு உண்டு.

**மூலப்பொருட்கள்:**

பரவின் மெழுகு, ஸ்டியரிக் அமிலம், பருத்திநூல் (இல 10), எரிபொருள், பொதிசெய்யும் பொருட்கள்.

**உபகரணங்கள்:**

மெழுகுவர்த்தி அச்சு, தண்ணீர் சூடாக்கும் பாத்திரம், அலுமினிய கொள்கலன் (மெழுகை உருக்குவதற்கு) தராசு, அடுப்பு (கேஸ், மண்ணெண்ணெய், விறகு)

**செய்முறை:**

மூலப் பொருட்களை பரவின் மெழுகு (97 பங்கு) ஸ்டியரிக் அமிலம் (3பங்கு) நிறுத்தெடுக்கப்பட வேண்டும். இரண்டினையும் ஒரு பாத்திரத்தில் இட வேண்டும். இப்பாத்திரத்தை நீர் நிறைந்த பாத்திரம் ஒன்றில் வைத்து அந் நீர் நிறைந்த பாத்திரத்தைச் சூடாக்க வேண்டும். இப்போது மெழுகு உருகித் திரவ நிலையை அடையும்.

மெழுகுவர்த்தி தயாரிப்பதற்கான அச்சின் நடுப்பாகத்தில் திரிக்கான நூலைப் பொருத்த வேண்டும். பின் திரவநிலையிலான மெழுகை விரைவாக அச்சில் ஊற்ற வேண்டும். இந்த அச்சினைப் பின்னர் மெழுகுவர்த்தி இறுகிவரும் வரை குளிர்ந்த நீர் உடைய பாத்திரத்தில் இடுதல் வேண்டும் அச்சில் இணைக்கப்பட்டுள்ள நூலைத் துண்டித்து மெழுகுவர்த்திகளை வெளியே எடுத்தப் பொதி செய்தல் வேண்டும். மெழுகுவர்த்தியின் தரம் அச்சில் வார்த்தெடுக்கும் திறனில் தங்கியிருப்பதால் தொழில் நுட்பத்தில் கவனஞ் செலுத்த வேண்டும்.

செய்த மெழுகுதிரிகளை எண்ணிக்கை கணக்கிலோ அல்லது பத்துப் பத்தாகச் செய்யப்பட்ட பொதிகளாகவோ ஆரம்பத்தில் உங்கள் ஊரிலுள்ள சில்லறைக் கடைகளுக்கு விநியோகம் செய்யலாம். பின்னர் தொழிலைப் பெருக்கிக் கொள்ளலாம்.

## குட்டிக் கதை

ஒருவன் நரகத்திற்கு அனுப்பப்பட்டான். எனினும் மூன்று விதமான தண்டனைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் அனுமதியிருந்தது. முதலாவது நெருப்பாலான சப்பாத்தைப் போட்டுக் கொண்டு நரகவாசிகள் அவதிப்பட்டார்கள். இரண்டாவது நெருப்புத் துண்டங்களைக் கையில் ஏந்திக் கொண்டிருந்தார்கள். மூன்றாவதில் நரகவாசிகள் டீ குடித்துக் கொண்டிருந்தார்கள். மூன்றாவதையே சந்தோஷத்துடன் இவன் தேர்ந்தெடுக்க கையில் டீ தரப்பட்டது. குடித்துக் கொண்டிருக்கையிலேயே அந்த நரகத்தின் அதிகாரி சொன்னார்:

"டீ இடைவேளை முடிந்து விட்டது. எல்லோரும் நெருப்பை அள்ளிச் சாப்பிடுங்கள்."

## சற்று சிரிப்போமா...?

**கிறுக்கு விசாரணை**

*நீதிபதி:-* "நீங்கள் எதிரியைக் குறுக்கு விசாரணை செய்யலாம்..."

சட்டத்தரணி:- "எதிரி ஒரு பைத்தியம் மை லோர்ட்!"

*நீதிபதி:-* "அப்போ கிறுக்கு விசாரணை பண்ணுங்க!"

## காதல் பற்றிக் கொஞ்சம்....

உலகப் படைப்பில் காதல் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. காதல் ஒரு உன்னத உணர்வு, எண்ணம், நோக்கம், இயல்பு என்று எப்படிச் சொன்னாலும் அது ஒன்றே. காதல் தியாகத்தின் அடிப்படையில் எழுவது. மனித மனத்தின் தெய்வீக குணம் அது. உடல் மனம் போன்று ஆன்மாவும் மனிதனின் ஓர் அம்சமாகும் இவற்றை இணைப்பது காதல் உணர்வுதான். அது பாசம், பக்தி என்று விசாலமாகிறது. வெவ்வேறு பரிணாமங்களையும் வெளிப்படுத்துகிறது. காதலின் இயக்கம் என்பது உடலின் சங்கமம் மட்டுமல்ல உள்ளத்தின் ஐக்கியப்பாடும் ஆகும். அதுவே ஆன்மாவின் அடையாளம். காதல் என்கிற பலிபீடத்தில் தான் மனித உறவுகள் புனிதம் அடைகின்றன. உலகத்தை இயக்கும் அபார சக்தி காதலுக்கு உண்டு. இன்ன மாதிரி இருக்கும் என்று அதை வரையறுக்கவோ, விளக்கிக் கூறவோ முடியாது. அதற்கென்று விதிகளோ, நிபந்தனைகளோ கிடையாது.



கொஞ்சம் பொறாமை, கொஞ்சம் தியாகம், கொஞ்சம் சுவீகார குணமும் கொண்ட வினோதக் கலவை தான் காதல். காதல், நமது உடலுக்கும் மனதுக்கும், உயிருக்கும், அறிவுக்கும் தேவையான ஊட்டச் சக்தியினை அறிந்து நம்மைப் போஷிக்கிறது. முழுமைப் படுத்துகிறது.

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் ஒரு ஈர்ப்பு சக்தியாய் அறிமுகமாகி, காதல் என்ற வடிவம் பெறும் அந்த உணர்வு உலகமெங்கும் வியாபித்து நிற்கிறது.

காதலுக்கு உலகம் பெரிதல்ல, காதலே பெரிது. கிருஷ்ண பரமாத்விற்காக நஞ்சுண்ட மீராவும், லைலாவிற்காக உயிர்விட்ட மஜ்னுவும் காதலின் வெவ்வேறு பரிமாணங்கள். காலங்கள் மாறினாலும் காதலின் இயல்போ, குலாதி சயமோ மாறுவதில்லை. செல்வம், ஏழ்மை, நிறம், இனம், நாடு, வயது என்றும் எந்தத் தடையும் அதற்கு இல்லை. ரோஜாவின் மென்மையும், கருங்கல்லின் வலிமையும் ஒரு சேரக் கொண்டது காதல்.

இயற்கையான குணம் அது. நாகரீகம், சடங்கு, பண்பாடு எல்லாம் சமூகம் ஏற்படுத்திக் கொண்ட வேலிகள். காதல், இந்த வேலிகளைத் தாண்டுகிறது. காதல் ஒரு அழிவற்ற உந்து சக்தி. பிறப்பிலேயே அமைந்துவிட்ட தாகம் அது. காதலுக்கு எல்லை கிடையாது. அதற்கு பாத்தி கட்ட முடியாது. மகான் "கபீர் தாஸ்" சொன்னார் "காதல் ஒன்றும் தோட்டத்தில் வளர்வதில்லை. சந்தையில் கிடைப்பதில்லை. ராஜாவாக இருந்தாலும் சரி, குடிமகனாக இருந்தாலும் சரி, இதயத்தைக் கொடுத்துத் தான் அதைப் பெற முடியும்"

காதலின் பாதை கடினமானது, அதில் பயணிப்பது அத்தனை சுலபம் அல்ல. காதல் திறந்து கிடக்கும் வீடு அல்ல, உரிமையுடன் நடந்து உள்ளே போய் விடுவதற்கு. தன்னைத் தியாகம் செய்து கொண்டவர்களால் மட்டுமே அங்கு நுழைய முடியும். காதல் என்பது கண்மூடித்தனமான மோகம் அல்ல. எனினும் காதலிலிருந்து மோகத்தை முற்றாகப் பிரிக்க முடியாது.

## நீங்கள் எப்படியோ?

மனோதத்துவ டாக்டர் ஃப்ராங் கேப்ரியோ ஃப்ளோரிடாவைச் சேர்ந்தவர். அவர் ஒவ்வொன்றையும் கூர்ந்து கவனிப்பவர். அப்படிக் கவனித்து அவரவர் மனோ நிலையை விளக்குவார். அது சரியாக இருந்துவிடுகிறது.



சிலர் வெளியிலிருந்து வீட்டுக்குத் திரும்பியவுடனே உடைகளைக் கழற்றியெறிவார்கள். இன்றும் சிலர் சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டு சாவகாசமாகக் கழற்றுவார்கள். ஆடைகளைக் கழற்றும் முறையையும் நேரத்தையும் கொண்டு அவரவர் பண்புகளைத் தெளிவாகக் கூறுகிறார் டாக்டர் ஃப்ராங் கேப்ரியோ.

நிதானமாகவும் கவனமாகவும் ஆடைகளை கழற்றுபவர் மிக்க தன்னம்பிக்கையுள்ளவர். மதிநுட்பமும் வாய்ந்தவர்.

வந்ததும் நகைகளைக் கழற்றி பத்திரமாக வைக்கும் பெண்கள் எதிலும் மிக்க ஆர் வமிக்கவர்கள். அன்பானவர்கள், உணர்ச்சிமிக்கவர்கள், முன் யோசனையுள்ளவராகவுமிருப்பார்கள்.

வெளியிலிருந்து வந்ததும் உடனே ஆடைகளைக் கழற்றுபவர் தங்களை விட மற்றவரது கருத்துக்கு மதிப்பளிப்பவர். அப்படியே காலணியைக் கழற்றுபவர் நம்பிக்கை உள்ளவர். வாழ்க்கையில் மிக்க திருப்தி உள்ளவர்.

ஒரே வழக்கமாக இன்றி, அவ்வப்போது தம் மனதிற்கேற்றபடி கழற்றி வைப்பவர் அசாதாரணமானவர். சுவாரஸ்யமிக்கவர்.

உடைகளை ஒவ்வொன்றாகக் கழற்றி அதனைத் தன் இடத்தில் வைப்பவராய் இருந்தால் குற்றம் காண முடியாதவராயிருப்பார். எதிலும் சிரத்தையாகவுமிருப்பார்.

ஆடைகளைக் கழற்றி மூலைக்கொன்றாக எறிபவர் தன்னைப் பற்றிக் கவலைப்படாதவர். ஆனால் பழகுவதற்கு இனியவர்.

நீங்கள் எப்படி?

## மாற்று

உன் வீதிப் பயணத்தில்
பின் தொடர்ந்து
மனசை இம்சித்தவனை
எப்படிச் சமாளித்தாய்?
பார்த்தவுடன்
மனசுக்குள் பற்றியெரிகிற
காதல் நெருப்பிலிருந்து
எப்படித் தப்பித்தாய்?
யாரைப் பார்த்தாலும்
பேசத் தோன்றி,
கனவு காணும்
புத்தியை
எந்தக் காலால்
எட்டி உதைத்தாய்?
ஒவ்வொரு முறையும்
ஏதாவதொன்றிற்காய்
எரிந்து விழும்
அம்மாவே,
வாலிபத்தை சாதுர்யமாய்
கடக்கும் வழியொன்றை
அடையாளப்படுத்து
முதலில்

-க. அம்சப்பிரியா.

## வேலை வாய்ப்பு தேடுகிறீர்களா?

வேலை தேடிக் கொண்டிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு உதவும் நோக்கில் இளைய கேசரி வெற்றிடங்கள் சம்பந்தமான விபரங்களை திரட்டித் தர முன் வந்துள்ளது. அந்த வகையில் இந்த வாரம்...

### வெளிநாட்டு வேலை வாய்ப்பு

**சவுதி அரேபியா:**

**FOR FAST FOOD RESTAURANT**

| | |
|---|---|
| SERVICE CREW | SR.800 |
| RESTAURANT SUPERVISOR | SR.600 |
| ASSISTANT RESTAURANT MANAGER | SR.2200 |
| RESTAURANT MANAGER | SR.3000 |

| | |
|---|---|
| PROJECT MANAGER | SR.5000 |
| MECHANIC | SR.1400 |
| CRANE OPERATOR | SR.1500 |
| ASPHALT OPERATOR | SR.1400 |
| LAB TECHNICIAN | SR.1400 |
| STEEL FABRICATOR | SR.1400 |
| EQUIPMENT TECHNICIAN | SR.1200 |

மேலதிக விபரங்களுக்கு:

MYOWN
TRADE EXCHANGE (PVT) LTD.
1159/1, 4th Lane, Cotte Road, Rajagirya

**துபாய்:**

*Outdoor Sales Executive
*Wharchouse incharge
*Office Assistant/PRO
*PhotoPrinter/OSS Operator
*Accounts Assistant

*Mechanical Enginner
*Light Vechicle Mechanic
*Auto Electrical Shop
*Supervisor
*Auto Electrician
*Industrial Electrician

தொடர்புகளுக்கு:
MILLENNIUM MANKPOWER SERVICES
**34/1, Iswari Road, Off Havelock Road, Pamankade, Colombo-06. Tel:504030**

## உள்ளூர் வேலை வாய்ப்பு

வீடமைப்பு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு

நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் வெற்றிடங்கள்

01. உதவிப் பணிப்பாளர் பதவிகள் - தரம் IV

02. பயிற்றுவிக்கும் உத்தியோகத்தர் (எலக்ட்ரோனிக்) தரம் VI

03. உதவி நூலகர் பதவி தரம் VI

04. நூலக உதவியாளர் பதவி - தரம் VII

05. களஞ்சியப் பொறுப்பாளர் பதவி தரம் VII

விண்ணப்ப முடிவுத் திகதி: 15/03/2003

மேலதிக விபரங்களுக்கு:

தலைவர்

நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனம்,
123, விஜேராம மாவத்தை, கொழும்பு-07.

# விளையாட்டு

எம். ஐ. அகமட் கபீர்

## சயீட் அன்வரின் சதம் மகள் பிஸ்மாஸுக்கு சமர்ப்பணம்


பாகிஸ்தான் வீரர் சயீட் அன்வர் இந்திய அணியுடனான உலகக் கிண்ணப் போட்டியில் தாம் பெற்ற சத்தை காலம் சென்ற தனது மகளுக்கு சமர்ப்பணம் செய்திருக்கிறார்.

இதேவேளை இப்போட்டியில் இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் தாம் பெற்ற 98 ஓட்டங்களை தனது மூத்த சகோதரர் அஜித் டெண்டுல்கருக்கு சமர்ப்பணம் செய்திருக்கிறார்.

சயீட் அன்வரின் மகள் பிஸ்மாஸ் 2001ம் ஆண்டு ஆகஸ்டில் கடும் சுகயீனம் காரணமாக காலமானார். தனது மகளின் மரணத்தையடுத்து சயீட் அன்வர் இஸ்லாமிய பிரச்சாரப் பணியில் ஈடுபட்டு வருகிறார்.

இதேவேளை இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் இப்போட்டியில் தனது துடுப்பாட்டத்தை தனது மூத்த சகோதரரான அஜித் டெண்டுல்கருக்கு சமர்ப்பணம் செய்துள்ளார்.

உலகக் கிண்ணப் போட்டிகளுக்காக் தென்னாபிரிக்காவுக்கு வரும் முன்னர் எனது சகோதரருடன் போட்டிகள் குறித்த நீண்ட



கலந்துரையாடல்களை நடத்தினேன். இக்கலந்துரையாடல் எனது துடுப்பாற்றலுக்கு மிகவும் உதவியுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்

## சச்சினின் பந்தை வேண்டுமென்றே ரசாக் கோட்டைவிட்டாரா?

இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் சச்சின் டெண்டுல்கர் 32 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை வஸிம் அக்ரம் வீசிய பந்தை யாரும் எதிர்பார்க்காத வகையில் டெண்டுல்கர் தூக்கி அடித்தார். மிட்ஆ.்.ப் திசையில் பறந்து வந்த பந்து அப்துல் ரசாக்கின் கையில் பட்டு கீழே விழுந்தது.

அப்துல் ரசாக் பிடியைத் தவற விட்டதும் பந்து வீசிய வஸீம் அக்ரம் அவரை முறைத்தார். உடனடியாக அப்துல் ரசாக்கைப் பார்த்து "நீ யாருடைய பிடியைத் தவற விட்டிருக்கிறாய் தெரியுமா?" என்று அக்ரம் கேட்டிருக்கிறார். ஆனால் ரசாக் எதுவும் பேசவில்லை. அந்த ஓவரின் தொடக்கத்தில் தான்மிட் ஆ.்.ப் திசையின் முதல் அரைவட்ட எல்லைக் கோட்டின் முடிவில் களத் தடுப்பில் ஈடுபடும்படி ரசாக்கிடம் அக்ரம் சொல்லியிருக்கிறார். ஆனால் ரசாக் கொஞ்சம் நகர்ந்து முன்னே சென்றுவிட்டார். தன்னுடைய கட்டளையை மீறிய ரசாக்கைப் பார்த்து இப்படிக் கேட்டதும், "அவர் அடிக்கும் ஒற்றை ஓட்டங்களை கட்டுப்படுத்தத் தான் நான் முன்னே சென்றேன்" என்று ரசாக் விளக்கம் கொடுத்துள்ளார்.

அதேவேளை அணித்தலைவர் வக்கார், வஸீம் அக்ரமுக்கு போதியளவு ஒத்துழைப்பு கொடுக்கவில்லை என்றும் ஒரு குற்றச்சாட்டு கிளம்பியுள்ளது. சேவாக்கை ஆட்டம் இழக்கச் செய்ய ஆ.்.ப் திசையில் மேலும் ஒரு களத்தடுப்பாளரை நிறுத்தும்படி அக்ரம் கேட்டிருக்கிறார். ஆனால் அக்ரமின் இந்தக் கோரிக்கையை வக்கார் நிராகரித்து விட்டார். அதுமட்டுமன்றி தனக்குத் தேவைப்படாத இடத்தில் அ்ரிடியை களத்தடுப்பில் ஈடுபடுத் தியிருந்ததாகவும் அக்ரம் குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை, சச்சின் டெண்டுல்கரின் பந்தை ரசாக் வேண்டுமென்றே கோட்டை விட்டதாகப் பாகிஸ்தான் ரசிகர்கள் கருதத் தொடங்கியுள்ளனர். அந்தப் பந்தைப் பிடித்திருந்தால் பாகிஸ்தானுக்கே வெற்றி கிட்டியிருக்கும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## இங்கிலாந்து அணித்தலைவர் நசார் ஹுசைன் இராஜினாமா!

ஒருநாள் போட்டிகளுக்கான இங்கிலாந்து கிரிக்கெட் அணி தலைமைப் பதவியிலிருந்து அதன்



தலைவர் நசார் ஹுசைன் இர்ர்ஜினாமா செய்துள்ளார்.

நடை பெற்றுக் கொண்டிருக்கும் 8ஆவது உலகக்கிண்ணச் சுற்றுத் தொடரில் சுப்பர் சிக்ஸுக்கு தெரிவாகாமல் முதற் சுற்றுடன் இங்கிலாந்து அணி வெளியேறியமையினாலேயே அவர் தனது தலைவர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில், "1999 ஆண்டு தலைமைப் பதவியை ஏற்ற நான் இதுவரை 56 ஒருநாள் போட்டிகளுக்குத் தலைமை தாங்கி 28 வெற்றிகளையும், 27 தோல்விகளையும், ஒரு போட்டி வெற்றி தோல்வி இன்றிய முடிவையும் பெற்றுள்ளேன்.

இங்கிலாந்து டெஸ்ட் அணிக்கு தொடர்ந்து தலைமை தாங்குவேனெனினும் அணியின் ஒரு நாள் போட்டிகளுக்கு சிறந்ததோர் இளம் வீரர் தலைவராக நியமிக்கப்பட வேண்டும்" என்றும் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவுக்கு உலகக் கிண்ணம்!

### அர்ஜுனவும் - இம்ரான்கானும் கூறுகிறார்கள்.

இந்திய அணி உலகக் கிண்ணத்தை வெல்லும் ஆற்றலைக் கொண்டுள்ளது. இவ்வாறு இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க, பாகிஸ்தான் முன்னாள் தலைவர் இம்ரான்கான் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இம்ரான் 1992இல் உலகக் கிண்ணத்தை வென்ற பாக். அணிக்கும், அர்ஜுனா 1996இல் உலக சாம்பியனாகிய இலங்கை அணிக்கும் தலைமை தாங்கியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கருத்துத் தெரிவித்த அர்ஜுன ரணதுங்க:-

"கங்குலி இந்தியாவுக்குச் சிறந் தலைவர். அவர் தனது வீரர்களைக் கையாளும் முறைமையையும் மதிக்கிறேன்.

இலங்கை அணியின் வாய்ப்புக்களை நான் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால் இந்தியா இப்போட்டிகளில் பெரும் வெற்றியீட்ட முடியும்" என்றார்.



இம்ரான் கான் தெரிவிக்கையில்:-

இந்தியாவின் துடுப்பாட்டம் பாகிஸ்தானின் பந்துவீச்சை முற்றாக துவம்சம் செய்துவிட்டது.

ஜவகல் ஸ்ரீநாத், ஸஹீர்கான், அஷிஸ் நெஹ்றா ஆகியோரடங்கிய இந்திய வேகப்பந்து வீச்சு நான் கண்ட மிகச்சிறந்த இந்திய பந்து வீச்சு வரிசையாகும்" என்றார்.

# கவி முழக்கம்

### உண்மைக் காதல்

என் நினைவில் நீங்காதவளே...
நித்தம் நித்தம் என் மனதில்,
அலை போல் வருகின்றாயே...
நீ விட்டுச் சென்ற சுவடுகள் கூட
என் மனதைக்
கனக்க வைக்கிறதே
விடியாத இரவுகளாய்
மாறிய நம் காதல்
விடிவுக்கு மருந்தாகுமோ...
எம் உண்மைக் காதல்.

—எம்.ஐ.எம்.நிலாம்,
*காத்தான்குடி 06.*

### புதுக்கவிதை

கவிஞனே!
உன் எண்ணம் எனும்
வயிற்றில் கருக்கட்டி உன்
விரல் எனும் பூமேகம்
பேனாதனைத்தொட்டு
முத்தமிட்ட சில நிமிடங்களில்
காகிதம் எனும் மெத்தை மீது
எனை நீ பிரசவிக்கையில்
பூவுலகில் புதுக் குழந்தையாய்
பூக்கும் புதுக் கவிதை நானே!

—எஸ்.சிவாஜினி,
*பட்டிருப்பு.*

### எப்போது?

மலையகத்தை
அடிமை - எனும்
அரக்கர்களிடம்
இருந்து மீட்டால்
மட்டும் போதுமா?
மது அரக்கனிடம்
இருந்து....
விடுவிப்பது எப்போது?

—கா.சுபாஷ், *டிக்கோயா.*

### சமாதானத்தின் எதிரிகளே!

ரணிலும், பிரபாவும் ஒப்பந்தத்தில்
கை சாத்திட்டாச்சி
புலிப்படையும், ஆயுதப் படையும்
மனித உயிர்களை பறிப்பதில்லை
என உறுதியும் கொண்டாச்சி
வீழ்ந்து கிடந்த பொருளாதாரத்தை
நிமிர்த்தியெடுக்க திட சந்தர்ப்பம்
கொண்டாச்சி
நாம் அனைவரும்
ஒரே இலங்கையர்
என்ற எண்ணமும் மனதில்
உருவாச்சி சமாதானத்தை
எதிர்க்கும் எதிரிகளே
நீங்கள் மட்டும் ஏன் இலங்கையை
இருளில் வைக்க விரும்புகின்றீர்கள்!

—என்.திருக்கேஷ்,
*கொழும்பு-13.*

### நிட்சயம்

மரணம் வருவது
நிட்சயம்
மதுவால் வருவது
உபத்திரவம்
மமதை கொள்வது
மடமைத் தனம்
மதம் மாறி வாழ்வது
அறியாத்தனம்.

—அ.அரசுரெத்தினம்,
*சேனையூர்-06.*

### ஆறுதல்...

பண்டிகைக்கு
பட்டாசு வாங்க முடியாமல்
பரிதவித்துப் போனவன்
ஏக்கத்துடன்
வானத்தைப் பார்த்தான்
இயற்கை நங்கை
அவனுக்காகப்
பட்டாசு வெடித்து
ஆறுதல் சொன்னாள்.

—அ.ஆர்த்தி,
*யாழ்ப்பாணம்.*

### பிரிவு

அதிகாலை...
மழை நேரம்...
ஜன்னல் திறக்க
மனது மறுத்தது.
காரணம் கேட்டேன்
மேகங்களைப் பிரிக்கின்றன
மழைத்துளிகள் - இது
என் காதலியை
பிரிவது போல் என்றது
என் மனது.

ஐ.நதர்சன், *கம்பளை.*

### நினைவுகள்

மழைக்கு இலட்சியம்
பூமியை அடைவது
நீருக்கு இலட்சியம்
தாகத்தை தீர்ப்பது
எனது இலட்சியமோ
இராமனைக் காண்பது
தேடினேன் ஏங்கினேன்
ஓர் மூலையில்
சென்ற இடத்தில் சந்தித்தேன்
என் மன காதலனை
பார்த்தவுடன் பார்த்தன
முத்தான விழிகள்
பார்வைகள் ஏதோ
இரகசியம் பேசியது
நெஞ்சு துடித்தது
கண்கள் பனித்தன
அடக்கு அடக்கு
புத்தி சொல்லியது என் மனது
கண்கள் கலைந்தன
இருவரும் கலைந்தனர்
முத்தான வருடங்கள்
மூன்று கழிந்தன
பொன்னான நினைவுகள்
இன்னும் கழியவில்லை

—யோ.யோதிகா,
*திருகோணமலை.*

### ஆறாத வடு

கன்னியே!
கனவுகள் தந்தாய் - கூடவே
கண்ணீரும் சிந்த வைத்தாய்!
உந்தன் கயல் விழிகளால்
எனக்கு ஜாடை காட்டி - நீயோ
ஜன்னலோர எட்டாப்
பூவாக மலர்வதேனோ?
என் காதல் இம்சைகளை
ஒரு கணம்
இதயம் திறந்து
எண்ணிப்பாரடி!
உன் சுகமான
சுமைகள்
கூடஎனக்கு
சுதந்திரக் காற்றாக
சுகந்தம் தருகிறது - ஆனால்
பெண்ணே உன்
மௌன மொழியின்
அர்த்தம் தேடி
அகராதிகள் பலவற்றில்
ஆராய்ச்சி செய்கிறேன்!
ஆறாத வடுக்கள்
தந்து விட்டு நீ
ஆனந்தமாய்ச்
சிரிக்கிறாய் - உன்னால்
ஆத்மாவொன்று
ஆர்ப்பரிப்பதை
அறியாத
பூவையாக!

—எஸ்.ஜனூாஸ்,
*சாய்ந்தமருது-03.*

புதுமைப்பித்தன் கதைகள் 3



# ஒரு நாள் கழிந்தது

-கடந்த வாரத் தொடர்ச்சி-

"தோளுக்கு மேலே தொண்ணூறு, தொடச்சுப் பார்த்தா ஒண்ணுல்லே!" என்று பாடிக்கொண்டு குழந்தை எழுந்தது.

"என்ன ஸார், குழந்தையை நீங்க இப்படி விடலாமா?" என்று சொல்லிக் கொண்டே சுப்பிரமணியம் அவர்கள் பக்கம் வந்தார்.

"என்ன ஸார் செய்யட்டும்! என்ன சொன்னாலும் கேட்கிறதில்லை என்ற உறுதி மனசிலே ஏறிப்போயிருக்கு. வெளிலே புறப்பட்டாச்சா, அப்புறம் தேடிக்கொண்டு பின்னோட பத்துப் பேர். இவளைக் கடைக்கனுப்பிச் சுட்டா தாயார். இவ்வளவு நேரம் அந்த ரிக்ஷாக்காரனோட தர்க்கம் - என்ன செய்கிறது! வாருங்கள் ஸார், உள்ளே! ஒன் மினிட்! விளக்கை ஏத்துகிறேன்."

குழந்தை அலமு அதற்குள் வீட்டிற்குள், "பல்லு மாமா வந்துட்டார்" என்று பொதுவாக உச்சஸ்தாயில் விளம்பரம் செய்து கொண்டு ஓடி விட்டாள்.

"குழந்தை துருதுருவென்று வருகிறதே! பள்ளிக்கூடத்திற்காவது அனுப்பக் கூடாதா?" என்றார் நண்பர்.

"ஆமாம் ஸார் தொந்தரவு, சகிக்கலே. அங்கேதான் கொண்டு தள்ளணும், வயசு கொஞ்சம் ஆகட்டுமே என்று பார்க்கிறேன்" என்றார் முருகதாசர், விளக்குத்திரியை உயர்த்திக் கொண்டே.

"நேத்துப் பீச்சுக்குப் போயிருந்தேன்! சுந்தரத்தைப் பார்த்தேன்..." என்று ஆரம்பித்தார் சுப்பிரமணிய பிள்ளை.

"அந்த ராஸ்கல் வந்துட்டானா! என்றைக்கும் அவன் தொல்லைதான் பெரிய தொல்லையாக இருக்கிறது. இங்கே வந்தான்னா ஆபிஸுக்கு வந்து யாருக்காவது வத்தி வச்சுட்டுப் போயிடரது... மின்னே வந்தப்போ, என்ன எழவு சொன்னானோ, அந்த ஆர்ட்டிஸ்ட் 'பதி' இருந்தானே அவனுக்கு, சீட்டுக் கொடுக்க வழி பண்ணிட்டான்..." என்று படபடவென்று பேசிக்கொண்டே போனார் முருகதாசர்.

"அப்படிப் பார்த்தா உலகத்திலே யார்தான் ஸார் நல்லவன்! அவன் உங்களைப் பத்தி ரொம்பப் பிரமாதமாக அல்லவா கண்ட இடத்திலெல்லாம் புகழ்ந்துகொண்டிருக்கிறான்?"

"சவத்தெள்ளுங்க, ஸார்! பேன் பார்தாலும் பார்க்கும், காதை அறுத்தாலும் அறுக்கும். அவன் சங்காத்தமே நமக்கு வேண்டாம்.... நீங்க என்ன சொல்ல வாயெடுத்தீர்கள்?"

"அதுதான், உங்களப் பத்தித்தான் ஒரு இங்கிலீஷ்காரனிடம் பிரமாதமாகப் பேசிக்கொண்டிருந்தான்..."

"இவ்வளவுதானா! கதையை எழுதரேன் அல்லது கத்தரிக்காயை அறுக்கிறேன், இவனுக்கென்ன?..."

அதே சமயத்தில் வெளியிலிருந்து "முருகதாஸ்! முருகதாஸ்!" என்று யாரோ கூப்பிட்டார்கள்.

"அதுதான்! அவன்தான் வந்திருக்கிறான் போலிருக்கிறது! பயலுக்கு நூறு வயசு..."

"'சைத்தான் நினைக்கு முன்னால் வந்து நிற்பான்' என்பதுதான்!" என்று முணுமுணுத்தார் முருகதாசர்.

பிறகு அவர் எழுந்து நின்று வெளியில் தலையை நீட்டி, "யாராது?" என்றார்.

"என்ன! நான்தான் சுந்தரம், இன்னும் என் குரல் தெரியவில்லையா?" என்று உரத்த குரலில் கடகடவென்று சிரித்துக்கொண்டு உள்ளே நுழை



ந்தார் வந்தவர். அவருடைய சிரிப்புக்கு இசைந்தபடி காலில் போட்டிருக்கும் ஜோடு தாளம் போட்டது.

"என்ன சுந்தாமா? வா வா! இப்பொத்தான் உன்னைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். நீயும் வந்தாய்! காப்பி போடச் சொல்லட்டுமா? அலமு! அலமு!" என்று உரக்கக் கூவினார் முருகதாசர்.

எங்கிருந்தோ, "என்னப்பா!" என்று அலமுவின் குரல் வந்தது.

"அம்மாவை மூணு கப் காப்பி போடச்சொல்லு. சீக்கிரம் ஆகணும்!"

"நீ என்ன பத்திரிகையையே விட்டு விட்டாயாமே! இப்பத்தான் கேள்விப் பட்டேன்"

"வயிற்றுப் பிழைப்பிற்கு எதில் இருந்தால் என்ன? சீலைப் பேன் குத்துகிறதும் ஒரு பிஸினஸ் ஆக இருந்து, அதில் ஒரு 'சான்ஸ்' கிடைத்தால் அதையும் விட்டா வைக்கிறது? நான் பத்திரிகையை விட்டு விட்டா கதை எழுதாமல் இருந்து விடுவேனோ? ஒரு பெரிய நாவலுக்குப் 'பிளான்' போட்டிருக்கேன். தமிழன்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தால், எனக்குக் காகிதம் வாங்கவாவது காசு கிடைக்கும். அதில் 'சென்ட்ரல் ஐடியா' என்ன தெரியுமா?..."

"நீங்க நேற்று பொருட்காட்சிக்குப் போனீர்களாமே!" என்று பேச்சை மாற்ற முயன்றார் சுப்பிரமணிய பிள்ளை. இந்த விஷயத்தைத் தொட்டுவிட்டால், முருகதாசர் கீறல் விழுந்த கிராமபோன் பிளேட் மாதிரி விடாமல் திருப்பித் திருப்பி அதையே கதைத்துக்கொண்டிருப்பார்.

"அப்பா! காப்பியாயிட்டுது. நீதான் வந்து எடுத்துக்கிட்டுப் போகணும். சுடுது!" என்று சொல்லிக்கொண்டு, நிலைப்படி இரண்டு பக்கத்தையும் தொட்டவண்ணமாய் ஒற்றைக் காலை ஆட்டிக்கொண்டு நின்றாள் அலமு.

"அம்மா எங்கே?"

"அம்மா சாத்தெ வடிச்சுக்கிட்டிருக்கா, அப்பா!"

"சீ! இதோ வாரேன், போ!"

"வாயேன்!"

"வர்ரேன்னா, போடி உள்ளே!"

"காப்பி ஆறிப்போயிடும், அப்பா!"

"இதோ ஒரு நிமிஷம்!" என்று சொல்லிக்கொண்டு உள்ளே சென றார்.

"மாமா! நீ என்ன கொண்டாந்தே!" என்று கேட்டுக்கொண்டு, சுப்பிரமணியபிள்ளை மடியில் உட்கார்ந்து, கழுத்தில்ருக்கும் நெக்கட் டையைப் பிடித்து விளையாட ஆரம்பித்தாள் அலமு.

"அதப் பிடித்து இழுக்காதே! மாமாவுக்கு கழுத்து வலிக்கும்!" என்றார் சுந்தரம் பிள்ளை.

"வலிக்காதே!" என்று மறுபடியும் ஆரம்பித்தாள்.

முருக தாசரும் மேல்துண்டின் உதவியால் ஒரு செம்பை ஏந்திய வண்ணம் உள்ளே நுழைந்தார்.

"என்னப்பா, மூணு டம்ளர் கொண்டாந்தே! எனக்கில்லையா?"

"உனக்கென்னடி இங்கே! அம்மா கூடச் போய்ச் சாப்பிடு"

"மாட்டேன்" என்று ஒரு டம்ளரை எடுத்து வைத்துக்கொண்டது குழந்தை.

முருகதாசர் காப்பியை ஆற்றி, சுந்தரம் கையில் ஒரு டம்ளரைக் கொடுத்தார்.

சுந்தரம் வாங்கி மடக்மடக்கென்று மருந்து குடிப்பதுபோல் குடித்துவிட்டு, "காப்பி வெகு ஜோர்!" என்று சர்டிபிகேட் கொடுத்தார்.

மற்றொரு டம்ளர் சுப்பிரமணிய பிள்ளையிடம் கொடுக்கப்பட்டது. "மாமா எனக்கில்லையா?" என்று அவரிடம் சென்று ஒண்டினாள் அலமு.

"வாடி, நாம ரெண்டு பேரும் சாப்பிடுவோம்!" என்றார் முருகதாசர்.

"மாமா கூடத்தான்!" என்றது குழந்தை. சுப்பிரமணியபிள்ளை கையிலிருந்த டம்ளரில் அலமுவைக் குடிக்கச் செய்தார்.

பாதியானதும், "போதும்" என்றது குழந்தை.

"இந்தாருங்க ஸார்!" என்று மற்ற டம்ளரையும் நீட்டினார் முருகதாசர்.

"வேண்டாம்! வேண்டாம்! இதுவே போதும்" என்றார் சுப்பிரமணிய பிள்ளை.

"நான்சென்ஸ்" என்று சொல்லி விட்டு, குழந்தை எச்சிற்படுத்தியதைத் தாம் வாங்கிக்கொண்டார் தாசர்.

"நேரமாகிறது, மவுண்டில் ஒரு நண்பரைப் பார்க்க வேண்டும்!" என்று எழுந்தார் சுந்தரம். "அதற்குள்ளாகவா? வெற்றிலை போட்டுக்கொண்டு போகலாம்!" என்றார் முருகதாசர்.

"கையில் எடுத்துக்கொண்டேன். நேரமாகிறது! அப்புறம் பார்க்கிறேன்." என்று சொல்லிக் கொண்டு வெளியேறினார் சுந்தரம்.

கையில் இருந்த புகையிலையை வாயில் ஒதுக்கிவிட்டு, சிறிது சிரமத்துடன் தமக்கு நேரமாவதைத் தெரிவித்துக்கொண்டார் சுப்பிரமணிய பிள்ளை.

தொண்டையைச் சிறிதுகனைத்துக்கொண்டு, "சுப்ரமணியம் உங்களிடம் ஏதாவது சேஞ்ஜ் இருக்கிறதா? ஒரு மூன்று ரூபாய் வேண்டும்!" என்றார் முருகதாசர்.

"ஏது அவசரம்!"

"சம்பளம் போடலே; இங்கு கொஞ்சம் அவசியமாக வேண்டியிருக்கிறது. திங்கட்கிழமை கொடுத்து விடுகிறேன்!"

"அதற்கென்ன?" பர்ஸை எடுத்துப் பார்த்துவிட்டு, "இப்போ என் கையில் இதுதான் இருக்கிறது." என்று ஓர் எட்டணாவைக் கொடுத்தார் சுப்பிரமணியம்.

"இது போதாதே" என்று சொல்லி, அதையும் வாங்கி வைத்துக்கொண்டார் முருகதாசர்.

"அப்பொ..." என்று மீண்டும் ஆரம்பித்தார்.

"பார்ப்போம்! எனக்குக கொஞ்சம் வேலையிருக்கிறது" என்று சுப்பிரமணியமும் விடைபெற்றுச் சென்றார்.

முருகதாசர் தமது ஆஸ்தான அறையின் சிம்மாசான பழைய கோரைப் பாயில் உட்கார்ந்துகொண்டு, அந்த எட்டணாவைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டு, நீண்ட யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

"அங்கெ என்ன செய்யிறீங்க?" மனைவியின் குரல்!

"நீதான் இங்கே வாயேன்!"

கமலம் உள்ளே வந்து, "அப்பாடா!" என்று உட்கார்ந்தாள். அவர் கையில் இருக்கும் சில்லறையைப் பார்த்துவிட்டு, "இதேது?" என்றாள்.

"சுப்பிரமணியத்திடம் வாங்கினேன்!"

"உங்களுக்கும் வேலையில்லையா?" என்று முகத்தைச் சிணுக்கினாள் கமலம். பிறகு திடீரென்று எதையோ எண்ணிக்கொண்டு, "ஆமாம், இப்பத்தான் நினைப்பு வந்தது. நாளைக்குக் காப்பிப் பொடியில்லை, அதெ வச்சு வாங்கி வாருங்களேன்!" என்றாள்.

"அந்தக் கடைக்காரனுககாக அல்லவா வாங்கினேன்! அதைக் கொடுத்துவிட்டால்!"

"திங்கட்கிழமை கொடுப்பதாகத் தானே சொன்னீர்களாம்!"

"அதற்கென்ன இப்பொழுது!"

"போய்ச் சீக்கிரம் வாங்கி வாருங்கள்!"

"திங்கட்கிழமைக்கு!"

"திங்கட்கிழமை பார்த்து கொள்கிறது!"

(முற்றும்)

---

திடுக்-திகில்-தித்திப்பு 4

# Yகில்?

தமிழ்தாசன்

"இது அரசாங்கப் பிரச்சினை. இந்தக் கேஸை பொலிஸ்தான் டீல் பண்ண வேணும். இதில நான் தலையிட்டா சிக்கல் எழாதா?" ரேகா கேட்டதும் சரியென்றே பட்டது.

எனவே- இன்ஸ்பெக்டர் ரிஷி மௌனமானார். தன் கூடப்பிறந்த சகோதனான ரிஷியின் முகவாட்டத்தை ரேகாவினால் ஜீரணிக்க முடியவில்லை. எனவே- இன்னும் நெருக்கமாக அமர்ந்து- இந்தக் கேஸ் விஷயமா ஒரு சின்னத் துரும்பு கூடவா உங்களுக்குக் கெடைக்கலே? என்று கேட்டாள்.

"இல்லே... ஆனா, நேற்றிரவு ஷாம் எங்கிற ஒரு ஆள் தன் மனைவியோட புலிக்காட்டுப் பக்கம் போகேக்க ஒரு விசித்திர அனுபவம் அவருக்கு கிடைச்சிருக்கு...!"

விபரமாக எல்லாவற்றையும் சொன்னார் ரிஷி.

"ஸோ... அந்த சடலம் மந்திரி மகாதேவனோட பொண்ணோட சடலமாக இருக்கலாமுன்னு சந்தேக்கப்படுறீங்க; அப்படித்தானே...?"

"சந்தேகமுன்னு இல்லே. ஆனா ஒரு சின்ன முடிச்சைப் போட்டுப் பார்க்கிறேன். தட்ஸ் ஓல்!"

கொஞ்ச நேரம் யோசித்த ரேகா-

"ஓ.கே. நான் வேணும்னா புலிக்காட்டு சம்பவத்தை விசாரிக்கிற பொறுப்பை ஏத்துக்கிறேன்; அப்புறம் அதுக்கும மந்திரி பொண்ணு விவகாரத்துக்கும் தொடர்பு இருக்குங்கிறது தெரிஞ்சா- நீங்க கேஸை கன்டினியூ பண்ணுங்க!" ரிஷி சந்தோஷமானார். ரேகாவின் அபார திறமையில் அவருக்கு முழு நம்பிக்கை இருந்தது.

"விசாரணையை எப்ப ஆரம்பிக்கப் போறே...?"

"இன்னிக்கே, இப்பவே!" என்ற ரேகா-

"என்னோட விசாரணைக்குரிய முதல் நபர்- நீங்கதான்!" என்றாள்.

"நான் ரெடி!" என்றார் ரிஷி. ஷாமும், சாருவும் தங்களுக்கு நேர்ந்த அனுபவங்களைச் சொன்ன விதம் தொடக்கம்- அவர்கள்- பொலிஸ் ஸ்டேஷனிலிருந்து புறப்பட்டு போனது வரை ஒன்று விடாமற் கேட்டறிந்தாள் ரேகா.

"குட்... பொலிஸ் ஸ்டேஷனிலிருந்து ஷாமும் சாருவும் அவங்க காரிலதானே போனாங்க...?"

"ம்... நான் அதைச் சரியாய்க் கவனிக்கலே ரேகா...!"

"என்ன இன்ஸ்பெக்டர் நீங்க? நேத்து ராவு ஸ்டார்ட் வராத கார் காலையில ஸ்டார்ட் ஆகி பொலிஸ் ஸ்டேஷன் வந்திருக்கு. அப்புறம் அது எவ்விதப் பிரச்சினையும் இல்லாம ஸ்டார்ட் ஆகிப் போச்சுதா இல்லியான்னு தெரிஞ்சுக்காம... என்ன பண்ணுறீங்க நீங்க?"

"வந்து... மந்திரியைச் சந்திக்கிற அவசரத்தில...!" என்று இழுத்த ரிஷி- கைத்தொலைபேசியெடுத்து பொலிஸ் நிலையத்திற்குப் பேசினார்.

*****

தனது காரில் ஷாமையும் சாருவையும் கொண்டு அவர்களது வீட்டில் இறக்கிய ரமேஷ்-

"நான் சாயந்தரம் வந்து உங்களைப் பார்க்கிறேன்!" என்று கூறிப் போனான்; வாசல் வரை போனவன் பின்னர் திரும்பி வந்து

"இன்ஸ்பெக்டர் என்னைப் பத்தி ஏதும் விசாரிச்சாரா?" என்று கேட்டான்.

"ஆமா ரமேஷ். ஹனிமூன் போற விஷயம் வேற யாருக்குத் தெரியுமுன்னு கேட்டார். ரமேஷுக்குத் தெரியுமுன்னேன்; எனக்கு சுவீப் பரிசு கிடைச்ச விஷயம் யாருக்குத் தெரியுமுன்னு கேட்டார். ரமேஷுக்குத் தெரியுமுன்னு சொன்னேன்!" என்றான் ஷாம். இரண்டு நாட்கள் ஷேவ் செய்யப்படாத தன் முகவாயைத் தேய் தேயெ ன்று தேய்த்துக் கொண்ட ரமேஷ்-

"ஓகேடா, பரவாயில்லை!" என்று கூறிக்கிளம்பிப் போனான். அவன் போன அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் ஷாமின் வீட்டு டெலிபோன் ஒலி த்தது. எடுத்து காதில் பொருத்தி-

"ஹலோ!"

"ஹலோ... நான் இன்ஸ்பெக்டர் ரிஷி பேசுறேன்...!"

"ஹலோ சார்... நான் ஷாம் பேசுறேன்!"

"ஆமா... உங்க கார் பொலிஸ் ஸ்டேஷனிலேயே கெடக்குதே... நீங்க எப்படிப் போனீங்க?"

"காலை கார் திரும்பவும் ஸ்டார்ட் ஆகலே சார். நல்லவேள்- என்னோட நண்பன் ரமேஷ் வந்தான், அவனோட காரிலதான் வந்தோம்!" அதிர்ந்தார் இன்ஸ்பெக்டர்.

"ஆமா... நீங்க பொலிஸுக்கு வந்த விபரம் ரமேஷுக்கு எப்படித் தெரியும்?"

"அந்த வழியால போய்க்கிட்டிருந்தானாம். என்னோட கார் பொலிஸ் ஸ்டேஷனுக்குள்ளே நிற்கிறதைப் பார்த்திட்டு, வந்தானாம்!"



"தினமும் இந்த நேரத்தில ரமேஷ் பொலிஸ் ஸ்டேஷன் வழியாப் போவாரா?"

"தெரியலே சார்...!"

"அதாவது- பொலிஸ் ஸ்டேஷன் வழியாகப் போய்த்தான் அவர் ஆபீஸ் போகனுமா?"

"இல்ல சார், அவனோட வீட்டிலிருந்து ஆபீஸ் போறதுன்னா பொலிஸ் ஸ்டேஷன் பக்கம் போக வேண்டிய தேவை இல்லை...!"

"அப்போ... இன்னிக்கு மட்டும் இந்த வழியால போக வேண்டி என்ன தேவை வந்ததாம்?"

"தெரியலே சார்... நான் அதைப் பத்திக் கேட்கல...!"

"ரமேஷ் உங்க வீட்டில இருக்கிறாரா?"

"இல்ல சார்... எங்களை ட்ராப் பண்ணிட்டுப் போயிட்டான்...!"

"ரமேஷ் எங்க போறதா சொன்னார்?"

"ஆபீஸுக்குப் போறதாய்த்தான் சொன்னான். ஆனா, இன்னிக்கு சாயந்தரம் இங்க வர்ரதாகவும் சொன்னான்!"

"உங்க ஆபீஸ் நம்பர் தர முடியுமா?"

"யேஸ் சார்...!"

ஆபீஸ் நம்பர் கொடுத்தான் ஷாம்.

"ரமேஷோட ஹேண்ட்போன் நம்பரையும் தாங்க!"

கொடுத்தான்.

"நான் உங்களுக்கு கோல் பண்ணி ரமேஷ் பத்தி விசாரிச்சதா நீங்க அவர்கிட்ட எக்காரணம் கொண்டும் சொல்ல வேண்டாம். அண்டர்ஸ்டாண்ட்?"

"ஓ.கே. சார்... பட் வன் திங் சார்! ரமேஷ் ரொம்ப நல்லவன் சார். பத்து வருசத்துக்கு மேல நானும் ரமேஷும் பிரெண்ட்ஸ் சார்...!"

"ஷட் அப்...! இது விஷயமா கருத்துக் கேட்கிற நிலமையில நான் இல்ல!" போன் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

(மர்மம் தொடரும்)

Registered as a News Paper in Sri Lanka.


































இப்பத்திரிகை 3A, தர்மராஜ மாவத்தை, கொழும்பு 03 - மில்லேனியம் அட்வர்டைசிங் என்ட் பிரின்டர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.